விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 18 திங்கட்கிழமை (04.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 350

## 243 சபைகளுக்கான வேட்பு மனு அறிவிப்பு இன்று வெளியிடப்படும்




(கொழும்பு)

243 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களை கோரும் அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (மு)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சைக்கிள் சின்னத்திலேயே போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது இடம்பெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் பொது அமைப்புக்களுடன் இணைந்து வடக்கு கிழக்கு முழுவதும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சின்னமான சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளது.

அத்துடன் தம்மோடு இணைந்து செயற்படுபவர்களையும் இணைத்துக் கொண்டு செயற்படவுள்ளதாகவும் அக் கட்சியானது அறிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் பொது எதிரணியொன்று களமிறங்க உள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரும் தமிழ் மக்கள் பேர 23

## பெப்ரவரி 10-ம் திகதி உள்ளூராட்சி தேர்தல் பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதிக்கு பின்னர் வரும் 23

# ஐ.நாவின் மூவரணி இன்று இலங்கை வருகை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் மூவரடங்கிய குழுவொன்று இன்று இலங்கையை வந்தடையவுள்ளது. தன்னிச்சையான தடுத்து வைப்புக்கள் குறித்து ஆராயவுள்ள இந்தக் குழுவினர் சிறைச்சாலைகள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் இளம் குற்றவாளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கும் செல்லவுள்ளதென கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் தெரிவித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## யாழைச் சேர்ந்தவரின் 45 பவுண் தங்கம் அரசுடமையானது

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி சுமார் 45 பவுண் எடையுடைய 19 தங்கக்கட்டிகளை மலேசியாவிலிருந்து கடத்திவந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் 24

## புதையல் தோண்டிய ஐந்து பேர் கைது

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் - வசமே முன்னியன் கட்டுவன பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பிரதேச ஊழல் எதிர்ப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய நேற்று முன்தினம் இரவு குறித்த 23

## உதய சூரியன் சின்னத்தில் களமிறங்க ஈ.பி.ஆர்.எல்.எவ் முடிவு

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட பரந்துபட்டவர்களிடத்தில் எந்தவிதமான கொள்கை வேறுபாடுகளும் இல்லை. ஆனால் தமிழரசு கட்சியே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு விரோதமாக செயற்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையில் இருந்து விலகிச் சென்று, மக்கள் தொடர்பில் தவறான முடிவுகளை எடுக்கும் தமிழரசு கட்சிக்கு எதிராக தேர்தலில் பொது கூட்டமைப்பு நிச்சயம் 23

## பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை பதிய வடக்கு மக்களுக்கு விழிப்புணர்வு போதாது!

### பொலிஸ் ஆணைக்குழு பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பொலிஸாருக்கு எதிராக பொதுமக்களால் கடந்த 11 மாதங்களில் 48 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன். அதில் 39 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வடமாகாண பணிப்பாளர் எஸ்.சண்முகரட்ணம் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை பதிவு செய்வது தொடர்பில் வடக்கு மக்களுக்கு போதியளவு விழிப்புணர்வு இல்லை 23

## கொக்குவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலில் நீர் கலப்படமா!

(கொக்குவில்)

யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில், டீசலில் நீர் கலந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இதுதொடர்பிலான ஆய்வு பரிசோதனைகளை முன் 23

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமான அணியாக போட்டியிடும்

### மாவை நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் முன்னாள் போராளிகள் மற்றும் சில இயக்கங்களை இணைந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது பலமான ஓர் அணியாக போட்டியிடவுள்ளதாக கூட்டமைப்பின் பங்காளி 23

## அடிப்படைவாதிகளுடன் உடன்பாடுகள் இல்லை

### அமைச்சர் ராஜித திட்டவட்டம்



(கொழும்பு)

அடிப்படைவாதிகளுடன் இடைநடுவில் உடன்படிக்கைகளுக்கு செல்லாமல் நல்லாட்சியை முன்னெடுத்துச்செல்ல அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் 05

## யாழில் போலி விமானச்சீட்டு வழங்கிய முகவருக்கு வலை வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிநாட்டு பயண முகவர் நிறுவனம் ஊடாக போலியான விமான பயண சீட்டு கொடுக்கப்பட்டு இந்தியா செல்லவிருந்த பயணி ஒருவரிடம் ஓர் இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட் 23

## ஊடகவியலாளர் மீது சாவகச்சேரியில் தாக்குதல்

(சாவகச்சேரி)

யாழ்.சாவகச்சேரி பகுதியில் முச்சக்கர வண்டியில் வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் ஊடகவியலாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை குறித்த ஊடகவியலாளர் சாவகச்சேரியில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று 23

## இ.போ.ச. பேருந்து மீது தாக்குதல் ஐவர் கைது!


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மீது கல்வீசித் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 5 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனகராயன் குளம் பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது அது தொடர்பில் 23

# மரண அறிவித்தல்கள்

## அருட்சகோதரி சந்தியாப்பிள்ளை ஜொசப்பின்



கரவெட்டியை பிறப்பிடமாகவும் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தை வதிவிடமாகவும் கொண்ட அருட்சகோதரி சந்தியாப்பிள்ளை ஜொசப்பின் 03.12.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை (இராசையா)-மரியமுத்து ஆகியோரின் பாசமிகு மகளும், அக்கினேஸ்மங்களம், அன்ரன் செல்வராசா (Modean Store Nelliady), பிளோமினா (ஜேர்மனி), மேரிஎம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பற்றிக் துரைராஜா, மெலனி, யோகராஜா, மனோகரன், அருட்சகோதரி, ஜோலண்ட் (திருக்குடும்ப கன்னியர் மடம்-பாசையூர்), அருட்சகோதரி யூடிற் (கார்மேல் சபை-பொரளை), அருட்பணி S.V.B மங்களராஜா (குருமடம் பாசையூர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜோய் (கனடா), ருக்மனி (கனடா), பேட்டி (பிரான்ஸ்), ஆனந்தி (பிரான்ஸ்), டிலானி (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்), ஜோயல் (Jo Enterprise Jaffna), துஷியந்தி, டனீஸ்வரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்-Jaffna)), ஆரனி (ஆசிரியை), பவன்ராஜ் (Modean Store Nelliady), சேளிப்பிரதீபா, பால்ராஜ் (சுவிஸ்), டானியல் (ஜேர்மனி), சோபினி, உமாகரன், ஜேம்ஸ் (James Printer's Nelliady), ரூபின் (சவேரியார் குருமட மாணவன்-கொழும்புத்துறை), எசாந்தியா, ஜெயன், அருட்சகோதரி திரேஸ் (அன்பு பணியாளர் சபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜோனா, ஜெனிபர், அன்ரியா, ரெய்ஷியா, அஸ்வின், அமிகாதனிஷா, எல்டன், தருன், சேலி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் பிற்பகல் 3 மணியளவில் திருக்குடும்ப கன்னியர்மடத்தில் (இளவாலை) திருப்பலி பூசையுடன் நடைபெற்று நல்லடக்கத்திற்காக இளவாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:-

திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை 0776307760, 0772543253

(சி-587)

## திருமதி சுப்ரமணியம் சாந்தினி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 07 - 1960 | 02 - 12 - 2017 |



ஏழாலை மேற்கு ஏழாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்ரமணியம் சாந்தினி கடந்த 02.12.2017 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்ரமணியம் அவர்களின் பாசமிகு அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று 04.12.2017 திங்கட்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மந்தி உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்
சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(சி-584)


## வேலைவாய்ப்பு

நோயாளர், முதியோர் பராமரிப்புக்கு ஆண்/பெண் தேவை.

அழையுங்கள்:-
0778730129

(1564)



## அதிபர், ஆசிரியர்களுக்கு...

தரம்-1 தொடக்கம் 11 வரை (1-3 புதிய பாடத்திட்டம்) பாடப்பதிவு, பாடக்குறிப்பு புத்தகங்கள் வெளிவந்து விட்டன. உடன் பெற்று கொள்ளலாம்.

(1565)

தயா அச்சகம்

575, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 0773965214




வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கில் வசித்து தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை 02.12.2017 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சிரோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பரமகுரு, சின்னத்தம்பி, பொன்னம்மா, சோதிப்பிள்ளை, அல்லிமலர், சிவகுரு ஆகியோரின் சகோதரரும், ஞானகணேசன் (பிரதேச மின் பொறியியலாளர்-யாழ்.பிரதேசம்), Dr.ஞானபாஸ்கரன் (கனடா), ஞானாம்பாள் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தினி, அஜந்தா (கனடா), கணேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், ரஜீவன், ஷர்மி, அஸ்வின், சோபிதா, ஹம்சினி, அபிஷேக், அகல்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-ச.ஞானகணேசன் (மகன்-0777376450)
Dr.ஞானபாஸ்கரன் (மகன்-கனடா-0019055342079)
நவரட்ணராஜா வீதி, கோண்டாவில்.

(1563)


RAVEENS EMC-KARAVEDDY
ENGLISH MEDIUM ADMISSION-2018

■Limited Vacancies are available For Grade 7,8,9 Only

| Grade | Number of Vacancies |
|---|---|
| 7 | 2 Boys, 1 Girl |
| 8 | 1 Boy |
| 9 | 1 Boy, 1 Girl |

021 226 3321

■Scholars are only entitled
■DON'T MISS THE FORTUNE

P.Easwaranathan
BSc. (Hons) Agric Dip.in Edu
Director

(C-581)


# மரண அறிவித்தல்

## துரைசாமி நீதிராசா (நீதிமாமா)



யாழ்.பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் இல.05, D8 உருத்திரபுரத்தை வதிவிடமாகக் கொண்டவருமான துரைசாமி நீதிராசா (நீதிமாமா) அவர்கள் 02.12.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05.12.2017 நாளை செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உருத்திரபுரம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.05, D8,
உருத்திரபுரம்.

தகவல்:-
குடும்பத்தினர்

(சி-583)

# நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்சி அரசியலை ஒதுக்க வேண்டும்

## அமைச்சர் அர்ஜுன வலியுறுத்து



(கொழும்பு)

கட்சி வேறுபாடின்றி அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து எதிர்காலத்தை நோக்கிச் செல்வதே நாட்டுக்குச் சிறந்ததாகும் எனச் சுட்டிக்காட்டிய பெற்றோலிய வளங்கள் அபிவிருத்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்க இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்சி அரசியலை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அலுத்கம பள்ளியகொடல்ல சிறிசுமங்கலராம விகாரையில் நேற்று இடம்பெற்ற "கமே பன்சல கமட சவியக்" நிகழ்விலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தைப்போன்று சிறிய அரசாங்கத்தையும் நாம் அறிமுகப்படுத்திக் கொடுப்போம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாடு என்ற ரீதியில் செயற்படவேண்டும். அது பிரதேச சபை என்றோ, நகர சபை என்றோ, மாநகர சபை என்றோ, பிரித்து பார்க்க முடியாது.

அவ்வாறு செய்தால் அரசியல் செய்பவர்கள் நாட்டை அழிப்பதற்கு சமன். இது கடந்த காலங்களில் இடம்பெற்றது.

ஆனால் 2015ஆம் ஆண்டுக்குப் பின் நாங்கள் அரசாங்கத்தை அமைத்த பின்பு சிறந்த வழிவகைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

அதை நடைமுறைப்படுத்தும் போது சில சில குறைபாடுகளும் ஏற்படும். அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து தொடர்ந்து செல்வதே மிக முக்கியமான வேலையாகும் என மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஒகி சூறாவளியை விட மகிந்த சூறாவளியின் பாதிப்புகள் அதிகம்

### ஐ.தே.க. அமைச்சர் ஹரிசன்



(கொழும்பு)

ஒகி சூறாவளியைவிட மகிந்த ராஜபக்ஷவினால் ஏற்படுத்தப்பட்ட சூறாவளியினாலேயே நாட்டுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட்டன என்பதை ஞாபகப்படுத்துவதாக கிராமிய பொருளாதார விவகார அமைச்சர் பீ. ஹரிசன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஒன்றிணைய வேண்டும் எனப்பலரும்கருத்துதெரிவித்து வருவது தொடர்பில் ஹரிசனிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யார் என்ன கூறினாலும் அரசாங்கம் என்ற வகையில் நாம் எமது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வோம். நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 70 வீதமான வெற்றி எமக்கு கிடைக்கும் என்பதில் நாம் நம்பிக்கையுடன் காணப்படுகிறோம்.

அதேவேளை, எந்த சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகுவதற்கான எண்ணம் தனக்கு இல்லையென்றும், எந்த ஒரு சூழ்நிலையிலும் புதிய அரசியல் கட்சியொன்றில் இணையப் போவதில்லை என்றும் உறுதியாகக் குறிப்பிட்டார்.

மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து வினவிய போது, உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெறுவது உறுதி என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மகிந்தவுடன் கூட்டு இல்லை தனித்து போட்டியிடத் தயார்

### சுதந்திரக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சிசபை தேர்தலில் தனித்து போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாக மேல்மாகாண முதலமைச்சர் இசுறுதேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாதிவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகாங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய சூழலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதற்கு தயார் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் உள்ளூராட்சி சபைகளை வெற்றிக் கொள்ள மகிந்த அணி பல சுவாரஸ்யமான கதைகளை கூறி கனவு காணுவதாகவும், அந்த கனவு ஒருபோதும் நனவாகாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## தேசிய நலன்களை அடகுவைக்கும் கைங்கரியத்தில்தான் ஊடகங்கள்

### அமைச்சர் மனோ விசனம்

(கொழும்பு)

சகவாழ்வு, தேசிய நல்லிணக்கம், புரிந்துணர்வு என்ற பட்டியல் மறைக்கப்பட்டு வடக்கே தேசியக் கொடி, தெற்கே இனக்கலவரம், வெள்ளப்பெருக்கு, தேர்தல் எல்லை நிர்ணயம், மத்திய வங்கிபிணை முறி மோசடி, அமைச்சர்களின் ஊழல் என்று புதிய புதிய பிரச்சினைகளை முன்வைத்து அதிகமான ஊடகங்கள் தேசிய நலன்களை அடகு வைக்கும் கைங்கரியத்தை செய்வதாக ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோகணேசன் தெரிவித்தார். கண்டி மல்வத்தை பீட மகாநாயக்கத் தேரர் வண. திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீ சுமங்கல தேரரை நேற்று சந்தித்த பின் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

இன்று சமூகத்தின் முக்கிய பேசுபொருளாக இருக்க வேண்டிய இன நல்லிணக்கம், சக வாழ்வு என்பன சில ஊடகங்களில் பின்னோக்கி, கீழ் தள்ளப்பட்டுள்ளன. ஆனால் வேறு வகையான புரளிகள் மேலே உயர்த்திக்காட்டப்பட்டுள்ளன.

வடபகுதி தேசியக் கொடி, அமைச்சர்கள் மேற்கொண்டதாகப் பிரசாரம் செய்யும் ஊழல் பிரச்சினை, மத்திய வங்கி முறி, பெற்றோலியப் பிரச்சினை போன்ற பல விடயங்கள் பெரிதுபடுத்தப்பட்டு தேசிய நல்லிணக்கத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் செய்திகளையே கொடுப்பது கவலைதரும் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. ஆனால் தேசிய நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவது எனது கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக நான் முழு மூச்சுடன் போராடுகின்றேன்.

அடுத்த வருடம் நாட்டிலுள்ள சகல அரச காரியாலயங்களிலும் தமது தாய்மொழியில் தொடர்பு கொள்ளும் முறை அமுலாக்கப்பட்டுவிடும். ஏனெனில் விசேட வேலைத் திட்டங்களின் கீழ் சிங்கள அதிகாரிகளுக்கு தமிழும், தமிழ் அதிகாரிகளுக்கு சிங்களமும் கற்பித்து வருகிறோம். இதற்காக மொழி தொடர்பான அதிகாரிகள் 3000 பேர் நியமிக்கப்படவுள்ளனர். முதற்கட்டமாக உடனடியாக 500 பேர் நியமிக்கப்படுவார்கள். அதற்கென விசேட மொழிப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்படவுள்ளன. எனவே இன்னும் சில வாரங்களில் அரச காரியாலயங்களில் மொழிப் பிரச்சினை இருக்காது. எல்லாம் தீர்ந்துவிடும். அதற்கான வேலைத் திட்டம் மிகக் கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனெனில் குடிமக்களுக்கு தமது தாய்மொழியில் தமது தேவைகளைக் கேட்கும் உரிமை உண்டு. அதனை நாம் ஏற்படுத்தவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்த அரசாங்கத்திற்கு எதிரான ஒரே சக்தியாக ஸ்ரீ.பொதுஜனமுன்னணி

### பசில் ராஜபக்ஷ கூறுகிறார்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான ஒரே சக்தியாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உருவாகியுள்ளதாக முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அரசாங்கத்திற்கு எதிரான ஓர் சக்தியாக நாம் உருவாகியுள்ளோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடத் திட்டமிட்டுள்ளோம்.

தேர்தலில் வெற்றியீட்ட முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பதுளை மாவட்டத்தில் வெற்றியீட்ட இடமளிக்கப்படாது என அவர் தெரிவித்தார். (இ-7)


**சிறுநீரக நோய்களுக்குச் சிகிச்சை**
**Ayurvedic Treatment for Renal Diseases**

சிறுநீர் குறைவாகவும், வலி மற்றும் எரிச்சல் கடுப்புடன் வெளியேறல். ஆரம்ப நிலை சிறுநீரக செயலிழப்பு நிலை (Renal Failure in Primary Stage). சிறுநீரகம், சிறுநீர்பை இவற்றில் கற்கள் காணப்படுதல் (Stone in the Kidney & Bladder) கற்கள் காரணமாக ஏற்படும் வயிற்று வலி, சிறுநீர்த் தடை, இரத்தம் கலந்த சிறுநீர் வெளியேறல் மற்றும் ஆண்களில் ஏற்றபடும் புரஸ்தகோள (Enlargement of the Prostate gland) பிரச்சினைகள் போன்றவற்றால் சிறுநீர் கழிப்பதில் தாமதம், தடை, அடிக்கடி வெளியேற்றும் உணர்வு மற்றும் சிறுநீர்த்தொற்று (Urine Infection), கீழ்வயிற்று வலி, நித்திரை மற்றும் மனக்குழப்பம் போன்ற பிரச்சினைகளுக்கு சித்த ஆயுள்வேத முறையில் சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (Ind)
Regd - (7956,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251



**தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களே! வாங்கிவிட்டீர்களா?...**

**புகழ் புலமைப்பரிசில் வழிகாட்டி**

புகழ்

- விற்பனையில் உள்ள புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்களில் பகுதி I, பகுதி II வினாப்பத்திரங்களுக்கான முழுமையான விடயப்பரப்பைத் தாங்கிவரும் ஒரே ஒரு வழிகாட்டி நூல்.
- பகுதி I இல் அடங்கும் 14 தேர்ச்சிகளுக்கான விளக்கங்களுடன் 300ற்கும் மேற்பட்ட பயிற்சி வினாக்கள்
- பகுதி II இல் அடங்கும் தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், பொது அறிவு மற்றும் வர்ணப் படங்கள்
- 2000 புள்ளிகளுக்கான விடயங்களைத் தாங்கிய ஒரே ஒரு வழிகாட்டி - "புகழ்" புலமைப்பரிசில் வழிகாட்டி.

(1551)

ஆக்கம் : புகழ் வெளியீட்டாசிரியர் லோ.விஜேந்திரன்


தொடர்புகளுக்கு :-
Lanka Book Depot, Colombo.
T.P : 0773911998, 0112341942

புகழ் பப்ளிகேசன், யாழ்ப்பாணம்.
T.P: 0774 118550

அனைத்து பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

## அறிமுகப் போட்டியில் கன்னிச் சதமடித்து கலக்கினார் பிளண்டெல்

# பிராத்வைட், ஹெட்மியர் அரைச்சதங்களால் தீவுகள் போராட்டம்



வெலிங்டன் டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில், மேற்கிந்தியத் தீவுகளின் பிராத்வைட், ஹெட்மியர் அரைச்சதம் கடந்தனர். ரொம் பிளண்டெல் அறிமுகப போட்டியில் கன்னிச் சதமடித்து கைகொடுக்க, முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 520 ஓட்டங்கள் குவித்தது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள், அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் கடந்த 1 ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமானது. முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் 134 ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று முன்தினம் 2 ஆம் நாள் முடிவில், முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 447 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பிளண்டெல் (57), போல்ட் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பிளண்டெல் சதம்**

நேற்று 3ஆம் நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்தின் பிளண்டெல், போல்ட் ஜோடி பொறுப்பாக ஆடியது.

இப்போட்டியில் அறிமுகமான விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ரொம் பிளண்டல் கன்னிச் சதமடித்து அசத்தினார்.

இதன்மூலம் நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 520 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பிளண்டெல் (107), போல்ட் (18) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் கீமர் ரோச் 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

**நல்ல ஆரம்பம்**

பின் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு கிரெய்க் பிராத்வைட், கைரன் பாவெல் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது.

முதல் விக்கெட்டுக்கு 72 ஓட்டங்கள் சேர்த்தபோது, மட் ஹென்றி பந்தில் பவெல் (40) ஆட்டமிழந்தார். பின் இணைந்த பிராத்வைட், ஷிம்ரான் ஹெட்மியர் ஜோடி பொறுப்பாக ஆடியது.

நியூசிலாந்து பந்து வீச்சை எளிதாக சமாளித்த இவர்கள் இருவரும் அரைச் சதம் கடந்தனர்.

இரண்டாவது விக்கெட்டுக்கு 94 ஓட்டங்கள் சேர்த்த போது, மட் ஹென்றி 'வேகத்தில்' ஹெட்மியர் (66) வெளியேறினார். வோக்னர் பந்தில் ஷாய் ஹோப் பவுண்டரி அடிக்க, மேற்கிந்தியத் தீவுகள் 200 ஓட்டங்களை எட்டியது.

இந்நிலையில் நேற்றைய 3ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்குவர இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்கள் எடுத்து, 172 ஓட்டங்களால் பின்தங்கி உள்ளது.

பிராத்வைட் (79), ஹோப் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் மட் ஹென்றி 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

போட்டியின் 4ஆம் நாளாட்டம் இன்றாகும். இப்போட்டி இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

## சர்ச்சையை கிளப்பிய காற்று மாசுபாட்டுக்கு மத்தியில் விண்ணைத் தொட்ட ஹோலியின் இரட்டைச் சதம்

# டில்லியில் இந்தியா ஆதிக்கம்; இலங்கை தடுமாற்றம்

டில்லி டெஸ்டில் 'ரன் மன்னனாக' ஜொலித்தார் அணித் தலைவர் விராட் ஹோலி. இவரது கலக்கல் ஆட்டத்தைத் கண்கொட்டாமல் பார்த்த உள்ளூர் ரசிகர்கள் வியந்து போயினர்.



மீண்டும் ஒருமுறை இரட்டை சதம் கடந்த இவர், இந்திய அணிக்கு இமாலய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொடுத்தார். பின் களமிறங்கிய இலங்கை அணி, வழக்கம் போல தடுமாறியது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டிகளின் முடிவில், இந்தியா 1-0 என தொடரில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட், டில்லியில உள்ள பெரோஷா கோட்லா மைதானத்தில் நடக்கிறது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 4 விக்கெட்டுக்கு 371 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**ஹோலி அபாரம்**

நேற்று, இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இந்திய அணிக்கு அணித்தலைவர் ஹோலி, ரோகித் சர்மா ஜோடி நம்பிக்கை கொடுத்தது. அபாரமாக ஆடிய ஹோலி (243), டெஸ்ட் அரங்கில் 6ஆவது முறையாக இரட்டை சதமடித்தார். டில்ருவான் பெரேரா பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய ரோகித், டெஸ்ட் அரங்கில் தனது 8ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். 5ஆவது விக்கெட்டுக்கு 135 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது, சண்டகன் பந்தில் ரோகித் (65) ஆட்டமிழந்தார். முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 536 ஓட்டங்கள் எடுத்து, 'டிக்ளேர்' செய்தது.

**ஷமி அசத்தல்**

பின் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணிக்கு, முதல் ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது. மொஹமட் ஷமி வீசிய ஆட்டத்தின் முதல் பந்தில் கருணாரத்ன 'டக்-அவுட்' ஆனார். இஷாந்த் சர்மா 'வேகத்தில்' தனஞ்செய டி சில்வா (1) வெளியேறினார். ஜடேஜா 'சுழலில்' பெரேரா (42) சிக்கினார். மத்யூஸ் அரைசதத்தை பதிவு செய்தார். இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மத்யூஸ் (57), அணித் தலைவர் சண்டிமல் (25) ஆடடமிழக்காமல் இருந்தனர்.


தற்போது 405 ஓட்டங்கள் பின்தங்கியுள்ள இலங்கை அணி, தப்புவது கடினம்தான்.

**சர்ச்சையை கிளப்பிய மாஸ்க**

நேற்றைய நாளில்உணவு இடைவேளைக்குப்பின், இலங்கை வீரர்கள் 'மாஸ்க்' அணிந்து களமிறங்கி அதிர்ச்சி அளித்தனர். வேகப் பந்துவீச்சாளர் கமகே, மூச்சு திணறல் ஏற்படுவதாக தெரிவித்தார். அணித் தலைவர் சண்டிமல் ஆடுகள நடுவரிடம் காற்று மாசுபாட்டால் 'தொடர்ந்து விளையாட முடியாது' என தெரிவித்தார். போட்டி மத்தியஸ்தர் டேவிட் பூன், இலங்கை அணியினரை சமாதானம் செய்தார். இதனால், 17 நிமிடம் ஆட்டம் தடைபட்டது. மீண்டும் 127ஆவது ஓவரில் வேகப் பந்துவீச்சாளர் லக்மல் தடை போட்டார். கடைசி பந்தை மட்டும் வீச முடியாது என கைவிரித்தார். மீண்டும் அணித் தலைவர் சண்டிமல், மத்யூசிடம் நடுவர்கள் பேசினர். இதனால், ஆட்டத்தில் 5 நிமிடம்தடை ஏற்பட்டது.

**காரணம் என்ன?**

ஆண்டுதோறும் இப்படி காற்று மாசுபாட்டால் டில்லியே அலறுகிறது. இதற்கு முக்கிய காரணம் பஞ்சாப் மற்றும் அரியானா விவசாயிகள் என்பதுதான் வேதனையான விடயம். ஒக்டோபர் - நவம்பர் மாத இறுதியில் தேவை இல்லாத பயிர்களை எரித்து விடுகின்றனர்.



இதுதான், காற்றில் கலந்து டில்லிக்கு அச்சுறுத்தலாக மாறுகிறது.

**போட்டி நடக்குமா?**

காற்று மாசுபாட்டின் காரணமாக மீதமுள்ள மூன்று நாள் ஆட்டம் நடக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான தொடர் என்பதால், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இதில் தலையிடாது. இதனால, இலங்கை, இந்தியா கிரிக்கெட் அணி நிர்வாகிகள் அமர்ந்து பேசினால்தான பிரச்னை முடிவுக்கு வரும்.


# வேலைவாய்ப்பு

இலங்கையில் 22 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் எமது DMI Companyயின் கிளைகளில் பணி புரிய இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்

- முன் அனுபவம் அவசியமில்லை -
- 18 - 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை
- மருத்துவம் மற்றும் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
- குறுகிய காலத்தில் பதவியுயர்வு.
- தொழிலில் சிறப்புத்தேர்ச்சி பெறும்போது வெளிநாட்டில் பணி புரியும் வாய்ப்பு

➡ **நிர்வாக அதிகாரி** ➡ **செயல்திட்ட அதிகாரி**
➡ **அலுவலக உதவியாளர்** ➡ **மேற்பார்வையாளர்**

- மட்டுப்படுத்தப்பட்ட பதவி வெற்றிடங்களே உள்ளன.
- தகைமை O/L அல்லது A/L
- பயிற்சியின்போது 12000/= - 18000/= வரையில் பெற்றுக் கொள்ளலாம்.
- பயிற்சியின் பின்னர் அவர்களின் திறமைக்கேற்ப (+EPF, ETF) உள்ளடங்கலாக பெற்றுக் கொள்ளலாம். (1566)

மேலதிக தொடர்புகளுக்கு

**076 639 9954, 077 802 1371**



# 3ம் ஆண்டு நினைவுகளில்...

மலர்வு: 25 - 03 - 1942 உதிர்வு: 04 - 12 - 2014

**அமரர்**

**இராசசேகரம் சித்திவிநாயகம்**

**(சித்தி அண்ணா)**



ஐயா ஆண்டுகள் மூன்றோடிவிட்டன
உங்கள் நினைவுகள் எங்களுடன் உள்ளதையா!
எத்தனை ஜென்மங்கள் ஆனாலும்
உங்கள் மலர்வுகள் எமக்கு வேண்டுமையா!
எங்களுக்குள் கலந்துவிட்ட உம்மை
காலனும் வெல்ல முடியுமா ஐயா!

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்**
**ஊறணி, வல்வெட்டித்துறை.** (C-582)

# அடிப்படைவாதிகளுடன் உடன்பாடுகள் இல்லை

## அமைச்சர் ராஜித திட்டவட்டம்

(கொழும்பு)

**அடிப்படைவாதிகளுடன் இடைநடுவில் உடன்படிக்கைகளுக்கு செல்லாமல் நல்லாட்சியை முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**



அளுத்கம தர்கா நகர் சாஹிரா கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

பேருவளையில் இருக்கும் போதே எமது வாழ்க்கையில் சகவாழ்வு ஏற்பட்டது. இதன் பின்னர் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கல்வி கற்ற போது முஸ்லிம் பிள்ளைகளுடன் இணைந்து கல்வி கற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

1956 ஆம் ஆண்டு வரை நாட்டில் இனங்களுக்காக தனித்தனியாக பாடசாலை இருக்கவில்லை. இதனால், தேசிய சகவாழ்வு இருந்தது. பிற்காலத்தில் சரியான கல்வி கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு இனங்களுக்கான பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

இதன் காரணமாகவே சகவாழ்வு குறைந்து போனது. நாம் அனைவரும் மனிதர்கள். எனினும் இன, மதத்திற்கு முன்னுரிமை கொடுத்து மனிதர்களை புறந்தள்ளுகின்றனர். மத ரீதியான அடிப்படைவாதிகளை உருவாக்குகின்றனர்.

இதனால்,நாடு அழியும். இந்த அடிப்படைவாதத்தில் இருந்து இலங்கையை மீட்க வேண்டும். ஜனவரி 8 உறுதி மொழி அதுதான்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் சிறுபான்மையினர் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டனர். சிறுபான்மையினர் தம்மிடம் வந்து உதவிகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அன்றைய ஆட்சியாளர்கள் நினைத்தனர்.

இந்தியாவின் அசோக சக்கரவர்த்தி மற்றும் தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலாவை உதாரணமாகக் கொண்டு இது குறித்து நான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தெளிவுபடுத்தினேன். முன்னாள் ஜனாதிபதியை ஆசியாவின் நெல்சன் மண்டேலாவாக மாற்றும் தேவை எனக்கிருந்தது.


எனினும் அவர் ரொபர்ட் முகாபே பாத்திரத்தை தெரிவு செய்தார். நெல்சன் மண்டேலா உலகில் தோன்றிய யுக புருஷர். ஆனால் ரொபர்ட் முகாபே பொருளாதாரத்தை கொள்ளையடித்து மக்களின் எதிர்பார்ப்புகளை சிதைத்தார். முகாபேவை பதவியில் இருந்து தூக்கி எறிந்து இராணுவம் அதிகாரத்தை கைப்பற்றியது.

அடிப்படைவாதங்களால் நாடுகள் அபிவிருத்தியடைவதில்லை. வேற்று மதங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். இலங்கையர் என்ற தேசியத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

அடிப்படைவாதிகளால் தற்போது மத்திய கிழக்கு அழிந்து வருகிறது. அடிப்படைவாதிகளின் கருத்துக்கள் பொய்யானவை என்பது அறிவியல் ரீதியாக ஒப்புவிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

## 100 விவசாயக் கிணறுகள் புனரமைக்க நிதியுதவி





(யாழ்ப்பாணம்)

பீற்றா பவர் பிறைவேற் லிமிட்டெட் மற்றும் யூனிபவர் பிறைவேட் லிமிட்டெட் இன் வணிக நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த சமூக கடப்பாட்டு நிதியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு மூலமாக விவசாயக் கிணறுகள் புனரமைப்புக்காக தேர்வு செய்யப்பட்ட சுமார் 100 பயனாளிகளுக்கான காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பண்ணையில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா, மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், சுகிர்தன் மற்றும் இ.ஜெயசேகரம் ஆகியோருடன் மாகாண விவசாயப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர். (இ-89)

## பாடசாலை சீருடை வவுச்சர்கள் அடுத்த வாரம் பகிரப்படும்

### கல்வியமைச்சு தகவல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வவுச்சர்கள் அனைத்து மாகாணங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வவுச்சர்கள் எதிர்வரும் வாரங்களில் பாடசாலை மாணவர்களுக்கு கையளிக்கப்படும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

42 இலட்சத்திற்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்காக 2370 மில்லியன் ரூபா பெறுமதியான சீருடை வவுச்சர்களும், பிரிவேனாக்களில் உள்ள மாணவர்களுக்காக 75 மில்லியன் ரூபா பெறுமதியான வவுச்சர்கள் தற்போது விநியோகிக்கப்பட்டுளளன.

அவை எதிர்வரும் வாரங்களில் மாணவர்களின் கைகளில் ஒப்படைக்கப்படும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த சீருடை வவுச்சர்களின் மொத்த பெறுமதி 2445 மில்லியன் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது. (இ-7)

## இராசி பலன்

04.12.2017

(கார்த்திகை 18, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

பிரதமை முன்னிரவு 8.15 மணிக்கு

ரோகினி முற்பகல் 8.34 மணிவரை

சுபநேரம் 12.15-1.45 மணிவரை

இராகுகாலம் 7.45-9.15 மணிவரை

விநாயக விரதாரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| - | கிரகநிலை<br>சந்திராஷ்டமம் | | ராகு |
| கேது | அனுசம்<br>இரவு 7.23 மணி<br>மிது-சந் | | |
| | சனி,சுக்,<br>சூரி,புத | செவ்<br>குரு | |

**மேடம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு, மனக்குழப்பம் அகலும்.

**இடபம்:** வழிபாட்டில ஆர்வம் காட்டுவீர்கள், எந்தவொரு செயலையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பெரியோர் சந்திப்புண்டு.

**மிதுனம்:** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம், பயணத்தால் பலன் கிடைக்கும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், தேவையற்ற சஞ்சலங்கள் உருவாகும்.

**கடகம்:** வருமானம் பெருக வளம் காணும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு, முயற்சியில் முன்னேற்றமுண்டு.

**துலாம்:** பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம்.

**விருச்சிகம்:** உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சிந்தனைகள் தோன்றும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் உண்டு, தேகநலன் சீராகும்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புத்திரரால் பெருமையுண்டு.

**கும்பம்:** எண்ணங்கள் எளிதில் கைகூடும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும், உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.







நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் திருக் கார்த்திகை திருவிழா சிறப்பாக நேற்று முன்தினம் மாலை சிறப்பாக இடம்பெற்றது. மாலை 04.45 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையை அடுத்து வள்ளி தெய்வானை சமேதராக உள் வீதியுலா வந்த முருகப் பெருமான் திருக்கைலாய வாகனத்தில் ஆரோகணித் ததும், சொக்க பானைக்கு தீ மூட்டப்பட்டது. தொடர்ந்து முருகப் பெருமான் திருக்கைலாய வாகனத்தில் வெளி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் காட்சி வழங்கினார்.

(படங்கள்:- ஐ.சிவசாந்தன், காட்டுடை செய்தியாளர்)

## பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயத்தைச் சார்ந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை-2017 இல் கடமையாற்றும் பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 53 ஆவது நினைவுதினம் நாளை

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பெரியார் வி.வீரசிங்கத்தின் 53 ஆவது நினைவு தினம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன், வடக்கு மாகாண சபை கூட்டுறவு செயலாளர் ந.இன்பராஜ் மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. மோகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)




## மனித வாழ்வில் மன எழுச்சி இளையோருக்கு வதிவிட முகாம்

(யாழ்ப்பாணம்)

மனித வாழ்வில் மன எழுச்சி என்பது முக்கியம் பெறுகிறது. இளைஞர் வாழ்வில் சாதகமான மன எழுச்சியை உருவாக்குதல் சிறந்த பலனை தரக்கூடியது. இதனை செயற்படுத்துவதற்கு எனது மனம் எனது பலம் என்ற எண்ணக்கருவை கொண்ட இளைஞர்களுக்கான வதிவிட முகாம் ஒன்று சின்மயா மிஷனால் நடத்தப்படவுள்ளது. அதில் பங்கேற்பவர்கள் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி மூலம் மனநிலை, ஆளுமை விருத்தி, இலக்கு நிர்ணயம், தலைமைத்துவம், சிந்தனைப் பாங்கு, நேர முகாமைத்துவம், விட்டுக்கொடுப்பு, சகோதரத்துவம், மனவலிமை பெற்று தமக்கும் தாம் சார்ந்த வயதினருக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம் மூன்று நாள் வதிவிட முகாம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி (மாலை 4 மணி) தொடக்கம் 25 ஆம் திகதி (மாலை 4மணி) வரை நடைபெறவுள்ளது. இம் முகாமிற்கு 12-18 வயதுப் பிரிவினர் விண்ணப்பிக்கலாம். இம் முகாமிற்குரிய கட்டணமாக 600 ரூபா அறவிடப்படுகிறது. இம் முகாமில் அனைத்து இளைஞர்களும் பங்குபற்றி பயன்பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு 021 222 3447, 076 854 3153 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஆவணங்களுக்கான கட்டணங்கள் முதலாம் திகதியிலிருந்து மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜனநாயக குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக கொன்சியூலர் காரியாலயங்களின் (கொழும்பு தலைமையகம் மற்றும் யாழ். பிராந்திய அலுவலகம்) பணிகளுக்கான கட்டணங்கள் யாவும் டிசெம்பர் முதலாம் திகதியில் இருந்து மாற்றத்துக்குள்ளாகும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அறிவித்துள்ளார்.

கொன்சியூலர் பிரிவினால் வழங்கப்படும் ஆவணங்களான பரீட்சைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் பரீட்சை சான்றிதழ்களுக்குரிய கட்டணங்களாக 500 ரூபாவும், வெளிநாட்டு பிரஜை ஒருவருக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் எந்த ஆவணத்துக்கும் கட்டணமாக 1500 ரூபாவும், எந்த ஏற்றுமதி ஆவணத்துக்கும் கட்டணமாக 6000 ரூபாவும், பிற ஆவணத்துக்கு கட்டணமாக 800 ரூபாவும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் டிசெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)



கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வு சிறப்பாக பாடசாலை அதிபர் திருமதி புஸ்பராணி சந்திரராசா தலைமையில் நடைபெற்றது. மகாதேவா சுவாமிகள் மண்டபத்தை பாடசாலையின் பழைய மாணவர், பேராசிரியர் பொன்.பலசுந்தரம்பிள்ளை மற்றும் வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் ஸ்ரீசிவகுருநாதபீட ஸ்ரீமத் வேதவித்தியா சாகரர் சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

## பிள்ளையார் கதை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


யாழ். வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று (04.12.2017) திங்கட்கிழமை தொடக்கம் தினமும் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி விசேட பூஜைகளுடன் பிள்ளையார் கதை படிப்பும் 23.12.2017 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மஹா கணபதி ஹோமமும் 24.12.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி விசேட பூஜையுடன் பெருங்கதை படிப்பு பூர்த்தியாகும். (இ)

## கலாசார விழா நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலாசார விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி பீற்றோ மண்டபத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான பொ.தயானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி பா.அபிராமி மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய முகாமையாளர் கி.கந்தவேள் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-107)




பாடசாலை காலைக் கூட்டத்தின் தேவை கருதி ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒலி பெருக்கிச் சாதனங்களை வட மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் அண்மையில் வழங்கி வைத்தார். கரவெட்டி ஸ்ரீநாரத வித்தியாலய சமூகத்தினர் விடுத்த வேண்டுகோளை யடுத்து தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியினைக் கொண்டு இதனைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

(படங்கள்-கரணவாய் செய்தியாளர்)

## மழலைகளின் மகிழ்ச்சிகரமான கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

மழலைகளின் மகிழ்ச்சிகரமான கலாசார விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் ஆற்றுதல் நிறுவன நிபுணத்துவ ஆலோசகர் சி. மாதவன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பிரிவு அபிவிருத்திப் பணிப்பாளர் ஜெயா தம்மையா கலந்து கொள்வார். (இ-10)

## தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச சபைச் செயலாளர் தி.சுதர்சன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி திருமதி கலைவாணி இராமநாதன், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் க.செல்வகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

# வடமாகாணக் கல்வியில் வீழ்ச்சிப் போக்கு உள்ளதா?

01



திருமதி
சசிகலா சிவநாதன்
(B.A Hons, Dip in Edu, M.Edu)
(S.L.T.S - I ,ஓய்வு நிலை உப அதிபர்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**சேர்.பொன். இராமநாதன் நினைவுப் பேருரை- 2017 யா/ இராமநாதன் கல்லூரியில் 11.11.2017 அன்று இடம் பெற்றது. இதில் திருமதி. சசிகலா சிவநாதன் அவர்களால் வழங்கப்பட்ட நினைவுப் பேருரை இங்கு பிரசுரமாகின்றது.**

கல்லூரியின் அதிபர் திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை, இன்றைய பரிசளிப்புவிழா நிகழ்வின் பிரதம விருந்தினர் அமைச்சர் D.M சுவாமிநாதன், ஆசி வழங்கி நிற்கும் ஆஞ்சநேயர் ஆலய பிரதம குருக்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர் நடராஜா காண்டீபன், பெருமைக்குரிய ஆசிரியர்களே, மாணவர்களே, பழைய மாணவிகளே, பாடசாலை நலன் விரும்பிகளே, அவையில் வீற்றிருக்கும் அன்பர்களே, அனைவருக்கும் அன்புசால் வணக்கம்.

எமது கல்லூரியின் இன்றைய நிகழ்வில் மதிப்புமிக்க சேர் பொன்.இராமநாதனின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த கல்லூரி அதிபர் மற்றும் கல்லூரிச் சமூகத்தினர் அனைவருக்கும் முதலில் எனது நன்றிகள்.

நூற்றாண்டிற்கு மேற்பட்ட பெருமையுடையதும், இன்றைய பெரும் கல்லூரிகளின் தோற்றத்திற்கு முன்னையதும் நாடளாவிய நிலையில் பல பெண் மாணவர் தங்கியிருந்து கற்பதற்கான விடுதி வசதிகளுடன் கூடிய கல்லூரியாக எமது கல்லூரி புகழ் பெற்றிருந்ததும் யாவரும் அறிவர். அத்தகைய புகழ்பூத்த இக் கல்லூரியின் பழைய மாணவி என்பதனாலும், பின் 90களில் என்னைக் கற்பித்த ஆசிரியர்களுடன் இணைந்து ஆசிரியப்பணி செய்தமையும் இந்நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு என்னைத் தெரிவு செய்தமைக்கான காரணங்களாக கருதுகிறேன். இக்கல்லூரியின் புகழும் தரமும் என்றும் நிலைத்திருக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற பேரவாவுடன் இப் பேருரையை வழங்க முன்வந்தேன்.

அன்றைய இலங்கையின் தேசியத் தலைவர்களில் ஒருவராகவும் கல்வி, கலை, மொழி, பண்பாடு, சமுதாய சீரமைப்பு என்ற பல்துறை வளர்ச்சியில் பங்கேற்றவராகவும்,ஈழத்து சைவ மெய்யியற் சிந்தனையினை நன்கு உணர்ந்து கொண்ட ஒரு ஆன்மீகவாதியாகவும் விளங்கியவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆவார்.

"தானங்களில் சிறந்தது வித்தியாதானம்" என இந்து சாஸ்திரங்கள் கூறும்.

"அறிவை வளர்த்திடல் வேண்டும் - மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியாரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்"

என்ற பாரதியின் நோக்கிற்கமைவாக, போற்றுவதற்குரிய சேர் பொன்.இராமநாதனின் கல்விப்பணி அமைந்தது.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் இலங்கை மக்களின் கல்வித் தேவைகள் மிகுதியாக உணரப்பட்டன. சிறந்தொரு கல்வி மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், மக்களின் சிந்தனையையும் உயர்த்திடல் வேண்டுமென கேணல் ஒல்கொட், அநகாரிக தர்மபாலா, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலான பெரியவர்கள் முயன்றனர். அவர்களின் வரிசையில் சேர் பொன். இராமநாதனையும் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். இவரது முயற்சியின் விளைவே இராமநாதன் மகளிர் கல்லூரியும், இன்றைய பல்கலைக்கழகமாக மாறியுள்ள பரமேஸ்வராக் கல்லூரியுமாகும்.

வடபுலத்தின் கல்வி ஒரு நீண்ட வரலாறு கொண்டது. காலனித்துவ ஆட்சியாளர்களின் வருகைக்கு முன்பு கல்விப் பாரம்பரியமும், கல்வியில் நாட்டமும் கொண்ட நம் மூதாதையர் தாய்மொழியினூடாக கல்வியினைத் தம் பிள்ளைகளுக்கு ஊட்டியிருந்தனர். நவீன பாடசாலைக் கல்வி 200 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்துள்ளது.

அந்நியர் வருகையுடன் ஆங்கிலக் கல்வியினைக் கற்ற நம் மூதாதையர் பாடசாலைகளைத் தொடக்கி பராமரித்து வந்தனர். இராமநாதனினால் ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரிகளிலிருந்து 1960, 70களில் தனித்த பேருந்துகளில் பல மாணவர்களை ஏற்றி பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப முடிந்தது. இதனால் இடைநிலைக் கல்வியினை கற்பதற்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து கற்றனர் என்பதை யாவரும் அறிவர்.

தம் பிள்ளைகளின் கல்விக்குப் பெரும் தொகைப் பணத்தையும் தமது முயற்சியில் பெரும்பங்கையும், தம் நேரத்தில் பெரும்பங்கையும் செலவிட்டு, கல்வியே பெரும் சொத்தாக கருதி வாழும் தமிழ் பிரதேச பெற்றோர்கள் எங்கள் மண்ணில் அன்றும் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இருந்த போதும் அண்மைக் காலங்களில் நாம் அறியும் தகவல்கள் தமிழ் சமூகத்தினருக்கு வேதனை அளிப்பதாகும்.



வடமாகாணக் கல்வியில் குறிப்பாக இடை நிலைக்கல்வி பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகிறதா? வீழ்ச்சிப்போக்கு காணப்படுகின்றது எனக்கருத்துரைப்பது சரியானதா? என்பது பற்றிய ஆய்வு.

அண்மையில் வடக்கு மாகாண ஆளுநரும் மற்றும் கல்வியாளர்களும், கல்வி அதிகாரிகளும் கடந்த வருடங்களில் வடக்கு மாகாணத் தமிழரின் கல்வி வீழ்ச்சி என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தனர். மேலும் ஆளுநர் குறிப்பிடும் போது "வெளிச்சம் இன்றி, கட்டடங்கள் இன்றி , ஏனைய வசதிகள் இன்றி நல்ல பெறுபேறுகளைப் பெற்று உயர் பதவி வகித்த தமிழ் மக்கள் இன்று பின்தள்ளப்பட்டனர்" என்றும் "வெள்ளைக்காரன் எமது நாட்டை ஆண்ட போது வடக்கு மாகாணத்திற்குப் பெரிதாக அபிவிருத்தி ஒன்றும் செய்து விடவில்லை" என்றும் குறிப்பிட்டு "எங்கள் விடுதலை கல்வியிலேயே பெரிதும் தங்கியுள்ளது" என்றும் குறிப்பிடுகிறார்.

"கல்வி வளர்ச்சி ஒன்றுதான் இந்நாட்டு மக்களின் அடிமைத்தளையினை அறுக்கவும் அவர்களை சுதந்திரமாக நிற்க வைக்கவும் உதவவல்லது" என்பதனை சேர் பொன். இராமநாதனும் நன்கு உணர்ந்திருந்தார் என்பதனை அவரது எழுத்துக்கள் எமக்கு தெரிவிக்கின்றன.

எனவே இன்று நாம் கல்வித்தரத்தில் எங்கே நிற்கிறோம்? எங்கு செல்ல வேண்டும்? என்ற ஆய்வு முக்கியமானதாக உள்ளது. எனவே,

வடமாகாணக்கல்வியில் குறிப்பாக இடைநிலைக்கல்விப் பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகிறதா? வீழ்ச்சிப்போக்கு காணப்படுகிறது எனக் கருத்துரைப்பது சரியானதா?

என்பது பற்றிய ஆய்வு காலத்தின் தேவையாகும் என நான் கருதுகின்றேன். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் புள்ளி விபரங்களே வடமாகாணக் கல்வியில் வீழ்ச்சி என்ற எண்ணத்தை உருவாக்கியுள்ளது. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை தொடர்பாக காட்டப்படும் புள்ளி விபரங்கள் சாதாரணதரப் பெறுபேற்றின் வீழ்ச்சியினைக் காட்டுகின்றனவா? அல்லது, ஒட்டுமொத்தமாக வடமாகாண கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துவிட்டதை தெரிவிக்கின்றனவா? என்பது கேள்விக்குறியாகின்றது. இது தொடர்பான கருத்துக்களே இவ் ஆய்வின் முக்கிய கருப்பொருளாகின்றன.

கிறிஸ்தவ சூழலில் சைவ மகளிர் நிலை மோசமாவது கண்டு மனம் புழுங்கியே 1913 இல் இராமநாதன் அவர்கள் இராமநாதன் மகளிர் கல்லூரியினை அமைத்தார் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் பரமேஸ்வராக் கல்லூரியின் இலட்சியங்கள் பற்றி சேர் பொன்.இராமநாதன் குறிப்பிடுகையில், "பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்விப் பாங்கினை தமிழ்ச் சிறுவர் பெறவும், கல்வியினால் தீயவன் நல்லவனாய் மாறுவான் எனவும், குறும்புகளாலும், வல்லுணர்ச்சிகளாலும் உந்தப்படுபவன் நற்பணிகளுக்கு உதவுவான் எனவும், வேலையற்று உழல்பவன் ஊக்கமுடையவனாகவும், அந்நியரின் நடை உடை பாவனைகளைக் கேலி செய்யத்தக்க வகையில் பின்பற்றுவோன் பரம்பரை பரம்பரையாய் நிலைபெற்று வரும் தான் பிறந்த நாட்டிற்குப் பொருந்தும் நடை உடை பாவனைகளை மேற்கொள்வான் எனவும், கற்பவன் தன்னையும் தான் பிறந்த சமூகத்தையும் மேலோங்கச் செய்வான்" என்றும் குறிப்பிடுகின்றார். எனவே இன்றைய காலச் சூழலுடன் ஒப்பிடுகையிலும் கல்வித்தரங்களின் வீழ்ச்சி பற்றிய ஆய்வு அவசியமானதாகும்.

"கல்வி என்பது ஒரு இறுக்கமான அச்சிலே வார்த்தெடுக்கப்பட வேண்டிய பொருளன்று. கல்வியின் பொருளும் கல்வி முறையும் காலத்துக்குக் காலம் சந்ததிக்குச் சந்ததி வேறுபட்டு வந்துள்ளது. கல்வி பற்றி ஒரு காலத்திலே நிலவிய கருத்துக்களும், வழக்கங்களும் அடிக்கடி மறைந்து வேறு கருத்துக்களும் வழக்கங்களும் இடம்பெற வேண்டும்" என விரும்பியவர் சேர் பொன். இராமநாதன்.

எனவே எத்தனை இன்னல்கள் வந்துள்ள போதும் கல்வியினை நாம் இழந்துவிடலாகாது. எமக்கு விடுதலையினைப் பெற்றுத் தந்து எமது பாரம்பரிய விழுமியங்களைப் பேண வைப்பதும் எம்மை உலகறிந்திட வைப்பதும் கல்வி ஒன்றே. அத்தகைய கல்வி வடமாகாணத்தில் போரினாலோ அல்லது பிற காரணங்களினாலோ நலிவடைந்துவிட்டதா? அவ்வாறாயின் தவறு எங்கே? புள்ளி விபரங்களின் அடிப்படையில் நாம் கூற விரும்புவது என்ன என்பதனைக் கூற விளைகின்றேன்.

ஆய்வின் நோக்கம்


ஒருநாட்டின் ஒருகுறிப்பிட்ட பிரதேசத்தின் கல்விநிலைபற்றி கருத்துரைப்பதற்கு சிலவரையறைகளை முன்வைத்தல் அவசியமானது. ஏனெனில் தேசிய கல்விக் கொள்கையின் வழிநடத்தலில் அமுல்படுத்தப்படும் கல்விச்செயற்பாடுகளின் பெறுபேறுகளை ஒருபிரதேசத்திற்கென மட்டுப்படுத்திக்கொள்வது வழுவற்ற ஒரு ஆய்வாக இருக்குமா? என்ற எழுவினாவோடு வடமாகாணத்தின் கல்விநிலையை ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிட்டு நோக்குவதே இவ்வாய்வின் அடிப்படையாகும். அத்தோடு குறிப்பாக கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளையும், மேலெழுந்த வாரியாக கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளையும் சான்றாகக் கொண்டு பிரதேச ரீதியாக ஒப்பீடு செய்து முடிவுகளைப் பெறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

தோல்வியடைந்த சமூகம் எல்லா நிலைகளிலும் தாழ்ந்துவிட்டது என்ற பிரசாரம் எதிர்கால சந்ததிக்கு எதிலும் எங்களால் மேல்நோக்கி நகர முடியாது என்ற எண்ணப்பாட்டை உருவாக்கி விடும். இந்தப் பிரசாரங்கள் தோல்வியை நிரந்தரமாக்கும் முயற்சியாக அமைந்துவிடும். கல்வியில் மேலோங்கியிருந்த தமிழ்ச்சமூகம் யாராலும் அபகரிக்கவோ கொள்ளையிடவோ முடியாத கல்வியை இழந்து இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் ஒன்பதாவது இடத்திற்கு தள்ளப்பட்டுவிட்டது என சில காலத்தின் சில புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு கருத்துரைத்துள்ளனர். உண்மையில் அவ்வாறு நிகழ்ந்துள்ளதா? என மீளாய்வு செய்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

(தொடரும்)

# இனக்கலவரத்தை தூண்டுவதற்கு முயற்சி மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்

## வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி



(குருமன்காடு)

தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையே கலவரத்தை ஏற்படுத்த வேண்டாம் என வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி மகிந்த வில்வோராச்சி தெரிவித்துள்ளார்.

வவுனியா நகர கிராம சேவையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வவுனியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி மகிந்த வில்வோராச்சி வவுனியா நகர், வைரவர்புளியங்குளம், கற்குழி, தோணிக்கல் வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். இக்கலந் துரையாடலில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், வவுனியாவில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் சில அசம்பாவித சம்பவங்களை பற்றியும் பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள கடைகள் தீப்பற்றி எரிந்தமை பற்றியும் உங்களுக்கு தெரியும். இச்சம்பவங்களை வைத்து ஒரு சிலர் தமிழ்- முஸ்லிம் மக்களுக்கிடையில் இனக்கலவரம் ஒன்றை தூண்டுவதற்கு முயற்சித்துள்ளனர். அவர்களை இனம் கண்டு எமது மக்கள் விழிப்புடன்செயற்படவேண்டும்.

இதேவேளை அண்மையில் வேப்பங்குளம் பகுதியில் வியாபார நிலையம் தீப்பற்றியதையும் ஒருசாரார் வீண் வதந்திகளை பரப்பி வருகின்றனர்.

எதிர்வரும் காலங்கள் பண்டிகை காலங்களாக இருப்பதால் இளைஞர்கள் மது போதையில் மோட்டார் சைக்கிள்களை வேகமாக செலுத்துவதாலும், கூட்டமாக குழுக்களாக நின்று பொதுமக்களுக்கு இடையூறு செய்வதாலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறானவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். உங்களின் பிள்ளைகளை நீங்களே திருத்திக்கொள்ள வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வைரவப் புளியங்குளம், குருமன்காடு பகுதியில் இளைஞர்கள் அட்டகாசம் செய்கிறார்கள் என ஒருவர் கூறியதற்கு அதற்கு பதிலளித்த பொறுப்பதிகாரி, மாலை வேளைகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதாகவும் தவறுகள் இடம்பெறும் பட்சத்தில் தம்மை நேரடியாக தொடர்புகொள்வதற்கு தொலைத் தொடர்பு இலக்கத்தையும் வழங்கியிருந்தார். (2-250)

# குற்றத்தை ஒப்புக்கொண்ட 18 பேருக்கு ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா தண்டப்பணம்

## முல்லைத்தீவு நீதிமன்றால் விதிப்பு

(மல்லாவி)

மதுவரித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத்தினால் கடந்த நவம்பர் மாதம் முதலாம் ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையங்கள் மற்றும் தமது உடைமையில் கசிப்பை வைத்திருந்தவர்கள் உட்பட கேரளக் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவருமாக மொத்தம் 27 குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர்களை கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய போது 18, வழக்குகளின் 18 சந்தேக நபர்கள் தமது குற்றத்தை நீதிபதி முன்பாக ஒப்புக் கொண்டதை அடுத்து ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவை தண்டப் பணமாகச் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத்தின் பொறுப்பதிகாரி ரீ.ஏ.டீ.பி. குணரத்னா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட 6 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடந்த நவம்பர் மாதத்தில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையங்கள் மற்றும் தமது உடைமையில் கசிப்பை வைத்திருந்த குற்றச் செயல்களுமாக 26 குற்றச் செயல்கள் உட்பட தனது உடைமையில் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் உட்பட மொத்தம் 27 குற்றச் செயல்களில் ஈடுபட்ட 27 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் தடயப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதான சந்தேக நபர்களையும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய போது, சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தியவர்கள் மற்றும் தமது உடைமையில் கசிப்பை வைத்திருந்தவர்களின் 26 வழக்குகளில் 17 வழக்குகள் நீதிபதி எம். எஸ். எம். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சந்தேக நபர்கள் தமது குற்றத்தை நீதிபதி முன்னிலையில் ஒப்புக் கொண்டதை அடுத்து சந்தேக நபர்களுக்கு ஒரு இலட்சத்து 45 ரூபா தண்டப் பணமும் கேரளக் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை. அடுத்து அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமுமாக மொத்தம் ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தை விதித்ததுடன் சந்தேக நபர்களுக்கு குறித்து குற்றம் தொடர்பில் நீதிபதி கடுமையாக எச்சரிக்கையும் செய்துள்ளார்.

இதேவேளை, மீதியாகவுள்ள 9 கசிப்பு தொடர்பான வழக்குகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மதுவரி நிலையத்தின் முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பதிகாரி ரீ. ஏ. டீ. பி. குணரத்னா தெரிவித்துள்ளார். (2-15)




## வெள்ளாங்குளம் சேவா கிராமத்தினுள்

# யானைக்கூட்டம் நுழைந்து வாழ்வாதாரப் பயிர்கள் நாசம்



(பனிக்கன்குளம்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் சேவா கிராமத்தினுள் காட்டு யானைகள் குறித்த கிராமத்தினுள் உட்புகுந்து விவசாயம் மற்றும் தோட்டச் செய்கையை சேதப்படுத்தியுள்ளதாக குறித்த கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்தினுள் தொடர்ச்சியாக காட்டு யானைகள் நுழைந்து விவசாயம் மற்றும் தோட்டச் செய்கையை சேதப்படுத்தி வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த கிராமத்தினுள் நுழைந்து காட்டு யானைகள் விவசாயம் மற்றும் தோட்டச் செய்கையை முழுமையாக சேதப்படுத்தியுள்ளதாக அக்கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் சுமார் 40 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த நிலையில் குறித்த கிராம மக்கள் தமது வாழ்வாதாரமாக விவசாயம் மற்றும் தோட்டச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பிரச்சினை தொடர்பில் வெள்ளாங்குளம் சேவா கிராம மக்கள் மாந்தை மேற்கு பிரதேசச் செயலக அதிகாரிகள், மடு பிரதேசத்தில் உள்ள வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கு பல தடவைகள் அறிவித்தல்களை வழங்கியும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த கிராமத்தில் நுழைந்த காட்டு யானைகள் அங்குள்ள தோட்டங்களில் காணப்பட்ட வாழை, தென்னை, பப்பாசி, மரவள்ளி, பூசணி போன்ற பயன் தருகின்ற பயிர்களை அதிகளவில் சேதப்படுத் தியுள்ளன.

தொடர்ச்சியாக யானைகள் தமது பயிர்களை சேதப்படுத்தும் பட்சத்தில் தமது வாழ்வாதாரம் முற்றுமுழுதாக பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே காட்டு யானைகளின் பிரச்சினைகள் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

# முல்லையில் கொட்டித்தீர்த்தது மழை; மக்களின் இயல்பு நிலை பாதிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக சிறிய குளங்கள் நிரம்பி வான் பாய்கிறது. அதனைவிட வீதிகளை குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் மக்கள் போக்குவரத்தின் போது பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர்

ஒட்டுசுட்டானில் பல்வேறு பகுதிகளில் வீடுகள், கடைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு வேறு இடங்களில் தஞ்சமடையும் நிலை ஏற்பட்டு வருகிறது. (2-281)

# சட்டவிரோதமாக மணல் அகழ்வு; வீதிகள் நாளுக்குநாள் பயணிக்கமுடியாது சேதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதால் இப்பகுதி வீதிகள் யாவும் சேதமடைந்து வருவதாகவும் இதனைத்தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவ்வாறு சட்டவிரோதமாக அகழப்படுகின்ற மணல் கிராமப்புற வீதிகள் ஊடாக கிராமங்களுக்குள் குவிக்கப்பட்டு டிப்பர் வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன.

ஏற்கனவே எதுவித புனரமைப்புக்களும் இன்றிக் காணப்படுகின்ற இந்த வீதிகள் ஊடாக கனரக வாகனங்களை கொண்டு செல்வதனால் வீதி மிக மோசமாக சேதமடைந்து வருகின்றது. இதனால் சாதாரண துவிச்சக்கரவண்டிகளில் கூட பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும் அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரிகள் அதற்குத் துணை நிற்பதாகவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன், இதனைக் கட்டுப்படுத்தி பிரதேச வளங்களையும் வீதிகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# எமது சந்ததி வாழ்ந்த மண்ணை விடுவிக்க அரசு ஏன் பின்னடிக்கிறது

## இரணைதீவு மக்கள் கேள்வி



(கண்டாவளை)

நூற்றாண்டு காலம் எங்கள் சந்ததி எவரிடமும் கையேந்தி வாழாத எங்கள் இரணைதீவு மண்ணை விடுவிப்பதற்கு பல காரணங்களைச்சொல்லி ஏன் அரசு பின்னடித்து வருகின்றதென இரணைதீவு மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எமது நிலத்தை விடுவிக்கக்கோரி கடந்த மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏழு மாதங்களுக்கு மேலாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு போராட்டத்தில ஈடுபட்டுள்ள மக்கள் நாங்கள் மீள்குடியேறிய காலத்திலிருந்து எமது நிலத்தில் தொழில் செய்து நாங்கள் நிம்மதியாக வாழ வழியை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கடந்த அரசாங்கத்திடமும் கேட்டு வந்தோம்.

அப்போது அவர்கள் இரணைதீவைப்பற்றி எதுவும் கதைக்கவேண்டாம். உங்களுக்கு மாற்றிடம் வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். நாங்கள் தொடர்ந்தும் எம் கோரிக்கையை முன்வைத்து வருவதோடு ஏழு மாதங்களாக இந்தக் கவனீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

அரசாங்கம் எமது நிலத்தை விடுவிப்பதாக பல் வேறு நல்லெண்ண முயற்சிகளை காட்டுவதோடு காலத்தைஇழுத்தடித்து வருகின்றது.

தற்போது எங்களுடைய பூர்வீக நிலத்தில் அளவீட்டுப்பணிகளும் அடையாளப்படுத்தல்வேலைகளும்முன்னெடுக்கப்படுவதாக தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், எமது நிலத்தை விடுவித்து நாங்கள் அங்கு போய் குடியேறி தொழில் செய்து வாழ்வதற்கும் எதிர்வரும் நத்தார் தினத்தில் எங்களுடைய சொந்த மண்ணில் நாங்கள் சென்று பெருநாளை கொண்டாடுவதற்கு ஏற்ற வழிவகைகள செய்து தரவேண்டும் என தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தெரிவித்துள்ளனர் .(2-315)

# தரம்-5 மாணவர்கள் கௌரவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள சிவநகர் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

விருந்தினர் வரவேற்பு ,மங்கலவிளக்கேற்றல் மற்றும் இறைவணக்கம் என மரபியல்முறையில் இந்த நிகழ்வு தொடங்கியது. புலமைப் பரிசில் சாதனையாளர்களுடன் அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களும் பரிசில்கள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர். (2-281)

# நீர்ப்பாசனத் திணைக்களத்தின் துரித செயற்பாட்டை அடுத்து வவுனியா குளம் உடைப்பு புனரமைப்பு

(குருமன்காடு)

வவுனியா குளம் உடைப்பெடுக்க இருந்த நிலையில் நீர்ப்பாசன திணைக்களத்தின் துரித செயற்பாட்டால் முன்கூட்டியே தவிர்க்கப்பட்டுள்ளது.

வவுனியா குளத்தின் துருசு அமைந்திருந்த பகுதியைச் சூழ மண் அரிப்பு ஏற்பட்டு குளத்தின் உட்புறமாக பாரிய துவாரம் ஏற்பட்டு குளக்கட்டு உடையும் நிலை ஏற்பட்டிருந்தது.

நேற்றுக் காலையில் குளத்தில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்தவர்கள் குளக்கட்டில் நீரின் போக்கு வழமைக்கு மாறாக காணப்பட்டதை அவதானித்ததை அடுத்து நீர்ப்பாசன திணைக்களத்திற்கு தகவல் அறிவித்துள்ளனர். இதனையடுத்து கமக்காரர் அமைப்பு மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தினர் விரைந்து செயற்பட்டு குளக்கட்டை புனரமைத்தனர்.

இதன் காரணமாக உடைப்பெடுக்கவிருந்த குளத்தில் பணிகளை விரைந்து புனரமைப்பு செய்தமையால் பாரிய விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. (2-250)



# இரணைமடு குளத்தின் அருகில் இருந்த புத்தர் சிலை அகற்றம்

(பரந்தன்)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் அருகில் இருந்த சிறிய இராணுவமுகாம் அகற்றப்பட்ட பின்னர் குளத்தின் அருகில் இருந்த புத்தர் சிலையையும் அகற்றினர் இராணுவத்தினர்.

இரணைமடுக் குளத்தின் பொறியியலாளர்கள் அலுவலகம் உள்ள கட்டடத்தில் யுத்தத்தின் பின்னர் இராணுவத்தினர் தங்களின் தேவைக்காகவும் யுத்தம் முடிவுற்ற பின்னர் இரணைமடுக் குளத்தினை பார்வையிடுவதற்கு பெரும் திரளான சிங்கள மக்கள் வருவதுண்டு. அவர்களின் வழிபாட்டுக்காகவும் அமைக்கப்பட்டதாக கூறப்படும் புத்தர் கோவிலின் சிலை அகற்றப்பட்டுள்ளது.



குளத்தின் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் சுமார் 3000 மில்லியன் நிதியுதவியில் புனரமைக்கப்பட்டு வருகின்றபோது குளத்தின் பொறியியலாளர் அலுவலகம் மீள் புனரமைப்பு காரணத்தால் இராணுவம் அங்கிருந்து வேறு ஓர் இடத்திற்கு மாற்றப்பட்ட பின்னரும் புத்தர் கோவில் குளத்தின் அருகிலே இருந்தது. குளத்தின் அபிவிருத்திக்கு இடையூறு காரணத்தால் புத்தர் கோவிலிருந்த புத்தர் சிலை இராணுவத்திரால் அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதியில் கள்ளநோட்டுக்கள் புழக்கம்

## வர்த்தகர்களை ஏமாற்றி பொருட்கள் கொள்வனவு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு சந்தைப்பகுதியில் இனம் தெரியாத நபர்கள் கள்ள நோட்டுக்களைக் கொடுத்து பொருட்களை வாங்கி வர்த்தகர்களை ஏமாற்றி விட்டு தப்பிச்சென்றுள்ளனர். இதனைத்தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு எந்த நடவடிக்கையும் இல்லை என வர்த்தகர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.


முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு சந்தைப்பகுதியில் நேற்றைய தினம் இனம்தெரியாத நபர்கள் ஒரே இலக்கமுடைய ஆயிரம் ரூபா தாள்களை கொடுத்து வர்த்தக நிலையங்களில் பொருட்களை வாங்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.


இவ்வாறு சுமார் 6 ஆயிரம் ரூபா பணம் 6 வர்த்தக நிலையங்களில் பொருட்களை வாங்கி மீதிப் பணத்தினையும் பெற்றுச் சென்றுள்ளனர். வர்த்தகர் ஒருவர் இந்தப் பணத்தை கள்ள நோட்டு என கண்டறிந்ததைத் தொடர்ந்து இவ்வாறு 6 பேரிடம் கொடுக்கப்பட்டதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என வர்த்தக சங்க தலைவர் தெரிவித்தார். பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தொலைபேசி இலக்கத்தையும் வழங்கி மக்களுக்கு பிரச்சினை எனில் உடனடியாக வருவோம் என தெரிவித்த பொலிஸார் இவ்வாறு நடந்து கொள்வது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்தார். (2-281)




# வவுனியாவில் இரு சமூகங்கள் இணைந்து டெங்கு ஒழிப்பு,பார்த்தீனியச்செடி அழிப்பு





(குருமன்காடு)

வவுனியாவில் டெங்கு ஒழிப்பு,சிரமதானப்பணியை இரு சமூகங்கள் இணைந்து முன்னெடுத்தனர்.

வவுனியா மதினா நகர் கிராமத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணி கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எஸ்.கிதா இத்துல்லா தலைமையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் கிராம மக்களுடன் அல் மதினா விளையாட்டுக்கழகத்தினரும் இணைந்து டெங்கு ஒழிப்பு மற்றும் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அல் மதினா நகர் கிராமத்தில் தமிழ், முஸ்லிம் ஆகிய இரு சமூகங்களைச் சேர்ந்த சுமார் 250 குடும்ப உறுப்பினர்கள் இச் சிரமதானப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது நீர் வடிகான்கள் துப்புரவு செய்யப்பட்டதுடன், வீதியோரங்களில் வளர்ந்திருந்த பார்த்தீனியச் செடிகள் வெட்டி அகற்றப்பட்டன. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினர் இதற்கு இரண்டு குப்பை வண்டிகளை வழங்கியதுடன் கிராம மக்களுடன் இணைந்து சிரமதானப்பணியிலும் ஈடுபட்டிருந்தனர்.

மழை காலம் ஆரம்பித்திருக்கும் நிலையில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (2-250)

# கலாசார விழா விருது தெரிவில் பாரபட்சம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட மற்றும் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் கலாசார விழாவில் விருது வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் மாவட்ட மட்ட கலாசார விழா இன்று நடைபெறவுள்ளது. இதில் விருது வழங்குவதற்காக பல்வேறு துறைகளின் கீழ் பலரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

.இதில் பாரபட்சம் நடைபெற்றுள்ளதாக தெரிய வருகிறது. இவ் விருதுகள் 20 - 40 வயது பிரிவு, 41-59 வயது பிரிவு, 60 வயதிற்கு மேல் என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு துறைக்கும் மூன்று வயது பிரிவுகளின் கீழ் விருதுக்கான பெயர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும், ஒருசில துறைகளில் தகுதியானவர்கள் இருந்தும் குறித்த வயதுப் பிரிவுகளில் உள்வாங்காது ஒரு வயது பிரிவில் மட்டும் சில துறைகளைத் தெரிவு செய்துள்ளனர். இன்னும் சிலருக்கு விருதுக்கான விண்ணப்பங்கள் கூட முறையாக வழங்கப்படவில்லை.

வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தரின் பொறுப்பற்ற செயற்பாடு குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளதுடன் மாவட்ட, பிரதேச கலைஞர்களை தெரிவு செய்யும் போது சரியான முறைகளை பின்பற்ற வேண்டும். அதுவே உண்மையான கலைஞர்களுக்கு வழங்குகின்ற கௌரமாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர். (2-250)

# புனரமைப்பின்றி முப்பது வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் இருட்டுமடு பிரதான வீதி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இருட்டுமடு-உடையார்கட்டு பிரதான வீதி மக்கள் பாவனைக்கு மிகவும் இடையூறாக முப்பது வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்றுகாணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள், அரச அதிகாரிகள், விவசாயிகள், சாதாரண பொது மக்கள் என நாளாந்தம் பல்வேறு தேவைகளுக்காக மக்கள் பயன்படுத்தும் இவ் வீதியை பிரதேச அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ நேரில் வருகைதந்து பார்வையிட்டு சீர் செய்யாமல் இருக்கும் வரை இருட்டு மடு மக்களது நாளாந்த வாழ்க்கைமுறை மிகவும் துன்பம் நிறைந்ததாகவே இருக்கும் என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (2-281)

# பாடசாலை மட்டத்தில் மென்திறன் விருத்தியின் தேவைப்பாடுகள்

இன்றைய சூழலில் உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல் போன்ற புதிய போக்குகள் முனைப்புப் பெற்று வருகின்ற நிலையில் மாணவர்கள் உயர் அறிவாற்றலும், ஆற்றுகைத் திறன்களும் உடையவர்களாக வலுவூட்டப்பட வேண்டியது அவசியமானதாகும். கல்விச் செயற்பாடுகள் ஊடாகக் கிடைக்கப்பெறும் மனித மூலதனங்கள் நடைமுறை வாழ்க்கை முறைகளுக்கும், நாட்டின் சகல அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் தமது அறிவு, ஆற்றல்களைப் பிரயோகிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இம் மனித மூலதனங்கள் தேசிய, சர்வதேச ரீதியில் தொழில் உலகுடன் போட்டி போடக் கூடிய இயலுமையைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான மனித மூலதனங்களை உருவாக்குவதில் பாட சாலைக் கல்வி மிக முக்கியமான பங்கினை ஆற்றுகின்றது.


இதனையே எமது நாட்டில் நடைமுறையிலிருக்கும் தேர்ச்சி மட்டக் கலைத்திட்டம் கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

அந்த வகையில் ஒரு மனிதனை பூரண மனிதனாக்குவதற்கு வேண்டிய செயற்பாடுகளுக்கு வழிசமைத்துக் கொடுப்பது பாடசாலைகளே. மாணவ சமுதாயம் மாறும் உலகிற்கேற்ப அறிவு, பல்துறைசார் ஆற்றல்களுடன் வளர வேண்டியதும், வளர்க்கப்பட வேண்டியதும் அவசியமாகும். அவ்வாறான பல்துறைசார் ஆற்றல்களே மிருதுதிறன்கள் எனப்படுகின்றன. அந்த வகையில் இவ்வாய்வுக் கட்டுரையானது மிருதுதிறன்களின் முக்கியத்துவம், மிருதுதிறன்கள் யாவை? மிருதுதிறன்களும், பாடசாலையும் என்பது தொடர்பான விடயங்களை முன்வைப்பதாக அமைகின்றது.

### மிருதுதிறன்களும் முக்கியத்துவமும்

மிருதுதிறன்கள் (Soft skills) என்பது மனவெழுச்சி சார் நுண்மதி. அதாவது உணர்வுசார் நுண்மதி என்னும் எண்ணக்கரு வளர்ச்சி பெற்றதன் பின் உருவாகிய எண்ணக்கருவாகும். ஒருவர் தனது தகுதியுடன் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் மிருதுதிறன்கள் அல்லது மென் திறன்கள் (Soft skills) என அழைக்கப்படுகின்றன. இவை கல்வியறிவு அல்லது பாட அறிவு என்பதற்கும் அப்பால் ஒரு வேலைத் தளத்தில் செயற்படுவதற்கு தேவையான விடயங்களாகும். பாட்சாலையில் மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு இம் மிருதுதிறன்கள் உதவுகின்றன.

இம்மிருது திறன்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்பது தொடர்பாக கல்வியியலாளர்கள் நீண்ட காலமாக கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அதன் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தமும், மாணவர்களிடம் மென்திறன்களையும் வளர்ப்பதையும் கருத்திற் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. கோளமயமாக்கலின் பின் அனைத்து நாடுகளிலும், அனைத்து நிறுவனங்களிலும் வேண்டப்படும் ஒன்றாக இம் மென்திறன்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து சமூக மேம்பாட்டுக் கருமங்களிலும் மாற்றம் காணும் தொழில் உலகிலும் அவர்களை ஈடுபடுவதை நோக்கமாகக் கொண்டே மென்திறன் விருத்திச் செயற்பாடுகள் பாடசாலையில் இடம்பெறுகின்றன.



அத்தகைய மிருதுதிறன்களாக தலைமைத்துவப் பண்பு, முகாமைத்துவத்திறன், நேர முகாமைத்துவம், முரண்பாடு தீர்த்தல், ஆளகத் திறன், நல்ல முறையில் தொடர்பாடலை மேற்கொள்ளல், அணி முகாமை செய்தல், ஆளிடைத் திறன்கள், இலக்குத் தீர்மானித்தல், நெருக்கிடை முகாமை, தீர்மானம் மேற்கொள்ளல், ஆக்க நிலைச் சிந்தனை, தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன், பொறுப்புக்களை ஒப்படைக்கும் திறன், ஊக்கப்படுத்தல், மதிப்பிடுதல், அறிக்கை செய்தல் ஆகியவற்றைக் கொள்ளலாம்.

இன்றைய பாடசாலைக் கலைத்திட்டமும் இத்தகைய பண்புகளை மாணவர்களிடையே வளர்த்து எதிர்காலத் தொழிலுலகிற்கு ஏற்ற வகையில் அவர்களைத் தயார்படுத்தும் நிலையையே முதன்மைப்படுத்தியதாக உள்ளது. இன்றைய தொழில் உலகில் நம்பிக்கை, நேர்மை போன்ற தனியாள் சார் பண்புகளில் பயிற்சியளித்தல் நிறுவனத்திற்கு நல்ல பயன் விளைவுகளைத் தருவதால் நியாயமான தகைமைகளும், மென்திறன்களும் தொழில் நாடிகளிடம் உள்ளனவா எனத் தொழில் தருநர்கள் இன்று பரிசீலிக்கின்றார்கள். இதனால் நீண்டகாலத்தில் மென்திறன்களே அதிகமாக விரும்பப்படுவனவாகவும், அதிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் இன்று கொள்ளப்படுகின்றன.

### மிருதுதிறன்களும் பாடசாலையும்

மாற்றமுறும் உலகில் எதிர்காலச் சமூகச் சிற்பிகளாக பாடசாலை மாணவர்களிடம் மென்திறன்களை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பாடசாலையின் முக்கிய பொறுப்பாகும். சமூகத்திறன்கள், சுய்திறன்கள், சிந்தனைத் திறன்கள் என்பன நிறைந்த ஓரிவரிடத்தேயே ஒன்றிணைந்த ஆளுமை காணப்படும். பாடசாலைகளின் ஊடாக மென்திறன்களுக்குப் பயிற்சியளித்தலே இன்றைய தேவைப்பாடாக உள்ளது. எழுத்தறிவு மட்டுமன்றி செயலாற்ற நிலை கொண்டவர்களாக ஒவ்வொரு மாணவர்களும் துலங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக தேர்ச்சி மையக் கலைத்திட்டம் மிருதுதிறன்களை முதன்மைப்படுத்தியே அமுல்படுத்தப்பட்டது. மாணவர்கள் வெற்றுப் பாத்திரங்களாக பாடசாலைக்கு வருகின்ற போது அறிவுப் பொருளை அப்பாத்திரத்தில் இட்டு நிரப்புவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டும் வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள். இன்று அறிவை மட்டும் நிரப்புவதற்கு வழிகாட்டுவதால் மாணவர்களின் ஏனைய திறன்கள் குன்றி விடுகின்றன. மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டல்கள் கிடைக்கும் போது மென்திறன்கள் வளர்க்கப்படுகின்றன. கற்றல், கற்பித்தல் நுட்பங்களினூடாக மென்திறன்களை வளர்த்துச் செல்ல முடியும்.

மேலும் ஒரு மாணவன் எவ்வளவு நுண்ணறிவுடையவனாகக் காணப்பட்டாலும் மென்திறன் இல்லை எனில் அவனால் வாழ்க்கையில் வெற்றியை அடைய முடியாது. அவன் தனது சூழ்நிலைக்கு ஏற்றவாறு பொருந்தி வாழ்தல் என்பது முக்கியமானதாகும். பொருந்தி வாழ்தல் என்பது பிறர் உணர்வுகளை அறிதல், சமூக எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு நடத்தை வெளிப்பாடு, சமூக நலன், விமர்சனம் ஏற்றல் என்பனவாகும். இவற்றை வளர்ப்பதில் பாடசாலைகள் தனித்துவம் பெறுகின்றன. இவற்றுக்குப் பாடசாலைகளே வழிகாட்ட வேண்டியுள்ளன.

பாடசாலை விழாக்கள், மன்ற நிகழ்வுகள், போட்டிகள், களச்சுற்றலாக்கள், குழு வேலைகள், சமூகப் பணிகள் போன்ற பல்வேறு இணைப்பாடச் செயற்பாடுகள் மூலம் மேற்கூறிய திறன்களை வளர்க்க வழிகாட்ட வேண்டியது அவசியமாகும். இணைப்பாடச் செயற்பாடுகள் மென் திறன்களை வளர்க்கும் பிரதான ஊடங்களாகும்.

எடுத்துக்காட்டாக தொடர்பாடல் திறனை வளர்க்க வேண்டுமானால் இடம், பொருள், ஏவல் உணர்ந்து சமயோசிதமாக உரையாடும் ஆற்றல் வளர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் பாடசாலையை விட்டு வெளியேறி தொழில் தேடும் போது, தொழில் புரியும் போது இத்தொடர்பாடல் திறனைப் பிரயோகிக்க முடியும். பாடசாலையில் ஒரு தலைப்பில் உரையாற்ற வழிப்படுத்தல் - ஒரு பொருள் பற்றி உரையாற்ற வழிப்படுத்தல், பன்மொழிப் பரிவர்த்தனை, கண் தொடர்புகள், தொனி, புதிய சொற்பிரயோகம், கலகலப்பு, குறிப்பிட்ட விடயம் பற்றி தெளிவான விளக்கம் பெறல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்கள் பாடசாலையில் ஈடுபடுத்துவதன் மூலம் மிருதுதிறன்களை வளர்க்கலாம்.

மாணவர்களின் உடல், உளச்சுத்தமும் மென்திறன்களை வளர்த்துச் செல்வதில் செல்வாக்கைச் செலுத்துகின்றன. தலைமைத்துவத் திறனை வளர்த்துக் கொள்ளல் எனும் செயற்பாடானது எந்தச் செயலையும் தலைமைதாங்கி மிகச் சிறப்பான முறையில் நடத்தி முடிக்கும் ஆற்றலைக் குறிக்கின்றது. இதனை வளர்த்தெடுக்கத் திட்டமிட்ட வகையில் இணைச் செயற்பாடுகளை வழங்கி செயற்படச் செய்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவனும் செயற்பாட்டில் ஈடுபடும் போதே தன்னகத்தே பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்கின்றான்.

அந்த வகையில் அனைத்து மென்திறன்களையும் வளர்த்துச் செல்வதற்கு குழு வேலைகள், மாணவர் மன்ற நிகழ்வுகள், விழாக்கள், விளையாட்டு நிகழ்வுகள், செயற்பாட்டுடன் இணைந்த கற்றல், கற்பித்தல்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகளின் மூலம் பாடசாலைகளினூடாக மென்திறன்களை வளர்த்துச் செல்ல முடியும்.

### முடிவுரை

இன்றைய சுருங்கி வரும் உலகில் கல்வி ஒரு மூலதனமாகும். அக்கல்வியினூடான திறன்களாக மென்திறன்கள் காணப்படுகின்றன. தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன் உட்பட ஏனைய ஒவ்வொரு திறன்களும் கல்வியினூடாக புகட்டப்பட வேண்டியவையாகும். மென்திறன்களுக்கான பயிற்சிக்கு பாடசாலைகளே அடித்தளமாக அமைகின்றன.

அந்த வகையில் மாறிவரும் தொழில் உலகிற்குப் பொருந்தக் கூடிய வகையில் திறன்கள் வளர்க்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. அது மட்டுமன்றி தேவைப்பாடாகவும் உள்ளது. மாணவர் மென்திறன் விருத்தியில் பாடசாலை, ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்ற போது முக்கியமாக ஆசிரியர்கள் மென்திறன்களில் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டிய தேவையுள்ளது. காலத்தின் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் தங்களை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

திருமதி. கோமதி சிவனொளிச்செல்வன்
ஆசிரியர், யா/முத்துத்தம்பி ம.வி.



சந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் க.ஸ்ரீகமலநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டார்.

(படங்கள்:-இளவாலை செய்தியாளர்)

# அமெரிக்க வர்த்தகர்களுடன் கொழும்பு சென்ற ஹெலிகொப்டர் அவசரமாக தரையிறக்கம்

(கொழும்பு)

அமெரிக்க வர்த்தகர்களை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் ஒன்று அவசரமாக வேறொரு இடத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, குறித்த ஹெலிகொப்டர் ஹெனெகம வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மாலை தரையிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தர்கள் இருவர் மற்றும் இலங்கை வர்த்தகர்கள் சிலர் உட்பட 6 பேரை கொழும்பிற்கு அழைத்து சென்ற தனியார் ஹெலிகொப்டர் ஒன்றே இவ்வாறு அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

ஹெலிகொப்டர் பயணத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், கடுமையான மழை மற்றும் இருளான தன்மை ஹெனெகம பிரதேசம் முழுவதும் காணப்பட்டுள்ளது.

ஹெலிகொப்டர் கிரி உல்ல பிரதேசத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துள்ள நிலையில், ஹெனெகமவில் தரையிறகப்பட்டுள்ளது.

தொடர்ந்து அதனை கொண்டு செல்ல முடியாமையினால் அந்த இடத்தில் தரையிறக்கப்பட்டதாக விமானி தெரிவித்துள்ளார்.

ஹெலிகொப்டர் தரையிறக்கப்பட்ட வேளையில், அந்தப் பகுதி பொலிஸார் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். (இ-7)

# தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட அளவெட்டி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணியளவில் அளவெட்டி பிரதேச கலாசார மண்டபத் தில் வலி.வடக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி தி.தியாகச் சந்திரன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பிரதம நூலகர் அ.ஸ்ரீகாந்தலஷ்மி கலந்து கொள்வார். (இ-10)


## உளவளத் துணையாளர் பதவி

Counseling Diploma சான்றிதழ் உள்ள குறைந்தது 3 வருட உளவளத் துணையாளராகப் பணியாற்றிய அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

E-mail: senthu@eureka.lk
SOND 18/10, Wymen Road, Nallur.
T.P No: 077 224 2394 (1532)

## SUMITOMO

பாதுகாப்பானவை நம்பகரமானவை

உலகில் மிகப்பெரிய உற்பத்தி நிறுவனங்களின் ஒன்றான சுமிடோமோ ரப்பர் இன்டஸ்ரீஸினால் சுமிடோமோ டயர் ஜப்பான் மற்றும் தாய்லாந்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது.



• அதிஉயர்தரம் • அதிகூடிய தூரம் • உயர் தொழில்நுட்பம் • ஸ்திரத்தன்மை • நவீன வடிவமைப்புகள்

யாழ் நகரில் உங்கள் தேவைக்கு

பொபியூலர் மோட்டர் ஸ்டோர்ஸ்

270, ஸ்டேன்லி ரோட், யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021-222 3535, 021-222 2403 பெக்ஸ்: 021-2223535

Piccaso

V.R. VADIVETKARASAN ENTERPRISES
271, Sea Street, Colombo - 11.
Tel: 0112 434 800, 2 435 732 Fax: 2 435 731


## யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை

(05.12.2017 தொடக்கம் 28.12.2017 வரை)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதியும் 2018ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறிவித்தல் (K form).கட்டட, உடயிரிவிடல் விண்ணப்பங்களை வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் செயற்பாடுகளை இலகுவாக்கும் பொருட்டு எதிர்வரும் 05.12.2017 தொடக்கம் 28.12.2017வரை கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைக்கமைய அனைத்து வட்டாரங்களிலும் காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை நடமாடும் சேவை ஒன்றினை நடாத்த திட்டமிட்டுள்ளோம். அத்தினங்களில் தங்கள் அனைவரும் ஆதன வரி அறிவித்தல்களை பெற்றுக் கொள்ளுமாறும் தங்களால் இதுவரை காலமும் செலுத்தப்பட வேண்டிய சோலைவரி, வியாபார உரிமம், தண்ணீர் வரி என்பவற்றினை செலுத்தி சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த தங்களது ஒத்துழைப்பினை வழங்கியுதவுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ. இல. | திகதி | வட்டாரம் | | சனசமூக நிலையம் |
|---|---|---|---|---|
| 01 | 5.12.2017 | 01<br>02<br>03<br>04 | -கோட்டை<br>-குருநகர் மேற்கு<br>-குருநகர் கிழக்கு<br>-கற்திடல் | குருநகர் சனசமூக நிலையம் கடற்கரை வீதி குருநகர் |
| 02 | 6.12.2017 | 08 | -கொழும்புத்துறை | இல.429,பிரதான வீதி, கொழும்புத்துறை. (சீரடி புத்தகசாலை முன்பாக) |
| 03 | 7.12.2017, | 05<br>06<br>13 | -மத்தியூஸ்<br>-கொய்யாத்தோட்டம்<br>-சுண்டிக்குழி | கிராம அபிவிருத்தி சங்கம் ஈச்சமோட்டை |
| 04 | 12.12.2017 | 09<br>10<br>11 | -அரியாலை கிழக்கு<br>-அரியாலை மேற்கு<br>-கலைமகள் | அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம். |
| 05 | 14.12.2017 | 07 | -பாசையூர் | பங்குமண்டபம் புனிதஅந்தோனியார் ஆலயம் |
| 06 | 19.12.2017 | 12<br>15<br>16 | -நல்லூர்<br>-கைலாசப்பிள்ளையார்<br>-கந்தர்மடம் | ஜனசக்தி சனசமூக நிலையம். |
| 07 | 21.12.2017 | 14<br>17<br>18 | -புகையிரத நிலையம்<br>-வைத்தியசாலை<br>-பெரியகடை | சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க சனசமூக நிலையம். |
| 08 | 26.12.2017 | 19<br>20<br>21 | -பள்ளிவாசல்<br>-நாவாந்துறை<br>-பழையபள்ளிவாசல் | அறிவொளி சனசமூக நிலையம். |
| 09 | 28.12.2017 | 22<br>23 | -நாவாந்துறை மேற்கு<br>-நாவாந்துறை கிழக்கு | கலாஜோதி சனசமூக நிலையம். |

- ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் - (C-569)


## கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா: 37 சூரிசெவ் 7 இல்
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: B/7272

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/வியாபாரம்
தொ.இ: B/7273

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில் கட்டார்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/7274

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/கட்டார்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/7275

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 17 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: HNDM
தொ.இ: G/3915

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 37 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Diploma/ஆசிரியர்
தொ.இ: G/3943

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 22 செவ் 7 இல்
உயரம்: 164cm
தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி
தொ.இ: G/3949

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 32
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HNDA/அரச தொழில்
தொ.இ: G/3950

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




# ஊழலைக் கண்டித்து இஸ்ரேலில் ஆர்ப்பாட்டம்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் அரசாங்கத்தின் ஊழல் நடவடிக்கையைக் கண்டித்து, பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஊழலுக்கு எதிரான குழுவினரின் ஏற்பாட்டில், இஸ்ரேலின் ரெல் அவிவ் (Tel Aviv) பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு இஸ்ரேல் அரசாங்கத்தின் ஊழல் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு, பிரதமர் அலுவலகத்தை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் குற்றவியல் விசாரணையை எதிர்நோக்கியுள்ளார்.

பணம் படைத்த வர்த்தகர்களிடமிருந்து இலஞ்சம் பெற்றுக்கொள்ளுதல் உட்பட இவர் மீது இரண்டு ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

# வடகொரியா ஏவுகணை அச்சுறுத்தல் எதிரொலி ஹவாயில் அபாயச் சங்கு ஒலித்துச் சோதனை



(வோஷிங்டன்)

வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல் எதிரொலியாக பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள அமெரிக்காவின் ஹவாய் தீவில் கடந்த முதலாம் திகதி காலை அணு ஆயுத தாக்குதல் அபாய சங்கு ஒலித்து சோதனை செய்யப்பட்டது.

வடகொரியா 6 ஆவது முறையாக கடந்த செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி அணுகுண்டு வெடித்து சோதித்தது. தொடர்ந்து அந்த நாடு கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகளை சோதித்து வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் பிரதான நிலப்பரப்பில், குறிப்பாக எந்த ஒரு நகரத்தையும் தாக்குகிற ஆற்றல் வாய்ந்த 'கவாசாங்-15' ஏவுகணையை கடந்த 29 ஆம் திகதி ஏவி சோதித்தது. இது உலகளாவிய அச்சுறுத்தலாக் பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள அமெரிக்காவின் ஹவாய் தீவில் கடந்த முதலாம் திகதி காலை அணு ஆயுத தாக்குதல் அபாய சங்கு ஒலித்து சோதனை செய்யப்பட்டது.

ஹவாய் தீவில், மாதம் தோறும் சுனாமி உள்ளிட்ட இயற்கை பேரிடர்களுக்கு அபாய சங்கு ஒலித்து சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், வட கொரியாவின் எச்சரிக்கையை யொட்டி, இப்போது ஹவாயில் முதல் முறையாக அணு ஆயுத தாக்குதல் அபாய சங்கு ஒலித்து சோதனை நடத்தப்பட்டுள்ளது.

1980-களில் பனிப்போரின்போதுதான் அணு ஆயுத தாக்குதல் எச்சரிக்கை அபாய சங்கு அங்கு ஒலித்துள்ளது.

இந்த அபாய சங்கின் ஒலி மாறுபட்டதாக அமைந்திருப்பதோடு, அடுத்த கட்ட அறிவிப்பு வருகிற வரையில் பொது மக்கள் வீடுகளுக்குள் இருக்குமாறு உணர்த்துகிறது.

இதுபற்றி ஹவாய் நெருக்கடி கால மேலாண்மை நிறுவனத்தின் தலைவர் வெர்ன் மியாகி கூறுகையில், "இந்த அபாய சங்கு ஒலியின் மாறுபாட்டை மக்கள் புரிந்து வைத்துக்கொள்ள வேண்டியது மிக முக்கியம் ஆகும்" என்று தெரிவித்தார். வடகொரியா ஏவுகணையை ஏவினால், அந்த ஏவுகணை 20 நிமிடங்களில் தாக்க முடியும் என தகவல்கள் கூறுகின்றன. ஹவாய் தீவில்தான் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராணுவ தலைமையகம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காஷ்மீர் எல்லை பூஞ்ச் பகுதியில் பாக். இராணுவம் துப்பாக்கிச்சூடு



(ஜம்மு)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் பூஞ்ச் மாவட்ட எல்லைப்பகுதியிலுள்ள இந்திய நிலைகளின் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய வகையில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை பூஞ்ச் மாவட்ட எல்லைப்பகுதியிலுள்ள காரி மற்றும் கார்மாரா ஆகிய இடங்களில் உள்ள இந்திய நிலைகளின் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் சிறியரக துப்பாக்கிகளால் சுட்டும் மோட்டார் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியதாகவும், இந்திய வீரர்களும் எதிர்த்தாக்குதல் நடத்தியதாகவும் ஜம்முவில் இருந்துவரும் இந்திய பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# மனிதகுலத்தை அழிவிலிருந்து பாதுகாக்க உலகத் தலைவர்கள் முன்வர வேண்டும்

## பாப்பரசர் பிரான்சிஸ் கோரிக்கை



(டாக்கா)

மனித குலத்தை பேரழிவிலிருந்து பாதுகாக்க உலகத் தலைவர்கள் முன்வர வேண்டுமென, பாப்பரசர் பிரான்சிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரோஹிஞ்யா முஸ்லிம்களின் நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்கில் மியன்மார் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த பாப்பரசர், தனது விஜயத்தை முடித்துக்கொண்டு பங்களாதேஷிலிருந்து ரோமுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை புறப்பட்டுச் சென்றுள்ளார். இதன்போது, ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'அணுவாயுத பாவனை தொடர்பாக உலகம் சட்ட வரையறைக்கு உட்பட்டிருந்தது. தற்போது அவ்வாறான நிலைமை இல்லாத நிலையில், இது மனித குலத்துக்கு பேரழிவை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுகின்றது என்றார்.

எனவே, மனித குலத்தை பேரழிவிலிருந்து பாதுகாக்க உலகத் தலைவர்கள் முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

'ஆபத்து விளைவிக்கும் அணுவாயுதங்களைப் பயன்படுத்த முற்படுவது, பகுத்தறிவற்ற தன்மை' எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ரோஹிஞ்யா முஸ்லிம்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட பாப்பரசர், அம்முஸ்லிம்களுக்கான உரிமைகள் மதிக்கப்பட வேண்டிய அவசியம் தொடர்பாகவும் மியன்மார் இராணுவத்தினருடனான சந்திப்பின்போது இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# பேச்சுவார்த்தை அழைப்புக்கு சவுதிக் கூட்டணி வரவேற்பு

(சனா)

ஏமனின் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேஹ்வின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை, சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி வரவேற்றுள்ளது.

ஏமனில் தாக்குதல் சம்பவங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டால், சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரென்று ஏமனின் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேஹ் கூறியுள்ளார்.

இந்நிலையிலேயே, சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி வரவேற்புத் தெரிவித்துள்ளது.

தொலைக்காட்சிச் சேவையொன்றில் தோன்றி உரையாற்றிய சலேஹ், மோதலை நிறுத்தி, விமான நிலையங்களைத் திறக்க அயல் மாநிலங்களிலுள்ள சகோதரர்கள் மற்றும் கூட்டாளிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், 'ஏமனில் இது வரையில் இடம்பெற்றவை போதும். நாம் உரிய முறையில் பிரச்சினையை தீர்க்க முற்படுவோம்' எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வாரம் வரை ஏமனின் முன்னாள் ஜனாதிபதி சலேஹ்வின் கூட்டாளியாக இருந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள், ஆட்சிக் கவிழ்ப்புச் செய்கிறாரென்று அவர் மீது குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இவ்வாறிருக்க, ஏமனின் தலை நகரான சனாவில் படையினருக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் மோதல் தொடர்ந்து இடம்பெறுகின்றது. இந் நிலையில், 12 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்ததாகவும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

# ஏஞ்சலினா போன்று அழகாக ஆசைப்பட்டு அகோரமாக மாறிய ஈரான் இளம் பெண்








(நியூயோர்க்)

ஏஞ்சலினா ஜூலி போன்று அழகாக மாற ஆசைப்பட்டு 50 தடவை பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை செய்த 19 வயது இளம்பெண் அகோரமாக மாறியுள்ளார்.

ஈரானைச் சேர்ந்த இளம் பெண் சாகர் தாபர் (வயது-19) பார்ப்பதற்கு அழகாக இருப்பார்.

இருந்தாலும் அவருக்கு அமெரிக்க நடிகை ஏஞ்சலினா ஜூலி போன்று தனது முக அழகை மாற்ற வேண்டும் என விரும்பினார்.

அதற்காக அவர் தனது முகத்தை பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை செய்தார். இருந்தாலும் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை.

எனவே 50 தடவை முகமாற்று சத்திர சிகிச்சை செய்து கொண்டார். ஆனால் ஏஞ்சலினா ஜூலி போன்று முகம் மாறவில்லை. மாறாக அழகாக இருந்த முகம் அகோரமாக, அவலட்சணமாக மாறிவிட்டது. (இ-7)

# வெளிநாடு

## அமெரிக்க நகரங்களை தாக்கும்

# ஏவுகணைச் சோதனையைத் தொடர்ந்து வடகொரியா வெற்றிக் கொண்டாட்டம்



(பியாங்யாங்)

அமெரிக்க நகரங்களைத் தாக்கும் ஏவுகணைச் சோதனையின் வெற்றி விழாவை வடகொரியா கொண்டாடியது. இதில் பேரணி, வாண வேடிக்கை, நடனம் என அமர்க்களப்பட்டது.

அமெரிக்காவின் எந்த வொரு நகரத்தையும் தாக்குகிற ஆற்றல் வாய்ந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை (ஹவாசாங்-15 ரகம்) வடகொரியா கடந்த 29 ஆம் திகதி ஏவி சோதித்தது.

அந்த நாடு இதுவரை ஏவி சோதித்த அத்தனை ஏவுகணைகளையும் மிஞ்சுகிற விதத்தில் இந்த ஏவுகணை, 4 ஆயிரத்து 475 கி.மீ. உயரத்துக்கு செங்குத்தாக பாய்ந்து, 53 நிமிடங்களில் 960 கி.மீ. தொலைவுக்கு பறந்து, ஜப்பான் கடலில் விழுந்தது.

இந்த ஏவுகணை சோதனை அமெரிக்காவை மட்டுமல்லாது உலக நாடுகளையெல்லாம் திசை திரும்பிப் பார்க்க வைத்து வடகொரியா அணு ஆயுத நாடாகி உள்ளது, ஏவுகணைகளை ஏவுகிற வல்லமை படைத்த நாடாகி இருக்கிறது என ஜனாதிபதி கிம் ஜாங் உன் அறிவித்துள்ளார்.

வடகொரியாவின் ஏவுகணை வெறும் 20 நிமிடங்களுக்குள்ளாக அமெரிக்காவின் ஹவாய் தீவினை தாக்குகிற ஆற்றல் வாய்ந்தது என்பதால், அங்கு பனிப்போருக்கு பின்னர் இப்போது முதல்முறையாக அணு ஆயுத தாக்குதல் எச்சரிக்கை அபாய



சங்கு ஒலித்து சோதனை நடந்திருக்கிறது.

இதற்கிடையே வடகொரியா, நேற்று முன்தினம் பியாங்யாங் நகரில் மிக பிரமாண்டமான வெற்றி கொண்டாட்டம் நடத்தியது. அது குறித்த தகவல்களை அந்த நாடு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

வடகொரியாவின் ஆளுங் கட்சி (தொழிலாளர் கட்சி) பத்திரிகையான 'ரோடாங் சின்முன்' தனது முதல் பக்கத்தில் இந்த வெற்றி விழா கொண்டாட்ட பேரணி படத்தை பிரசுரித்துள்ளது.

பியாங்யாங் கிம்-2 சங் சதுக்கத்தில் இலட்சக்கணக்கான மக்கள் ஆர்ப்பரித்து, பேரணியாக வந்தனர். அவர்கள் ஏந்தி இருந்த ஒரு பதாகையில், "ஹவாசாங்-15 ஏவுகணை சோதனை வெற்றியை முழு மனதுடன் கொண்டாடுகிறோம். இது வடகொரியாவின் சக்தியை, வல்லமையை உலகுக்கு பறைசாற்றும்" என்ற வாசகங்கள் இடம்பெற்றிருந்தன.

மற்றொரு பதாகையில், "வடகொரியாவை அணு ஆயுத நாடாக பிரகடனம் செய்து சரித்திரம் படைத்துள்ள ஜெனரல் கிம் ஜாங் உன் வாழ்க பல்லாண்டு" என எழுதப்பட்டிருந்தது.

இந்த கொண்டாட்டத்தில் இலட்சக்கணக்கான இராணுவ வீரர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். நடனம், வாணவேடிக்கை, பேரணி என கொண்டாட்டத்தில் களை கட்டியது. வாண வேடிக்கை



கண்களைப் பறிக்கும் விதத்தில் அமைந்தது. இருப்பினும் இந்த வெற்றி கொண்டாட்டத்தில் கிம் ஜாங் உன் பங்கேற்கவில்லை. பொதுவாக இத்தகைய நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்பதில்லை என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

அதே நேரத்தில் இந்த வெற்றி கொண்டாட்டத்தில் இராணுவ தளபதிகள், ஆளுங் கட்சியின் முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கொண்டாட்டத்தின் போது கட்சியின் மத்திய குழு துணைத்தலைவர் பாக் கவாங் ஹோ உரையாற்றினார். அப்போது அவர், " நமது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை வெற்றி பெற்றிருப்பதை தொடர்ந்து, எவரும் நமது இறையாண்மைக்குள் வரம்பு மீற முடியாது" எனத் தெரிவித்தார். (இ-7)

# தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 13 பேர் பலி

(அபுஜா)

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய இரட்டைத் தாக்குதலில் 13 பேர் பலியானதாகவும், 50 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள பியு நகரில் நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. அந்நகரில் உள்ள சந்தைக்குள் நுழைந்த இரண்டு பெண் தீவிரவாதிகள் தங்களது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்தனர்.

இந்த தாக்குதலில் 13 பேர் பலியானதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





ஆனால், 18 பேர் பலியானதாக உள்ளூர் போராளி குழு தெரிவித்துள்ளது. 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாக்குதலை நடத்திய பெண் தீவிரவாதிகள் போகோ ஹராம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்றும் அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அடுக்குமாடிக் கட்டடத்தில் தீ பத்து பேர் உடல் கருகிப் பலி

## சீனாவில் துயரம்



(பீஜிங்)

சீனாவின் துறைமுக நகரான தியான்ஜென் பகுதியிலுள்ள அடுக்குமாடி கட்டடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 10 பேர் உடல் கருகி பலியாகினர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் வடக்கு கடலோர பகுதியில் அமைந்துள்ள நகரம் தியான்ஜென். துறைமுக நகரான இதன் மையப்பகுதியில் உயரமான அடுக்குமாடி கட்டடம் உள்ளது. பல மாடிகளை கொண்ட இந்த அடுக்குமாடி கட்டடத்தில் தற்போது சீரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், அந்த அடுக்குமாடி குடியிருப்பில் ஊழியர்கள் நேற்று முன்தினம் சீரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த அடுக்குமாடி குடியிருப்பின் 38 ஆவது மாடியில் திடீரென தீ பிடித்தது. கொளுந்துவிட்டு எரிந்த தீ வேகமாக அடுத்தடுத்த மாடிகளுக்கும் பரவியது.

தகவலறிந்த தீயணைப்பு படைவீரர்கள் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் தீயை அணைக்க போராடினர். இந்த தீ விபத்தில் சிக்கி உடல் கருகி 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 5 பேர் தீக்காயம் அடைந்தனர். இதையடுத்து, மீட்புப் படையினர் காயம் அடைந்தவர்கள் மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

முதல்கட்ட விசாரணையில், உள் அலங்காரப் பொருட்களில் தீப்பிடித்ததால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 2015 ஆம் ஆண்டில் தியான்ஜென் நகரில் அனுமதியின்றி பதுக்கி வைக்கப்பட்ட வெடிபொருள்கள் வெடித்ததில் 173 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கப்பலுடன் மோதி படகு விபத்து; 8 பேர் பலி!

(சியோல்)

தென்கொரியாவில் மீன்பிடிப் படகொன்றும் கப்பலொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில், 8 பேர் உயிரிழந்துள்ளதாக, கரையோரக் காவல் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இரண்டு பேர் நீரில் மூழ்கிக் காணாமற் போன நிலையில், அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவர்கள் கூறியுள்ளனர்.

தென்கொரியத் தலைநகரான சியோலை அண்டி அமைந்துள்ள கடற்பரப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது.

இரண்டு மாலுமிகள் மற்றும் 20 பயணிகளுடன் பயணித்த படகு, எரிபொருள் கொண்டுசென்ற கப்பலொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதனையடுத்து, மேற்படி படகு நீரில் மூழ்கியுள்ளதாகவும், கரையோரக் காவல் பிரிவினர் தெரிவித்தனர். மீட்புப் பணி நடவடிக்கைக்காக, 5 ஹெலி கொப்டர்களும் 19 கப்பல்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லையெனவும், கரையோரக் காவல் பிரிவினர் தெரிவித்தனர். (இ-7)

# 27 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் கை சின்னத்தில் களமிறங்குகிறது சுதந்திரக்கட்சி



(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவினால், கை சின்னத்துடன் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 27 ஆண்டுகளுக்குப் பின்னர், முதல் முறையாக அந்தச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

எதிர்காலத்தில் எல்லா தேர்தல்களையும் கை சின்னத்திலேயே போட்டியிடுவது என்றும் அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது.

சில உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கு மாத்திரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியை அமைக்கவுள்ளது. இது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு அடுத்தவாரம் கையெழுத்திடப்படும்.

ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட இணங்கியுள்ளது.

எனினும் கை சின்னத்தில் போட்டியிடுவது சாதகமற்றது என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கூட்டணியின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# மெஜிக் காட்டிய மைத்திரி!





(கொழும்பு)

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தினை நிர்மாணித்ததன் ஊடாக தன்னால் மெஜிக் காட்ட முடிந்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் மின் உற்பத்தி கட்டமைப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு உரையாற்றுகையில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த காட்சியை எப்போது பார்ப்பேன் என்பதே எனது எண்ணமாக காணப்பட்ட விடயம். 1994ஆம் ஆண்டு நான் பிரதி அமைச்சராக செயற்பட்ட போது நாங்கள் ரன்தெனிகல, ரன்டெபே பார்க்க சென்றோம்.

இரண்டு நாட்களில் இந்த நீர்த்தேக்கம் செயற்படும் எனவும், அதன் பின்னர் அனைவரும் ரன்தெனிகல, விக்டோரியாவுக்கு செல்வார்கள் என பொறியியலாளர் என்னிடம் தெரிவித்தார்.

அந்த நடவடிக்கை நிறைவடைந்து இரண்டு மாதங்களில் தேர்தல் நடத்தப்பட்டது. இதன்போது பொலநறுவையில் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதன்போது R.A.D. சிறிசேன உரையாற்றியிருந்தார். அதன் போது நான் உரையை கேட்டுக் கொண்டிருந்தேன்.

அங்கு "இவர் பிரதி அமைச்சராகி மெஜிக் பார்த்து கொண்டிருந்தார். தான் மற்றும் காமினி இணைந்து செய்த மகாவலி, விக்டோரிய ரன்தெனிகலவில் அமைத்ததனை பார்த்துக் கொண்டிருந்தார். அது இவருக்கு மெஜிக்தான் என என்னை பார்த்து R.A.D.சிறிசேன தெரிவித்தார்.

எனினும் இன்று என்னாலும் அந்த மெஜிக்கை காட்ட முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு 3.5 பில்லியன் ரூபா செலவாகும்

## மேலதிக தேர்தல் ஆணையர் தகவல்

(கொழும்பு)

முதன்முறையாக கலப்பு முறையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கு 3.5 பில்லியன் ரூபாய் செலவாகும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார். தேர்தலில் 60 வீதமானோர் தொகுதி முறையிலும் 40 வீதமானவர்கள் விருப்புத் தெரிவு முறையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இது தொடர்பில் விளக்கமளிப்பதற்காக கட்சிகளின் வேட்பாளர்களுக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டின் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 5.3 பில்லியன் ரூபாய்களே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் அதில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகை உள்ளூராட்சி தேர்தலுக்கு செலவிடப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யானையின் தந்தத்தில் தங்க மாலை 2 கிராம உத்தியோகத்தர்கள் கைது

(கொழும்பு)

யானையின் தந்தங்களைக் கொண்டு தங்க மாலையில் பாகங்களை அமைத்த இரு கிராம உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள், பொல்பிதிகம பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

32 வயது மற்றும் 42 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவர் பகுல்பொல கிராம உத்தியோகத்தராக கடமையாற்றிவருவதுடன், மற்றைய நபர் தொரவேருவ கிராம உத்தியோகத்தராக சேவையாற்றி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தங்க மாலையின் தந்தத்தின் மூலம் பாகங்களை செய்துள்ளதாகவும், சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### காரணம் சொல்லியே காலம் தள்ளுபவர்கள்!

ஏன்யா வரலை?

ஒரே மழைங்க! எங்கேங்க வர்றது!

வீட்டுக்குள்ளதானப்பா வேலை? மழைக்கும் அதுக்கும் என்னப்பா சம்பந்தம்?

மழை பெய்தா ஒண்ணும் புரியாதுங்க. ஒரே கசகசன்னு இன்னைக்கு முடிச்சிடலாங்க!

என்ன சுரேஷ்! டிக்கெட் வாங்கி வைச்சுக்கிட்டுக் கூப்பிட்டாக் கூட வரமாட்டேங்குறே! முதலிலேயே சொல்லியிருக்கலாம்ல! உனக்காக எவ்வளவு நேரம் காத்திருந்தேன் தெரியுமா தியேட்டர் வாசல்ல?

ஒரே டல் மூடு! வர முடியலை.

இப்படிச் சிறிய சிறிய விடயம் முதல் பெரிய பெரிய விடயம் வரை தாங்கள் செய்கிற தவறுகளை நியாயப்படுத்தவும் தள்ளிப் போடும் பழக்கத்திற்கு விளக்கம் தரவும் பல பேர் தயாராக இருக்கிறார்கள்.

ஏன் வேலை முடிக்கலைன்னு பாஸ் கேட்டார். பத்து நிமிடம் பிலுபிலுன்னு பிடிச்சேன். விட்டுட்டாரு என்று பெருமையுடன் தம் நண்பரிடம் தம் வாய்ச் சொல்லின் வீச்சின் மகிமையைச் சொல்வார் ஒருவர்.

இவர்களெல்லாம் எதிராளிகளின் வாயை அடக்கி விட்ட தங்களது வெற்றிகளைப் பற்றிப் பிரமாதப்படுத்திக் கொண்டிருக்கையில் உள்ளுக்குள் ஒரு மாபெரும் புதைபள்ளம் உருவாகிக் கொண்டிருப்பதை உணர்வதில்லை.

I don't want explanations: Iwant only results என்று ஓர் ஆங்கில வாசகத்தை, (எனக்கு விளக்கங்கள் தேவையில்லை வேலை ஆக வேண்டும்) ஒரு மிகப் பெரிய நிர்வாகியின் மேசையில் பார்த்து கவர்ந்து இழுக்கப்பட்டு இப்படி ஒரு வாசகத்தை வைத்ததற்கான விளக்கத்தை அவரிடம் கேட்டேன்.

இதை வைத்ததில் இருந்து நல்ல பலன். நான், காரணங்கள் சாக்குப் போக்குகளை நம்பவோ ஏற்கவோ தயாரில்லை என்பதைப் புரிந்து கொண்டு விட்டார்கள். எனவே நல்ல மாற்றம் முடியாது என்று நான் நினைத்த வேலைகளைக் கூட முடித்து வைத்து விடுகிறார்கள். மனிதர்களைப் பேசவிட்டுக் காரணங்களைக் கேட்டுக் கொண்டிருந்தால் காலமெல்லாம் அதுதான் நடக்கும் என்றார் அந்த அனுபவஸ்தர்.

காரணம் சொல்லி மற்றவர்களை அசத்தி அவர்களது வாயை அடக்கச் செய்கிறவர்கள் தங்கள் மனத்தில் எழக்கூடிய வளர்ச்சி வேதங்களையும் சாதனை எண்ணங்களையும் கூடக் காரணம் சொல்லிச் சொல்லியே ஆராரோ பாடித் தூங்க வைத்து விடுகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் காரணம் தேடும் மனம் சுய வளர்ச்சிக்குக் கூட அதே பாணியைக் கடைப்பிடிக்க ஆரம்பித்து உருப்படாமல் போகவே வழி செய்கிறது.

சும்மா காரணமே சொல்லிக் கொண்டிராமல் இனியாவது செயல் வீரர்களாக மாறும் முயற்சியில் இறங்குவது நல்லது.

லேனா தமிழ்வாணன்

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான மேலும் இரு வர்த்தமானிகள் இன்று

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது சம்பந்தமான இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களை இன்று 4 ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிடவுள்ளதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணயம் தொடர்பாக ஜனாதிபதியால் இதற்கு முன்னர் முன்வைத்த அறிக்கை மற்றும் எல்லை நிர்ணய ஆய்வுக்குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை உள்ளடக்கி அந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதாக செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஒரு வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியினாலும் மற்ற வர்த்தமானி அறிவித்தல் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சராலும் வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் காலம் மலர்ந்து விட்டது-வித்தியாரட்ன

(கொழும்பு)

இந்த ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் காலம் மலர்ந்துவிட்டது என ஜே.வி.பி.யின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியாரட்ன தெரிவித்துள்ளார். நாட்டில் ஆட்சி நடத்தி அனைத்து அரசியல் கட்சிகளும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கரிசனை கொள்ளவில்லை என அவர் தெரிவித்தார்.



தற்போதைய அரசாங்கமும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். பதுளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## பிரகீத் எக்னெலிகொட கடத்தல் புலனாய்வு அதிகாரியின் மோசடிகள் அம்பலம்!

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான 5வது சந்தேகநபரிடம் பெருமளவு பணம் மற்றும் நகைகள் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரவீந்திர ரூபசேன என அழைக்கப்படும் ரஞ்சித் என்பவரிடமே பெருமளவு பணம் மற்றும் நகைகள் உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


12 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணம் இருப்பதாக தெரியவந்துள்ளது.

திருட்டு சம்பவங்கள் காரணமாக குறித்த சந்தேகநபர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ரவீந்திர ரூபசேன இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றியுள்ளார். மின்னேரியா பொலிஸாருக்கு ரவீந்திர ரூபசேனவிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டிற்கமையவே இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன.

நவம்பர் மாதம் 7ஆம் திகதி மின்னேரியா பொலிஸாரிடம் தனது வீட்டை உடைத்து 11 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 5இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக குறித்த சிப்பாய் பொய் முறைப்பாடு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கூரையை திருத்தும் வரை வரி செலுத்த மாட்டோம்





(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தைக் கட்டட கூரை மிக மோசமான நிலையில் உள்ளதால் வியாபாரிகள் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் வியாபார நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை கூரையினை திருத்தாத வரை வரி வழங்க முடியாது என ஏதிர்ப்புத் தெரிவித்து வரி வழங்காதிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சில பகுதிகளை சீர்செய்த சாவகச்சேரி பிரதேச சபையினர், நேற்றைய வரியுடன் கடந்த காலங்களில் வழங்காத வரிப் பணத்தினையும் தருமாறு கோரினர்.குறித்த பகுதி சீர் செய்யாத கா்லத்து வரி வழங்க முடியாது..சீர்செய்த பின்னரான வரியையே வழங்க முடியும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தை வரியிறுப்பாளர் சீர் செய்த பகுதிகளை மீண்டும் தடியினால் இடித்து ஓடுகளைப் பிரித்து விட்டுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனால் தற்போது பெய்து வரும் மழையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-89)

## பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொது நூலக தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவை முன்னிட்டு தமிழோசை பட்டிமன்ற குழுவினரின் ஈழத் தமிழர்களிடையே பண்பாட்டு விழுமியங்கள் பெரிதும் பேணப்படுகின்றனவா? பேணப்படவில்லையா? எனும் தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமரன் தலைமையில் இடம்பெறும். (இ-10)

## ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முன்னாள் போராளிகள் போட்டி

### முன்னாள் முதலமைச்சர் சமரகோன் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்சியில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வடமாகாண அமைப்பாளரும், முன்னாள் வடமத்திய மாகாண முதலமைச்சருமான எஸ்.எம்.ரஞ்சித் சமரக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனை தெரிவிததார். புனர்வாழ்வு அளிக்கப் பட்ட முன்னாள் போராளி களே இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நாட்டில் இடம் பெற்ற அபிவிருத்தி தொடர்பில் தெளிவடைந்த இந்த முன்னாள் போராளிகள், பொதுஜன முன்னணியில் போட்டியிட விரும்புகின்றனர் என அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவர்களுடன் இணைந்து போட்டியிட வடக்கின் சிங்கள மற்றும் தமிழர்கள் விரும்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## முதிரா வித்துக்கள் குறும்பட வெளியீடு

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் விமல்ராஜின் முதிரா வித்துக்கள் குறும்பட வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் நடைபெறும். (இ-10)

## அம்பாந்தோட்டை பூங்கா அருகே ஒன்பது அடி நீளமான முதலை மீட்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில பிரதான வீதியிலுள்ள பூங்கா ஒன்றுக்கு அருகில் சுமார் ஒன்பது அடி நீளமான முதலையை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பிடித்துள்ளனர்.

பூங்காவுக்கு அருகில் இருக்கும் கட்டுவெள பிரதேசத்திலுள்ள ஆற்றில் இருந்து இந்த முதலை வந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மனிதர்கள் மாத்திரமல்லாது ஏனைய உயிரினங்களும் பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் 48 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரிச் சங்கம் மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இலங்கை மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். (இ-10)

# இனவாதமும் மதவாதமும் களைந்தெறியப்பட வேண்டும்

## வியாழேந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இனவாதமும், மதவாதமும் இந்த நாட்டில் இருந்து களைந்தெறியப்பட வேண்டும், தன்னைப்போல் பிறரைப் பார்க்காத, நேசிக்காத தன்மை இந்த நாட்டில் இருந்ததன் காரணத்தினாலேயே வடக்கு, கிழக்கு இன்று யுத்த வடுக்களை தாங்கி நிற்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பயனியர் வீதியில் உள்ள மதர்ஸ்கெயார் முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த கால யுத்தத்தினால் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் எமது உறவுகளின் பிள்ளைகள் அங்குள்ள வெள்ளையர்களை பின்தள்ளி பல் வேறு துறைகளில் சாதனைகளை படைத்து வருகின்றனர்.

வாய்ப்புக்கள் கிடைக்கும் போது அதனை சரியாக பயன்படுத்துகின்றார்கள், அங்கிருக்கின்ற கல்வி முறைகளை இங்கு அறிமுகப்படுத்த வேண்டும். ஒட்டுமொத்தத்தில் எமது கல்விமுறை மாற்றப்பட வேண்டும்.

நாங்கள் கல்வியால் வளர்ந்த கல்வியால் அடையாளப்படுத்தப்பட்ட சமூகமாவோம், தமிழர்களாகிய நாங்கள் கல்வியால் முழு இலங்கையையும் ஆண்டோம். தனி ஈழம் கேட்டு, வடக்கு-கிழக்கு கேட்டு இன்று அதுவும் இல்லாத நிலையில் இருக்கின்றோம்.

இங்கையில் சகல அரசாங்கத் துறைகளிலும் எமது தமிழர்கள் இருந்தார்கள், மீண்டும் நாம் கல்வியால் எமது இருப்பை நிலை நிறுத்த வேண்டும். கல்வியாலும் பொருளாதார வளர்ச்சியிலும் மட்டுமே ஒரு சமூகத்தின் இருப்பை ஒரு தேசத்தில் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

பிள்ளைகளுக்கு நாங்கள் சரியான கல்வியை வழங்க வேண்டும், மறுக்கப்படுகின்ற கல்வி பறிக்கப்படுகின்ற உயிருக்கு சமமாகும், பெற்றோர்கள் தான் பிள்ளைகளுக்கு உன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுக்க வேண்டும்.

ஒரு பிள்ளையின் திறமை சரியான முறையில் அடையாளப்படுத்தப்பட்டு அந்த துறையில் அவர் செல்ல அனுமதிக்கப்படுவாரானால் அவர் அதில் சாதனையாளராக மாற்றம் பெறுவார்.

கல்வியுடன் இணைந்ததாக ஒழுக்கமும் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட வேண்டும். இது மிக முக்கியமானதாகும். இந்த நாட்டை காலனித்துவ ஆட்சிக்குப் பின்னர் மாறி மாறி ஆண்டு வந்த, தற்போது ஆண்டுகொண்டிருக்கின்ற அரச தலைவர்கள் எல்லாம் இனவாதிகள், மதவாதிகள்.

தங்களது சுயலாபத்திற்காக இனவாதத்தினையும், மதவாதத்தினையும் விதைப்பவர்கள் அவர்கள்.

இதன் காரணமாகவே இந்த நாட்டில் அகிம்சை போராட்டம் ஆயுதப் போராட்டத்திற்குச் சென்று இன்று அரசியல் போராட்டத்திற்கு வந்துள்ளோம், இனவாதம் என்பதும் மதவாதம் என்பதும் இந்த நாட்டில் இருந்து முழுமையாக களைந்தெறியப்பட வேண்டும்.

அவ்வாறான தலைமைத்துவங்கள் உருவாக வேண்டுமானால் அதனை சிறந்த கல்வி முறையூடாக மட்டுமே சாத்தியமாகும்.

இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் உயிர்களை இழந்துள்ளோம், உடைமைகளை இழந்துள்ளோம், வடக்கு-கிழக்கில் ஒரு இலட்சத்து 26 ஆயிரம் குடும்பத்தினை தலைமைதாங்கும் தாய்மார்களை தாங்கியுள்ளது.

40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் உருவாக்கப்பட்டுள்ளனர், 11 ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகள் என யுத்த வடுக்களை நாங்கள் சுமந்து நிற்கின்றோம்.

இதற்குக் காரணம் தன்னைப்போல்பிறரைப் பார்க்காத, நேசிக்காத தன்மை இந்த நாட்டில் இருக்காத காரணமே இந்த நிலை ஏற்பட்டது.

எதிர்வரும் சந்ததியினராவது நல்ல சிந்தனையுடையவர்களாக, ஆரோக்கியமான சிந்தனையுடையவர்களாக அனைவருக்கும் பயன்தரக் கூடியவர்களாக உருவாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கிராம மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே தமிழர் சமஉரிமை இயக்கத்தின் பிரதான நோக்கமாகும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் தமிழரின் சுதேச பண்பாட்டிற்கு முன்னுரிமை அளித்து கிராமங்களில் வாழும் மக்களின் சமூக, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக தமிழர் சம உரிமை இயக்கம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் பொது அணியில் போட்டியிடவுள்ள மேற்படி இயக்கத்தின் பொதுச் செயலாளர் தா.நிகேதன், தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ். இரட்ணகுமார் ஆகியோர் யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தமிழர் சமஉரிமை இயக்கமானது எந்தவொரு தனிப்பட்ட அரசியற் கட்சி சார்ந்து இயங்கும் அமைப்பு அல்ல. இது கிராமிய மட்டத்திலிருந்து தொடங்கி தமிழ் மக்களின் வாழ்வுரிமை நலனை தமிழ் தேசிய வெளியில் நிலை நிறுத்தும் வகையில் கட்சி அரசியலைத் தாண்டிய பொது மனிதர்களால் கூட்டிணைக்கப்பட்ட இயக்கமாகும்.

பொதுமைப்படுத்தப்பட்ட கிராமிய நலன்சார் இலக்குகளை எட்டுவதே எமது முக்கிய இலக்குகளாகும். தமிழர் தாயகத்தில் தமிழரின் சுதேச பண்பாட்டிற்கு அனைத்து அம்சங்களிலும் முன்னுரிமை அளிக்கும் விதத்திலான உள்ளூராட்சியை ஏற்படுத்துதல், கிராம மக்கள் அனைவரதும் சரிநிகர் சமானமான வாழ்வியல் மேம்பாட்டுக்காக உள்ளூராட்சியை பயன்படுத்துதல், ஊழலற்ற, போதைக்கு அடிமையாகாத பிரதேசமாக இருக்கும் வகையில் சிறந்த உள்ளூர் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புதல், உள்ளூர் வளங்கள் முழுமையாக கிராமத்து மக்களின் விவசாய கைத்தொழில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பயன்படும் வகையில் உள்ளூராட்சி சட்டங்களை சிறந்த முறையில் அமுலாக்கல்.

சிறந்த கழிவகற்றல் முகாமைத்துவம் மூலம் வீதிகளில் குப்பை தேங்குவதை தடுத்தலும் டெங்கு மலேரியா போன்ற ஆட்கொல்லி நோய்களிலிருந்து மக்களை பாதுகாத்தலும், தமிழகப் பாணியிலான உழவர் சந்தைகள், அம்மாச்சி மாதிரியான பாரம்பரிய உணவகங்களை ஒவ்வொரு பிரதேச சபையிலும் உருவாக்கி விவசாயிகளினதும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுகளினதும் நலன் பேணல், இயற்கை விவசாயத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் கழிவுகளை தரம் பிரித்து மானிய விலையில் இயற்கைப் பசளைகளை வழங்கலும் கட்டாக்காலி மாடுகளை பிடித்து ஏழை விவசாயிகளுக்கு வழங்கி இயற்கை விவசாய பண்ணைகளை உருவாக்க ஊக்கமளித்தலும்,

சட்டவிரோதமாக பிற பிராந்தியங்களிலிருந்து வந்து எம்மவரின் வர்த்தகத்தை நாசம் செய்யும் மக்களின் உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் பொருட்களை விற்பனை செய்வோரை தடை செய்தல், எங்கும் எதிலும் தமிழ் என்ற அடிப்படையில் பொது மற்றும் வர்த்தக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் எம் தமிழ் பிராந்தியங்களில் தமிழுக்கு முன்னுரிமை கொடுத்து பெயர்கள் காட்சிப்படுத்தும் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்,

சுருங்கக் கூறின் பிரதேச சபை சட்டங்களை முழுமையாக அமுல்படுத்தி உள்ளூர் தமிழ் மக்களின் வாழ்வை சரிநிகர் சமானமாக சுதேச கலாசாரத்திற்கு முன்னுரிமை கொடுத்து கட்டியெழுப்புதல் என்பனவே எமது தலையாய இலக்குகளாகும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-9)

## வீட்டில் தீ! ஐவர் படுகாயம்

(கொழும்பு)

பொல்கஹவலை - பனலிய பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிறுவர்கள் உள்ளிட்ட ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பொல்கஹவலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, அப்பகுதிக்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் குழு பிரதேச மக்களின் உதவியுடன் தீயை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

மேலும், இந்த தீ விபத்து காரணமாக ஆண் ஒருவர், பெண்கள் இருவர் மற்றும் இரண்டு சிறுவர்களுமே எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொல்கஹவலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## அரசியல் வாதிகளுக்கு நிபந்தனை விதிக்கும் பாதாள உலக தலைவர்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கடுவலையில் வாக்குகளை பெற்றுக் கொள்ள பாதாள உலகத்தின் உதவி வேண்டுமாயின் நவகமுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஞ்சுள டி சில்வாவை அங்கிருந்து இடமாற்றம் செய்ய வேண்டும் என்று பாதாள உலகக்குழு தலைவர் ஒருவர் அரசியல் வாதிகளுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

இந்த பாதாள உலகக்குழு தலைவர், தான் சமயங் குழுவை சேர்ந்தவன் எனக் கூறி பிரதேசத்திலுள்ள வர்த்தகர்களிடம் கப்பம் பெற முயற்சித்துள்ளதாக கூறப்படுகிறது.

கடுவலை மற்றும் மாக்கதுரே மதுஷ் ஆகிய பாதாள உலகக்குழுக்களுக்கு இடையில் மோதல்கள் அதிகரித்து வருவதாக தெரியவருகிறது.

பாதாள உலகக்குழுக்களுக்கு இடையிலான மோதலின் பிரதிபலனாகவே கொட்டாவை ருக்மல்கம பிரதேசத்தில் சலூன் மஞ்சுளா என்ற பெண் கடந்த 30 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மஞ்சுளா, சமயங் குழுவினருடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தவர். சமயங் கொலையின் பிரதான சந்தேக நபரான அத்துருகிரியே லடியா என்பவரின் சகாவான அத்துருகிரியே பண்டா என்பவரின் கொலைக்குத் தகவல் வழங்கியவர் எனக் கூறப்படுகிறது.

மஞ்சுளாவின் சிகையலங்கார நிலையத்தில் வைத்தே பண்டா கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் சிறையில் இருந்து விடுதலையாகி வீட்டில் இருந்த போது மஞ்சுளா இனந்தெரியாத இரண்டு பேரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சித்திவிநாயகர் வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பலாலி கிழக்கு பலநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த கூட்டம் தொடர்பில் மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள 0778435608, 0770564481 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

# அழிஞ்சில்



அழிஞ்சில்தாவரமானது இலங்கையில் பொதுவாக அணிஞ்சில் என அழைக்கப்படுகிறது. இத்தாவரமானது கடும் வரட்சியை தாங்கி உலர் வலயத்தில் சிறப்பாக வளரக்கூடியது.


நன்கு உயர்ந்து வளரக்கூடியது. இலைகள் எதிரொழுங்கில் காணப்படும். இலைகளின் நீளம் 5-14 செ.மீ ஆகவும் அகலம் 2-2.5 செ.மீ ஆகவும் காணப்படுகிறது. இலையானது நீள்வட்ட வடிவமானது. கிளைகளில் சில இடங்களில் சிறுமுட்கள் காணப்படும். பூக்கள் 2செ.மீ நீளம் 1.5செ.மீ அகலம் உடையதாக காணப்படும்

இவை தனித்தனியாக இலைகளின் கணுக்களில் இருந்து உருவாகும். இப்பூக்கள் வெளிறிய மஞ்சள் நிறமுடையவை. சிறிது நறுமணமுடையவை. இதன் பழங்கள் 2x1செ.மீ அளவான சிவப்புநிறமுடைய கோள வடிவானவை. இக்கனியினுள் ஒரு விதை மட்டும் காணப்படும்.

2)பயிரிடும் முறை

ஆழமான மண்ணில்லாப் பாறைப்பகுதிகளிலும் தரிசு நிலங்களிலும் வரட்சியை தாங்கி செழிப்பாக வளரக் கூடியது. இதனை வீதியோரங்களிலும் நடலாம். விதையைச்சேகரித்து நாற்றுநட்டு வளர்ந்ததும் 5மீற்றர் இடைவெளியில் மரங்களை நடலாம்.

நடுகைக்குழி




அரைப்பங்கு மேல்மண்ணும் .அரைப்பங்கு கூட்டெருவும் இட்டு, நடுகைக்குழியினை நிரப்பவும்,அளவு - 60cmX 60cmX 60cm

3) பயன்கள்

1.இலை - கால்நடைத்தீவனமாக பயன்படுத்தப்படும், கூட்டெரு தயாரிக்கப் பயன்படும்.

2.கனி - இதனை உண்ணலாம், விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்தது.

3.விதை- விதைப் பருப்பிலிருந்து பெடுலீனிக்கமிலம், பெடுலீன் அல்டிகைட்டுபெடுலீன் மற்றும் லூபியால் ஆகியவை தனித்துப் பிரித்தெடுக்கப்படுகின்றன.

4.பூ - தேனீக்களுக்கு தேவையாகும் தேனும். மகரந்தமும். இப் பூக்களில் உள்ளது. மார்ச் மாதத்தில் தேனீக்களை இம்மரத்தில் அதிகம் காணலாம்.

5. வேர்ப்பட்டை

நாட்டு வைத்தியத்திலே பல நஞ்சுகளுக்குப் பரிகாரமாக உபயோகிக்கப்படுகின்றது ஆழிஞ்சில்வேர்ப்பட்டையை வெள்ளாட்டு நீரில் ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கிக் கொடுத்தால் பூரான் கடி முதலிய நஞ்சுக்கள் நீங்கும்.

நாட்பட்ட கடி, பாம்புக்கடி, நஞ்சாலுண்டான தாமதம் ஆகியவற்றை நீக்கும் பண்பு வேர்ப்பட்டைக்கு உள்ளது.

பாம்புக்கடிக்கு வேர்ப்பொடி மிகவும் பிரசித்தி பெற்ற மருந்து என சென்ற நூற்றாண்டில் எழுதிய நூலில் ட்ருரி குறிப்பிட்டுள்ளார்.

பெருங்குடலில் உள்ள பூச்சிகள் கூட வேர்ப்பட்டை மருந்தால் வெளியேறிடும். கழுநீரில் வேர்ப்பட்டையை அரைத்து தேனுடன் உட்கொண்டால் வயிற்றுப்போக்கும் நீங்கும்.

மற்றும் கடுமையான கீழ்வாதத்திற்கு வேர்ப்பட்டைக் குழித் தைலத்தை மேலுக்குத் தடவலாம்.

பட்டைப் பொடியை மேகப்புண், சீழ் வடியும் பெருநோய், சொறி சிரங்கு ஆகியவற்றின் மேல் தூவி குணப்படுத்தலாம்.

இவற்றைத் தவிர மேகப்பிடிப்பு, மேகப்புடைகள், மேக வெடிப்பு ஆகியவற்றைக் குணப்படுத்தும் திறனும் பட்டைக்கு உள்ளது.

குறிப்பு

அணிஞ்சில் மரத்தின் மருத்துவப்பயன்கள் மற்றும் சிறப்பியல்புகள் என்பவற்றை கருத்தில் கொண்டு வடமாகாண விவசாயத்திணைக் களத்தின் மாவட்ட விவசாய பயிற்சிநிலையங்களில் அணிஞ்சில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

தங்கராஜா கமலதீபன்
பாடவிடய உத்தியோகத்தர்
பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பணிமனை,
மன்னார்.

# விமலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் பதில் பொதுச் செயலாளர் கபிலகமகே இதனைத் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவுக்கு எதிராக உத்தியோகபூர்வமாகவும், உத்தியோகபூர்வமற்ற வகையிலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையிலேயே, விமல் வீரவன்ச தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்குகளை பிரசாரம் செய்வதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1268

### அர்ஜுன்

நம்ம சைட் அடிக்க வைப்பதும் பெண்தான்



சரக்கடிக்க வைப்பதும் பெண்தான்...


### ராம்

ஹோட்டல் ஓனர்: சேர் தினமும் பார்சல் வாங்கிட்டு போறீங்களே... அதுக்கு இங்கயே சாப்பிட வேண்டியது தானே?



Me: மன்னிக்கனும்... என்னை டாக்டர் ஹோட்டல்ல சாப்பிடக்கூடாதுன்னு சொல்லி இருக்காரு அதான்...!!!

### அஜய்



மனைவிக்கு பிடித்த மாதிரி நடந்து கொள்வது எப்படின்னு கூகுள்ல தேடினா... நெட் கட்டாயிருச்சு... இன்டர்நஷனல் புரோப்ளம் போல


### அஸ்வின்

இனிமே வீட்டுக்கு வர்ற விருந்தாளிங்ககிட்ட ப்ருட்ஸ்க்கு பதிலா



சின்னவெங்காயம் வாங்கிட்டு வரச் சொல்ல வேண்டியதுதான்... என்ன விலை விக்குது...!

### அமலன்




கணவன்: உன்னை கல்யாணம் பண்ணினதுக்கு ஒரு எருமைய கட்டியிருக்கலாம்

மனைவி: ரொம்ப நெருங்கின சொந்தத்துல கல்யாணம் பண்ணக்கூடாதுங்க

### நகுல்

நாம விரும்புற பொண்ண விட நம்ள விரும்புற பொண்ண கட்டிகிங்க...



இந்த மாதிரி பொண்ணுங்ககிட்டையும் சொல்லுங்கய்யா எந்தப் பொண்ணும் விரும்பமாட்டேங்குது, பொண்டாட்டி உட்பட....

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடமாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்

(இது கட்டுரை ஆசிரியரின் தனிப்பட்ட முன்மொழிவுகள்)

### முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் தொகுதிகள்

2012 இல் இம் மாவட்டத்தில் 92298 பேர் இருந்துள்ளனர். பிரதேச அலுவலகப் பிரிவு ரீதியாக மக்கள் தொகை விபரம் வருமாறு,

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவு- 9699

மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவு- 7177

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவு- 23824

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவு-15721

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவு- 28973

வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவு- 6904

இத்தேர்தல் தொகுதியின் மொத்த மக்கள் தொகை 92298 ஆகும்.

இம்மாவட்டம் மிகப் பரந்த பிரதேசத்தை அடக்கியதாக இருந்தபொழுதும் குறைந்த மக்கள் தொகையையே கொண் டுள்ளது. மேலும் ஒரு சில குடியிருப்புக்களைத் தவிர பெரும்பாலான குடியிருப்புக்கள் சிறிய குளக் குடியிருப்புக்களா கவும் காணப்படுகின்றன. இக்குடியிருப்புக்கள் காட்டுப் பிரதேசங்களால் தனிமைப்படுத் தப்பட்டு போக்குவரத்து வசதி குறைந்ததாகவும் காணப்படுகின்றன.


இந்த மாவட்டம் மூன்று தேர்தல் தொகுதிகளைப் பெறத் தகுதி பெற்றுள்ளது. இம் மாவட்டத்தில் ஒரு தேர்தல் தொகுதியின் சராசரி மக்கள் தொகை 30766 ஆகும். இத் தொகையின் +10 வீதம் 33842 ஆகவும் -10 வீதம் 27689 ஆகவும் இருக்கும்.

இந்த மாவட்டத்தை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மாங்குளம் என மூன்று தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கலாம்.

### முல்லைத்தீவு தேர்தல் தொகுதி

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் MU 98 முள்ளிவாய்க்கால் கிழக்கு, MU 99 முள்ளிவாய்க்கால் மத்தி, MU 100 முள்ளிவாய்க்கால் மேற்கு, MU 101 கேப்பாப்பிலவு, MU 102 வற்றாப்பளை தேர்தல் தொகுதியின் மக்கள் தொகை 26605 ஆகிய கிராம அதிகாரி பிரிவுகள் நீங்கலாக வெலிஓயாப்பிரிவு தொகுதி மக்கள் தொகை 6904. இத்தேர்தல் தொகுதிகளின் மொத்த மக்கள் தொகை 33509 ஆகும்.

இத்தொகுதியின் அண்ணளவாக 2012 இல் இருந்த இனவிகிதாசாரம் தமிழர்கள் 71.1 வீதம், சிங்களவர் 23.7 வீதம், முஸ்லிம்கள் 5.2 வீதமாகும்.




வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவில் சிங்கள மக்களே வாழ்கின்றார்கள். அண்மைக் காலத்தில் வெலிஓயாவில் ஏற்பட்ட புதிய குடியேற்றங்கள் மற்றும் இத்தொகுதியில் ஏற்பட்டு வரும் மீள்குடியேற்றங்களால் இன்றைய இனவிகிதாசாரம் 2012 இல் இருந்ததிலும் சற்று வேறுபட்டு இருக்கலாம்.

இக்கரையோரப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழில் கொக்குளாயில் இருந்து முல்லைத் தீவு வரை முக்கியமாக இருக்கிறது. யுத்த காலப்பகுதியில் கொக்குளாயில் சிங்கள மீனவர்கள் குறிப்பிடத்தக்களவு குடியேறி இருக்கின்றனர். மேலும் கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தமிழ்மக்கள் 1984 டிசெம்பரில் வெளியேறி 2012 இற்கு பின்னரே மீள்குடியேறிக் கொண்டு வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வெளியேறிய முஸ்லிம்களும் மீளக் குடியேறிக் கொண்டிருக்கின்றனர். இதனால் 2012 ஆம் ஆண்டு புள்ளி விபரத்திலும் பார்க்க இன்றைய கரைதுறைப்பற்று மக்கள் தொகை கூடுதலாக இருக்கின்றது.

| பிரிவு (புதுக்குடியிருப்பு தேர்தல் தொகுதி) | மக்கள் தொகை |
|---|---|
| புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவு | 23824 |
| கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுள் அடங்கும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| MU 98 முள்ளிவாய்க்கால் கிழக்கு கி.அ.பி | 628 |
| MU 99 முள்ளிவாய்க்கால் மேற்கு கி.அ.பி | -- |
| MU 100 அம்பலவன் பொக்கணை கி.அ.பி. | -- |
| MU 101 கேப்பாப்பிலவு கி.அ.பி | 327 |
| MU 102 வற்றாப்பளை கி.அ.பி | 1413 |
| ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுள் அடங்கும் பின்வரும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| MU 55 முத்தையன்கட்டு கி.அ.பி | 1076 |
| MU 56 கனகரெத்தினபுரம் கி.அ.பி | 340 |
| MU 57 முத்துவிநாயகபுரம் கி.அ.பி | 382 |
| MU 63 தட்டையார்மலை கி.அ.பி | 699 |
| MU 64 கணேசபுரம் கி.அ.பி | 167 |
| மொத்தம் | 29356 |

### புதுக்குடியிருப்புத் தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பரப்பும் மக்கள் தெகையும் பின்வருமாறு,

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கரிகட்டு மூலை வடக்கு வட்டாரமும் வற்றாப்பளை வட்டாரமும் முழுமையாக புதுக்குடியிருப்பு தேர்தல் தொகுதிக்குள் வருகின்றன. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருக்கும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் முத்தையன்கட்டு வட்டாரம் முழுவதும் புதுக்குடியிருப்பு தேர்தல் தொகுதியின் கீழ் வருகிறது. கரிக்கட்டு வடக்கு உட்பட அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் மேற்கு, கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் கடந்த யுத்தத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட குடியிருப்புக்களாகும். இங்கு தற்பொழுது மீள்குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கது.

### மாங்குளம் தேர்தல் தொகுதி

மாங்குளம் வடமாகாணத்தின் மையத்தில் அமைந்திருப்பதுடன் இந்நகரை வடமாகாணத்தின் பிரதான நிர்வாக மையமாகவும் பெரிய நகரமாக விருத்தி செய்யவேண்டுமென்ற கருத்து நிலவுகிறது.

இது ஒரு வளரும் நகரமாக


பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இருப்பதுடன் வரும் காலத்தில் ஒரு துடிப்பான நகராக வரும் என்பதில் ஐயமில்லை. வடமாகாண சபை இதன் அலுவலகங்களை மாங்குளத்தில் இடவமைவு செய்யத் தீர்மானம் எடுத்துள்ள பொழுதும் இன்னும் அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்நிலையில் முல்லைத் தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமையும் தேர்தல் தொகுதியை மாங்குளம் எனப் பெயரிடுவது பொருத்தமாக இருக்கும். இத்தேர்தல் தொகுதிக்குள் வரும் பரப்புக்களும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவு | 9699 |
| மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவு | 7177 |
| ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுள் அடங்கும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| MU 61 ஒட்டுசுட்டான் கி.அ.பி. | 1013 |
| MU 62 காதலியார் சமணலங்குளம் கி.அ.பி. | 784 |
| MU 69 மணவாளன் பட்டமுறிப்பு கி.அ.பி. | 429 |
| MU 70 தச்சடம்பன் கி.அ.பி. | 472 |
| MU 71 ஒலுமடு கி.அ.பி. | 689 |
| MU 72 அம்பலகாமம் கி.அ.பி. | 378 |
| MU 73 மாங்குளம் கி.அ.பி. | 1651 |
| MU 74 பனிக்கன்குளம் கி.அ.பி. | 428 |
| MU 75 திருமுறிகண்டி கி.அ.பி. | 656 |
| MU 76 இந்துபுரம் கி.அ.பி. | 992 |
| MU 123 ஒதியமலை கி.அ.பி. | 88 |
| MU 124 பெரியகுளம் கி.அ.பி. | 31 |
| MU 125 பெரிய அயித்தியமடு கி.அ.பி. | 232 |
| MU 127 பலம்பாசி கி.அ.பி. | 961 |
| மொத்தம் | 29433 |

(தொடரும்)

# இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் வன்முறைக்கு எதிரான சர்வதேச மாநாடு இன்று

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் வன்முறைக்கு எதிரான சர்வதேச தினத்தை அனுஷ்டிக்கும் மாநாடு இலங்கையில் இன்று நடைபெறவுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு பிராந்திய அமைப்புக்களின் பங்களிப்புடன் நடைபெறும் செயலமர்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

நிதி மற்றும் ஊடக அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்களமும் இணைந்து முன்னெடுக்கும் இந்த மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர, யுனெஸ்கோ அமைப்பின் ஊடகத்துறையின் மேம்பாட்டு அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் ஹை பேகர் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

பிராந்திய ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் ஆசிய பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறையை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு எதிராக நீதிமன்றம், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சிவல் சமூக பணிகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு எதிராக பதிவாகியுள்ள வன்முறை செயற்பாடுகள் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தீர்வை அடையாளம் காண்பதன் மூலம் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு எதிரான குற்றத்திற்காக தண்டனை வழங்காது போராட்டத்தை வலுப்படுத்தல் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான கட்டமைப்பை விரிவுபடுத்தல் செயலமர்வின் நோக்கமாகும். இந்த மாநாட்டில் சர்வதேச ரீதியில் 50 பேரும் உள்ளூர் முக்கியஸ்தர்கள் அடங்கலாக 150 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# மரக்கறிகளின் விலை மழையால் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் பொதுசந்தைகளுக்கு கொண்டுவரப்படும் மரக்கறி தொகைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக புறக்கோட்டை மெனிங் பொதுச்சந்தை சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக இந்த சங்கத்தின் செயலாளர் காமனி ஹந்துன்கே தெரிவித்துள்ளார்.

மேலும் தம்புளை பொருளாதார மத்திய நிலையத்திற்கும் குறைந்தளவிலான மரக்கறிகளே கொண்டுவரப்படுவதாகவும் இவ்வாறு கொண்டுவரப்படுபவை தரம் மற்றும் போசனை குறைந்தவையாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# கிழக்கின் பட்டதாரிகள் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டதை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்வேன்

## முன்னாள் முதலமைச்சர் நஷீர் உறுதி

(ஏறாவூர்)

வேலையில்லாப் பட்டதாரிகள் என்ற அடைமொழியோடு பட்டதாரிகள் வேலையின்றி இருக்கக் கூடாது என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த ஆசிரியர் தேர்வுப் பொதுப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து புறக்கணிக்கப்பட்டதாகக் கூறும் பட்டதாரிகள் முன்னாள் முதலமைச்சரை அவரது இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்து தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இதன்போது பட்டதாரிகளின் குறைகளைக் கேட்டறிந்து கொண்ட முன்னாள் முதலமைச்சர் தெரிவிக்கையில்,

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கி அவர்களது மனித வளங்களைப் பயன்படுத்துவதில் கிழக்கு மாகாண சபை எனது தலைமையிலான ஆட்சிக் காலத்தில் முன்னுரிமை அளித்திருந்தது.

அதனடிப்படையிலேயே கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் ஆசிரியர் வெற்றிடத் தகவல்கள் 6 மாத கால முயற்சியில் திரட்டப்பட்டன.

2016ஆம் ஆண்டு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் வெற்றிடங்கள் வலயக் கல்விப் பணிமனையினூடாக அவை உறுதிப்படுத்தப்பட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சு ஆகியவற்றின் உறுதிப்படுத்தலுடன் 4927 வெற்றிடங்கள் உள்ளதை ஆதாரபூர்வமாகத் திரட்டி அதனை பிரதமரிடம் சமர்ப்பித்திருந்தேன்.

அதற்கமைவாக பிரதமர் முதற்கட்டமாக 1700 பேருக்கு நியமனம் வழங்க உத்தரவிட்டார்.

அதேவேளை பிரதமரிடம் தொடர்ச்சியாக விடுத்த வேண்டுகோளின் பயனாக 5146 பேருக்கு நியமனம் வழங்க அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தது.

அதன் பிரதி பலனாக மாகாண சபைக்கு நிதியைக் கொண்டு வந்து சேர்ப்பித்து உடனடியாக 250 பேருக்கு நியமனம் வழங்கினோம்.

இவ்விடத்தில் 35 வயது கட்டுப்பாடு பல பட்டதாரிகளுக்கு நியமனத்தைத் தடை செய்திருந்தது. அதற்கும் பல முறை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து கிழக்கு மாகாணத்திற்கென விசேட அனுமதி பெறப்பட்டிருந்தது.

அந்த உச்ச வயதெல்லையுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண வயது கடந்த பட்டதாரிகளுக்காக 45 ஆகவும் மாற்றப்பட்டது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் 45 வயதைக் கடந்து அரச தொழில் ஏதும் கிடைக்காத 72 பட்டதாரிகளும் உள்ளார்கள்.

சமீபத்தில் வழங்கப்பட்ட பட்டதாரிகளின் நியமனத்திலும் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் எழுதி பல்கலைக் கழகத்தால் அங்கீகரித்த பட்டதாரிகள் ஏன் அலைக்கழிக்கப்பட வேண்டும்.

நமது நாட்டுப் பல்கலைக் கழகங்கள் தவறு விடுகின்றனவா அல்லது பரீட்சைகளில் தவறு உள்ளதா? என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்கள் இப்பொழுது இடம்பெற்று வருகின்றது.

எந்தவொரு அபிவிருத்தியும் கடந்த இரண்டு மாதங்களாக கிழக்கு மாகாணத்தில் இல்லை. எல்லாமே முடக்கப்பட்டிருக்கின்றது. மாகாணத்தில் செய்து முடிக்கப்பட வேண்டிய எத்தனையோ தேவைகள் உள்ளன.

நல்லாட்சியின் பெயரை சீர் குலைப்பதற்கும். இன உறவைச் சீர்குலைப்பதற்கும் ஏதுவாக பல கருமங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

நல்லாட்சியில் குளறுபடிகளுக்கு அனுமதிக்க முடியாது. அநீதிக்கு எதிராக நாம் குரல் கொடுப்போம்.

இதனை நல்லாட்சியின் நாயகர்களான ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் அறிவிக்கவுள்ளேன்.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரியர் நியமனங்களில் தாம் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறும் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 100 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 1749 பேர் நியமனமின்றிப் புறக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# இலங்கைக்குப் போர்க்கப்பல் விற்க தனி ஜெட் விமானத்தில் வருகிறார் ரஷ்ய ஆயுத நிறுவனத் தலைவர்

(கொழும்பு)

இலங்கை கடற்படைக்கு ஜிபார்ட் 5.1 ரக ஆழ்கடல் ரோந்துக் கப்பலை ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்யும் 135 மில்லியன் டொலர் உடன்பாட்டில் இலங்கை அரசாங்கம் இந்த வாரம் கையெழுத்திடவுள்ளது.

ரஷ்ய அரசின் பாதுகாப்பு ஏற்றுமதி நிறுவனமான Rosboronoexport நிறுவனத்தின், குழுவொன்று இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்காக இலங்கை வரவுள்ளது.

இந்தக் குழுவினர் ஏனைய ரஷ்ய பாதுகாப்பு கருவிகளை வழங்குவது குறித்தும் பேச்சுக்களை நடத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ரஷ்ய நிறுவனம்,



போர் ராங்குகள், சண்டை வாகனங்கள், போர்ப்பயிற்சி விமானங்கள், குண்டுவீச்சு விமானங்கள், விமானங்கள், உலங்குவானூர்திகள், கப்பல்கள், படகுகள், நீர்மூழ்கிகள், ஆயுதங்கள், வெடிபொருள்களையும் வழங்க முன்வந்துள்ளது.

இலங்கைக்குப் போர்க்கப்பலை விற்கும் உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்காக, ரஷ்யாவின் Rosboronoexport நிறுவனத்தின் தலைவரான அலெக்சான்டர் அலெக்சான்ட்ரோவிச் மிக்கீவ் தனது தனிப்பட்ட ஜெட் விமானத்தில் கொழும்பு வரவுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதியின் நெருங்கிய நண்பரான இவருடன் உயர்மட்ட அதிகாரிகளும், தனிப்பட்ட சிறப்பு பாதுகாப்புக் குழுவினரும் கொழும்பு வரவுள்ளனர்.

அலெக்சான்டர் அலெக்சான்ட்ரோவிச் மிக்கீவ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் பலரையும் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# இலங்கையில் இராணுவ ஆட்சி கொழும்பு பல்கலை. தகவல்

(கொழும்பு)

2020ஆம் ஆண்டில் இலங்கையின் ஆட்சி அதிகாரம் யார் கையில் இருக்கும் என்பது தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழக ஊடகப் பிரிவு ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதியாக நாட்டை நேசிக்கின்ற, படித்த, ஏகாதிபத்திய இராணுவ ஆட்சி அமைப்பை கொண்ட தலைவரே பொருத்தமானவர் என்று ஆய்வின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

கொழும்பு பல்கலைக்கழக ஊடகப் பிரிவு ஆய்வின் பெறுபேறுகளின்படி,

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஜனாதிபதியாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வருவதற்கு 38.18 சதவீதமானவர்களின் விருப்பைப் பெற்றுள்ளார்.

அடுத்த இடத்தில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ 28.64 சதவீத விருப்பை பெற்றுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவராக ஜே.வி.பி.கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அதிகளவான மக்களின் விருப்பை பெற்றுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 9.18 சதவீதமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 8.64 சதவீத விருப்பும் கிடைத்துள்ளது.

நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களை சேர்ந்த 18-75 வயதுக்கு இடைப்பட்டவர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காலநிலை அபாயம் குறித்த எச்சரிக்கை உதாசீனம் செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

காலநிலை அபாயம் தொடர்பில் சர்வதேச ஊடகங்களால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கொழும்பு ஊடகமொன்றே இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. இதன் அடிப்படையில், ஒகி சூறாவளி தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தன.

எனினும், இந்த எச்சரிக்கையை இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் உதாசீனம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒகி சூறாவளி தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் உரிய எச்சரிக்கைகளை மக்களுக்கு விடுத்திருந்தால் இழப்புக்களை குறைத்திருக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச ஊடகங்களில் வெளியான எச்சரிக்கைகளில் உண்மையில்லை எனவும், மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தது.

உலகின் பல நாடுகள் வளிமண்டல மாற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு பல்வேறு முறைகளை பயன்படுத்தி வருகின்றன எனவும் அவை அனைத்தும் இலங்கைக்கு பொருந்தாது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்திருந்தது.

சூறாவளி காற்று ஏற்பட்டால் அதனை முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடிய வசதி உண்டு எனவும் தெரிவித்திருந்தது.

எனினும், பீதியடையத் தேவையில்லை எனக் கூறாது விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுத்திருந்தால் இழப்புக்களை மட்டுப்படுத்தியிருக்கலாம் என அந்தச் செய்தியில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

## பசி தணிக்கும் பழம்!



ஒரு குறிப்பிட்ட ஊரில் பல சிறப்புகளைக் கொண்ட சுவையான பழம் ஒன்று கிடைக்கும் என்றும், அதைப் புசித்தால் நெடுநாளைக்கு பசியே எடுக்காது என்றும் ஓர் ஊரில் சூஃபி ஞானிக்கு தகவல் கொடுத்திருந்தார்கள்.

ஆனால், அந்த ஊருக்குப் போன அவருக்கு, காய்கனி சந்தையில் அந்தப் பழம் கண்களில் படவில்லை. தயங்கியபடியே பார்த்துக்கொண்டு வந்தார்.

அவருடைய தயக்கத்தை பார்த்த ஓர் இளைஞன், அவரிடம் வந்தான். "நீங்கள் எதையோ தேடுவது போல தெரிகிறது. நான் உங்களுக்கு உதவலாமா?" என்று கேட்டான்.

அவனிடம் "இந்த ஊரில் அபூர்வமான பழம் ஒன்று கிடைக்கும் என்றும், அதை உட்கொண்டால் சில நாட்கள் வரை பசியே எடுக்காது என்றும் சொன்னார்கள்.

அந்தப் பழம் கிடைத்தால் அல்லது அதன் விதை கிடைத்தால் அதை எடுத்துப் போய் பட்டினியால் வாடும் மக்கள் உள்ள பகுதியில் பயிரிட முயன்று அந்தப் பகுதி மக்களின் பசியைப் போக்க முடியுமா? என்று பார்க்கிறேன்" என்று பதில் சொன்னார் ஞானி.

இளைஞன் உடனே பரபரத்தான். "சற்று இருங்கள், வருகிறேன்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போனான். சிறிது நேரம் கழித்து வந்தான். அவன் கையில் ஒரு பழம். "நீங்கள் கேட்ட பழம் இதுதான், இந்தாருங்கள்" என்று சொல்லி அதை ஞானியிடம் கொடுத்தான்.

"இந்த ஊரில் இந்தப் பழம் நிறையவே கிடைக்கும் என்று சொன்னார்களே" என்று கேட்டார் ஞானி.

"உண்மைதான். இந்த ஊரில் இந்த பழம் நிறையதான் கிடைத்துக்கொண்டு வந்தது. ஆனால், மக்கள் சுயநலவாதிகள் ஆகிவிட்டார்கள். தாம் அனுபவிக்கும் பலனை பிற யாரும் அனுபவிக்கக் கூடாது என்ற சுயநல நோக்கில் இந்தப் பழத்தை பதுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதைப் பயிரிடும் முறையையும் மிக இரகசியமாக வைத்துக் கொண்டார்கள். என் வீட்டில் இருந்த ஒரு பழத்தை உங்களுக்காக நான் கொண்டு வந்திருக்கிறேன். பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவுவதற்காக இந்தப் பழத்தை நீங்கள் பயன்படுத்தப் போவதாக சொன்னதைக் கேட்டதும் உங்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்று எனக்கு தோன்றியது" என்று சொன்னான் அந்த இளைஞன்.

அவனுடைய செயலாலும், சொற்களாலும் நெகிழ்ந்த ஞானி, அவனை வாழ்த்தினார். "உன்னைப் போல பிறருக்காக உதவ முன்வரும் இளைஞர்கள் பெருகினார்களானால், அவர்கள் வாழும் பகுதியில் யாருக்கும் எந்தக் குறையும் இருக்காது."

## 12.2017 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1259 - பிரான்சின் ஒன்பதாம் லூயி, இங்கிலாந்தின் மூன்றாம் என்றி ஆகியோர் பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி நார்மண்டி உட்பட ஐரோப்பாவில் உள்ள பிரெஞ்சுப் பகுதிகளுக்கு ஹென்றி உரிமை கொண்டாடுவதில்லை எனவும் ஆங்கில புரட்சியாளர்களுக்கு லூயி ஆதரவு வழங்குவதில்லை எனவும் முடிவாகியது.

❖1791- உலகின் முதலாவது ஞாயிறு இதழ் தி ஒப்சேர்வரின் முதலாவது இதழ் வெளிவந்தது.

❖1918- முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் பிரான்சு சென்றார். பதவியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ஐரோப்பா சென்றது இதுவே முதற் தடவையாகும்.

❖1943- இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவின் எதிர்ப்புத் தலைவர் யோசிப் டீட்டோ "ஜனநாயக யூகொசுலாவிய அரசு" ஒன்றை தற்காலிகமாக அமைத்தார்.

❖1945- ஐக்கிய அமெரிக்கா ஐ.நாவில் இணைவதற்கு ஒப்புதல் அளித்து செனட் அவை வாக்களித்தது.

❖1967- வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்கா மற்றும் தெற்கு வியட்நாம் படைகள் மேக்கொங் டெல்ட்டா பகுதியில் வியட் கொங் படைகளுடன் மோதினர்.

❖1984- மன்னார் படுகொலைகள்: இலங்கைப் படையினர் மன்னாரில் 107-150 பொதுமக்களை படுகொலை செய்தனர்.

### பிறப்புகள்

❖1866-வசீலி கண்டின்ஸ்கி, ரஷ்ய-செருமானிய ஓவியர் (இ. 1944)

❖1889- நீலகண்ட பிரம்மச்சாரி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1978)

❖1892- பிரான்சிஸ்கோ பிராங்கோ, ஸ்பானியாவின் பிரதமர் (இ. 1975)

❖1910- ரா. வெங்கட்ராமன், 6வது இந்தியக் குடியரசுத் தலைவர் (இ. 2009)

❖1919- ஐ. கே. குஜரால், 12வது இந்தியப் பிரதமர் (இ. 2012)

❖1922-கண்டசாலா, தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகர் (இ. 1974)

❖1930- கமுகறை புருஷோத்தமன் நாயர், மலையாளப் பின்னணிப் பாடகர் (இ. 1995)

❖1949- ஜெப் பிரிட்ஜஸ், அமெரிக்க நடிகர்

❖1949-எஸ். இராமச்சந்திரன், இலங்கை மெல்லிசை, பொப் இசைப் பாடகர்

❖1963- செர்கய் புப்கா, உக்ரைனிய தடியூண்றித் தாண்டும் வீரர்

❖1964- மரிசா டோமீய், அமெரிக்க நடிகை

❖1969- ஜெய்-சி, அமெரிக்க ராப் இசைக்கலைஞர்

❖1974- அனுபமா குமார், தமிழகத் திரைப்பட நடிகை

❖1979-சமஸ், தமிழகப் பத்திரிகையாளர், எழுத்தாளர்

❖1982- நிக் வோய்ச்சிச், அவுஸ்திரேலிய மதப்போதகர்

### இறப்புகள்

❖கி.மு. 530- சைரசு, பாரசீக மன்னர் (பி. கி.மு. 600)

❖749- தமாஸ்கஸ் நகர யோவான், சிரிய மதகுரு, புனிதர் (பி. 676)

❖1131- ஓமர் கய்யாம், பாரசீகக் கவிஞர், வானியலாளர் (பி. 1048)

❖1576-இரேடிக்கசு, ஆஸ்திரிய-சிலோவாக்கிய கணிதவியலாளர், நிலவரையாளர் (பி. 1514)

❖1679- தாமசு ஆபிசு, ஆங்கிலேய மெய்யியலாளர் (பி. 1588)

❖1953-அ. வேங்கடாசலம் பிள்ளை, தமிழகத் தமிழறிஞர் (பி. 1886)

❖1976- ந. பிச்சமூர்த்தி, தமிழக எழுத்தாளர் (பி. 1900)

❖2009-விச்சிசுலாவ் தீகனொவ், சோவியத், உருசிய திரைப்பட, தொலைக்காட்சி நடிகர் (பி. 1928)

❖2014- வி. ஆர். கிருஷ்ணய்யர், இந்திய நீதிபதி, அரசியல்வாதி (பி. 1914)

❖2015- மசூர் மௌலானா, இலங்கை அரசியல்வாதி (பி 1932)

### சிறப்பு நாள்

❖கடற்படையினர் தினம் - (இந்தியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 140 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 | 80 | 800 |
| பச்சைமிளகாய் | 650 | 700 | 550 | 600 | 600 |
| தக்காளி | 120 | 140 | 100 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 60 | 40 | 60 |
| கோவா | 160 | 160 | 140 | 160 | 120 |
| கரட் | 260 | 240 | 200 | 300 | 60 |
| பூசணி | 100 | 80 | 60 | 80 | 60 |
| புடோல் | 100 | 160 | 80 | 120 | 120 |
| வாழைக்காய் | 100 | 60 | 70 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 350 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 140 | 160 | 140 |
| பாகற்காய் | 600 | 350 | 240 | 200 | 350 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 400 | 300 | 240 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 240 | 240 | 300 | 240 |
| பீற்றூட் | 200 | 140 | - | 200 | 180 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 320 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 200 | 400 | 400 |
| போஞ்சி | 250 | 200 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 120 | 120 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 60 | 40 | 50 | 60 |
| தேசிக்காய் | 50 | 100 | 80 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 80 | 60-100 | 100 |
| இராசவள்ளி | - | - | - | 300 | - |
| வெங்காயப்பூ | - | - | - | - | 260 |
| முள்ளங்கி | - | 120 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | - | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | - | 20 | 20 | 25 | 40 |
| ஈரப்பலா | - | 100 | 60 | 100 | 100 |

கீர்த்தி என்பது சம்பாதிக்க வேண்டிய ஒன்று.
கௌரவம் என்பது இழக்கக்கூடாத ஒன்று.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல்வாதிகளுக்கு தமிழ் மக்கள் மீது கருசனை இல்லை

இலங்கையில் தற்போது இருக்கக்கூடிய தமிழ் மக்களின் நிலைமை மிகவும் மோசமானதாகவுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது இன்றுவரை சாத்தியப்படவில்லை.

மாறாக தீர்வு என்ற விடயத்திலும் பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதை ஏற்றுக் கொள்வதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஆக, சிங்களத் தரப்புகள் சொல்வதற்கெல்லாம் ஆமாம் ஆமாம் என்று தலையாட்டக்கூடிய ஓர் அரசியல் தலைமையே தமிழ் மக்களுக்கு வாய்த்துள்ளது எனலாம்.

என்ன செய்வது! ஒரு காலத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்தில் எழுந்து நின்று துணிந்து பேசினர். தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்கள் ஆற்றிய உரைகள் தமிழ் மக்களிடம் தமிழின உணர்வைப் பலப்படுத்தியது.

ஆனால் சமகால நிலைமை அதுவல்ல. தமிழ் மக்கள் கேட்பது பிழை. நாம் விட்டுக் கொடுத்துத்தான் போகவேண்டும் என்பதாக எங்கள் அரசியல் தலைவர்கள் கூறுகின்றனர்.

சர்வதேசப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகின்றபோதும் தமிழ் மக்களின் அவலநிலையை எடுத்துரைப்பதாக இல்லை.

இன்றைய வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் தமிழ் மன்னர்கள் பற்றியோ தமிழர் ஆட்சி இலங்கையில் இருந்தது பற்றியோ எதுவும் இல்லை. சிங்கள வரலாற்றைப் படிப்பதுதான் தமிழ் மாணவர்களின் தலைவிதியாகவுள்ளது.

சிங்களவர்களதும் தமிழர்களதும் வரலாற்றை உள்ளபடி மாணவர்கள் அறிந்து கொள்வதாகப் பாடப் புத்தகத்தைத் தயாரிக்கும்போதுதான் இலங்கையில் எல்லா இனங்களும் சமத்துவத்துடன் வாழ்வதற்கான சூழ்நிலை உருவாகும்.

ஆனால் இங்கு இலங்கை முழுவதும் சிங்களவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்ததாகவே வரலாறு தரப்படுகிறது.

இதன் காரணமாக தமிழ்–சிங்கள மாணவர்களிடையே இன பேதம் விதைக்கப்படுகிறது. இருந்தும் இந்த நிலைமை குறித்து தமிழ் அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமோ அன்றி பாராளுமன்றத்திலோ எடுத்துரைக்கத் தெரியாதவர்களாக உள்ளனர்.

ஒருபுறத்தில் தமிழ் மக்களின் உரிமை பாதிக்கப்படுகிறது. மறுபுறத்தில் தமிழர்களின் வரலாறுகள் மறைக்கப்படுகின்றன.

இந்நிலையில், எங்கள் அரசியல் தலைவர்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

சிங்கள இராஜதந்திரி ஒருவர் கூறியது போல, தமிழ் அரசியல்வாதிகளுக்கு தமிழ் மக்கள் மீது எந்தக் கருசனையும் இல்லை என்ற கருத்துத்தான் நிறுதிட்டமான உண்மை என்பதை இப்போது முழுமையாக உணரமுடிகின்றது.

ஆம் இன்னும் ஒருசில மாதங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வரப்போகிறது. தேர்தல் காலத்தில், அப்பாடா என்ன மாதிரியெல்லாம் எங்கள் அரசியல்வாதிகள் ஆலவர்ணம் செய்வார்கள் என்பதை தமிழ் மக்கள் பார்க்கத்தான் போகிறார்கள்.

இப்படியொரு அரசியல் தலைமை நமக்கு இருக்கும்போது ஏதேனும் எங்களுக்குக் கிடைக்கும் என்று நினைப்பது மிகப்பெரும் மடைமைத்தனமாகும்.

## போயா தினத்தில் மது விற்பனை யாழ்ப்பாணத்தில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

போயா தினத்தில் சாராயம் விற்றமை மற்றும் மதுபானத்தை உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்காக 3 நபர்கள் யாழ் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் போயா தினமான நேற்றுக் காலை சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் குருநகரைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் கைது செயயப்பட்டார்.

அவரிடமிருந்து 40 சாராய போத்தல்கள் மற்றும் 43 பியர் ரின்கள் மீட்கப்பட்டன.

அதேபோன்று நேற்று மாலை சாராய போத்தலை உடைமையில் வைத்திருந்து கொண்டு சென்றதாக இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து ஒரு போத்தல் சாராயம் மற்றும் 2 கால் போத்தல் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே மேற்குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு-9)

## பிள்ளையார் கதை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை பெருவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாட்கள் இடம் பெறும்.

நாளை மறுதினம் 6 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணியளவில் சங்கடஹர சதுர்த்தி உற்சவமும் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் சதுர்த்தி உற்சவமும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கஜமுகாசூரன் சங்காரமும் இடம்பெறும். (இ-10)

++++++

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாட்கள்இடம்பெறும்.

இதில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் கஜமுகாசூரன் போர் இடம் பெறும். (இ-10,102)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்



**குழந்தைக்கு அன்னம் ஊட்ட எக்காலம் சிறந்தது?**

குழந்தைக்கு ஐந்து மாதம் முடிந்து ஆறாவது மாதத்தில் இருந்து அன்னம் ஊட்டலாம். குழந்தைக்கு அமுது ஊட்டும் நிகழ்ச்சியை ஒரு சிறிய நிகழ்ச்சியாக நடத்தி வருபவர்களுக்கும் அமுது படைக்கலாம்.

கிழமை: திங்கள், புதன், வியாழன், வெள்ளி

திதிகள்: துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி

(தொடரும்)

## அல்லைப்பிட்டி றோ.க.த.க பரிசளிப்பு, ஒளிவிழா

யா/அல்லைப்பிட்டிறோ.க.த.க.வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, ஒளி விழா மற்றும் கணினி மூலை திறப்பு விழா என்பன நாளை 05.12.2017 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் V.N. பத்மநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (மு-78)

## கட்டாக்காலி நாய்களால் அவதிப்படும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தால் உயிரிழப்பு உட்பட பல பாதிப்புக்களை தாம் எதிர்கொள்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன் இவ்விடயம் குறித்து உள்ளூராட்சி அமைச்சு கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது. இதனால் வீதிகளில் பயணிப்போரே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக புன்னாலைக் கட்டுவன், கந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், ஊரெழு, உரும்பிராய், கோப்பாய், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை உட்பட வலி வடக்கு மற்றும் வலி கிழக்கு பகுதிகளில் அதிகளவான கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இப்பகுதிகளில் உள்ள வீதிகளில் பயணிப்பவர்கள் அடிக்கடி விபத்துக்குளளாவதுடன் நிரந்தர அங்கவீனமும் அடைந்துள்ளனர். உயிர் சேதம் ஏற்படும் அளவுக்கு இந்த நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

மேலும் வீதிகளில் அவற்றின் கழிவுகள் ஆங்காங்கே காணப்படுவதால் சுகாதார சீர்கேடு மற்றும் பொதுமக்களுக்கு கிருமித்தொற்று ஏற்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் விவசாய நிலங்கள் இவற்றால் பெரிதும் பாதிப்படைகின்றன.

மேலும் வலி வடக்கில் தற்போது விடுவிக்கப்பட்ட பதிகளில் அதிகளவான நாய்கள் காணப்படுகின்றன. இராணுவ முகாம்களில் அதிகளவாக வளர்க்கப்பட்ட நாய்கள் தற்போது கட்டாக்காலி நாய்களாக அப்பகுதிகளில் திரிவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வீட்டில் நாய்களை வளர்ப்பவர்களும் கட்டி வளர்க்காமல் வெளியில் செல்ல விடுவதாலும் வீதியால் செல்வோர் நாய்க்கடிக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவில் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

USAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16 2017
வறுமையும் வன்முறையும் தாக்குவது பெண்களையே
வறுமையை ஒழிப்போம் வன்முறையை தடுப்போம்
சமத்துவமான சமுதாயத்துக்காய் ஒன்றுபட்டு உழைப்போம்.
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### நான் யார்?



நான் உடல் என்று குறுகி நிற்பதா? நான் மனம் என்று விரிந்து நிற்பதா? நான் உயிர் (ஆன்மா) என்று உயர்ந்து நிற்பதா? நான் பிரம்மம் என்று உணர்ந்து. முழுதுணர்ந்து நிற்பதா? குறுகி நின்றால் விரிவு இல்லை. விரிந்து நின்றால் குறுக்கமும் விரிவும் மட்டும் தான் உண்டு. உயர்வு இல்லை. உயர்ந்து நின்றால் விரிவும் உயர்வும் மட்டுந்தான் உண்டு உணர்வு. முழுதுணர்வு இல்லை. உணர்ந்து நின்றால் இவை அனைத்தும் உண்டு.

உடல் தோற்றமாக இருக்கிறது. உயிர் ஆற்றலாக இருக்கிறது. மனம் உணர்வாக இருக்கிறது. மனம் தான் நான் என்றால் மனம் என்ற ஒன்று தனியாக இல்லையே! உயிர்தானே மனம் என மறுபெயர் பெற்றிருக்கிறது. உயிரோ அணுக்கூட்டம். அணுவோ பிரம்மத்தின் இயக்க நிலை. எனவே, நான் பிரம்மம் என்பது தெளிவாகிறது.

நான் என்ற ஆராய்ச்சி இறையுணர்வில் முடியும். இறைநிலை உணர்ந்த தெளிவில்தான் ஆசை ஒழுங்குறும். எது எல்லாவற்றிற்கும் பெரியதோ. எதை விடப் பெரிது வேறொன்றும் இல்லையோ. அதுவே நானாக இருக்கும் போது அந்நிலை உணர்ந்த தெளிவில் தான் இருக்கும் போது எனக்கு அது வேண்டும். இது வேண்டும் என்று அவா எழ இடம் எது?

என்னை உடலளவில் குறுக்கிக் கொண்டிருந்தபோது எதெதனோடோ என்னை ஒப்பிட்டுக் கொண்டேன். அப்போது நான் பெரியவன். நான் வல்லவன். நான் செல்வன். நான் அழகன் என்றெல்லாம் தருக்கு வந்தது. ஒப்புவமையில்லாத ஒரு பெரிய பொருளாக நானே இருக்கும் நிலையை உணர்ந்து கெ?ண்டு விட்ட போது எதனோடு என்னை ஒப்பிட்டுத் தருக்குவது? ஆணவம் எழக் காரணமே இல்லாமலல்லவா போய் விடுகிறது. நானே பிரம்மம் ஆக இருக்கிறேன். பிரம்மம் எல்லாமாக இருக்கிறது என்னும்போது. எல்லாமே நானாக இருக்கும் நிலையையும். நானே எல்லாமாக இருக்கும் நிலையையும் நான் உணர்ந்து மறவாமல் இருக்கும் போது. எதன் மீது பற்று வைப்பது? என்னுடையது என்ற பற்று எழ முகாந்திரமே இல்லையே! நான் இன்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் ஒருங்கே ஒழியும் இடம் நான் யார்? நான் பிரம்மம் என்ற தெளிவுதான்.

# பொன்.விபுலானந்தன் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி முடிவுகள்

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், மறைந்த பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்தமாக, வடமாகாண கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில், ஜொலிஸ்ரார்ஸ், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், வவுனியா கழகம், பற்றீசியன், சென்றலைட்ஸ், ஸ்கந்தா ஆகிய 7 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகளின் படி

**சென்றலைட்ஸ்அணி வெற்றி**

ஐந்தாவது போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஸ்கந்தா அணி மோதியது. சென்றலைட்ஸ் அணி, முதல் கால்பாதியாட்டத்தை 22:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. அதே உத்வேகத்துடன் ஆடிய சென்றலைட்ஸ் அணி, இரண் டாவது கால்பாதியை 21:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. மூன்றாவது கால்பாதியும், சென்றலைட்ஸ் அணிக்கு இலகுவாக அமைய அதனையும், 13:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இருந்தும், நான்காவது கால்பாதியாட்டத்தில் கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்திய ஸ்கந்தா அணி, அந்த பாதியாட்டத்தை 14:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. எனினும், மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி, 67:36 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்று, வெற்றி பெற்றது.

**ஜொலிஸ்ரார்ஸ் அணி வெற்றி**

ஆறாவது போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து வவுனியா விளையாட்டுக்கழக அணி மோதியது. ஜொலிஸ்ரார்ஸ் அணி முதல் கால்பாதியாட்டத்தை 22:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. தொடர்ந்தும், அதே உத்வேகத்துடன் அபாரமாக ஆடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது கால்பாதியாட்டங்களை முறையே 22:02, 15:08 மற்றும் 18:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. முடிவில் ஜொலிஸ்ரார்ஸ் அணி, 77:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி வெற்றி**

ஏழாவது போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதியது. கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, முதல் நான்கு பாதியாட்டங்களையும், முறையே 13:07, 11:05, 19:13 மற்றும் 09:06 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி, 52:31 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

**ஜொலிஸ்ரார்ஸ் அணிவெற்றி**

எட்டாவது போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதியது. முதல் கால்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும், சிறப்பாக ஆடின,

அந்தக் கால்பாதியாட்டம் 06:06 என சமநிலையில் முடிவடைந்தது. எனினும், இரண்டாவது கால்பாதியில் தங்களது தனித்துவத்தை வெளிப்படுத்திய ஜொலிஸ்ரார்ஸ் அணி, அந்தக் கால்பாதியை 21:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. எனினும், சளைக்காது ஆடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, மூனறாவது கால் பாதியாட்டத்தை 14:14 என சமப்படுத்தியது.

தீர்க்கமானதும் இறுதியுமான நான்காவது கால்பாதியில், தனிச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜொலிஸ்ரார்ஸ் அணி அந்தச் சுற்றை 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

முடிவில் ஜொலிஸ்ரார்ஸ் அணி. 66:43 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

**பற்றீசியன் அணி வெற்றி**

ஒன்பதாவது போட்டியில் பற்றீசியன் அணியை எதிர்த்து ஸ்கந்தா அணி மோதியது. தொடக்கம் முதல் ஆட்டத்தைக் கையில் வைத்திருந்த பற்றீசியன் அணி, நான்கு கால்பாதியாட்டங்களையும் முறையே 19:05, 16:06, 21:04 மற்றும் 25:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

முடிவில் பற்றீசியன் அணி, 81:25 என்ற மொத்த புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (க-26)




2017 ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 28 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப் போட்டியில் கிளி/மகாதேவா சுவாமிகள் இல்லத்தைச் சேர்ந்த மாணவி ·ரி. கேசாளினி 50Kg ற்கு கீழ்ப்பட்ட 18 வயதுப் பிரிவில் குமித்தே போட்டியில் தங்கப் பதக்கமும் காட்டாப் போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்று மாவட்டத்திற்கும் இல்லத் திற்கும் பெருமை சேர்த்துள்ளார். தேசிய போட்டியில் இவர்க ளிற்கு ஏழு பதக்கங்கள் கிடைத்துள்ளன.

# ரண் மெசின் கோலி படைத்த புதிய சாதனை



சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 5000 ஓட்டங்களை குவித்து மீண்டும் ஒரு மைல்கல்லை விராட் கோலி எட்டியுள்ளார்.

இலங்கை - இந்தியா இடையிலான 3வது டெஸ்ட் போட்டி டில்லியில் நடைபெற்று வருகிறது. முதல் இன்னிங்சில் இந்தியா துடுப்பாட்டத்தை தெரிவு செய்து விளையாடியது.

இப்போட்டியில், இந்திய அணித் தலைவர் கோலி இரட்டைச் சதம் கடந்து விளையாடினார். அவர் 25 ஓட்டங்கள் எடுத்த போது சர்வதேச டெஸ்ட் அரங்கில் 5000 ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற மைல்கல்லை எட்டினார்.

இதையடுத்து மைதானத்தின் பெரிய திரையில் விராட் கேஹலி 5000 ஓட்டங்கள் எடுத்தார் என காட்டப்பட ரசிகர்கள் பெரிதாக சத்தமிட்டு ஆரவாரம் செய்தனர்.

இதன் மூலம் இம்மைல் கல்லை எட்டிய 11-வது இந்தியர் என்ற பெருமையை கோலி பெற்றதுடன் தனது சாதனைகளை விடாமல் துரத்தும் தென் ஆபிரிக்காவின் ஆம்லாவையும் பின்னுக்கு தள்ளியுள்ளார். (க)




2017 ற்கான கராத்தே சுற்றுப் போட்டி சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் இல்ல மாணவி கே.லக்குனா 55-60 எடைப் பிரிவில் குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார். இவருடன் பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ் நிற்பதை படத்தில் காணலாம்.

# ஷூ கழன்றதை கண்டுகொள்ளாமல் கவனமாய் பிடியெடுத்தார் லக்மல்



இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தவான் அடித்த பந்தை கட்ச் பிடிக்க போன போது ஷூவை கழற்றிவிட்டு இலங்கை அணி வீரர் லக்மல் ஓடிய சுவாரசிய சம்பவம் நடந்துள்ளது.

இலங்கை - இந்தியா இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி டில்லியில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில், இலங்கை வீரர் பெரேரா வீசிய பந்தை இந்திய துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் ஸ்வீப் ஷொட் அடிக்கப்போக பந்து மேலே எழும்பியது.

இதையடுத்து பந்தை பிடிக்க இலங்கை வீரர் லக்மல் ஓடினார். அப்போது அவரின் ஷூக்களில் ஒன்று கழன்று ஓடியது.

ஆனால் அதை பொருட்படுத்தாத லக்மல் பந்து மீதே கவனம் செலுத்தி கட்சை சரியாக பிடித்து அசத்தினார்.

இதை பார்த்த இலங்கை வீரர்கள் அனைவரும் ஜாலியாக சிரித்து மகிழ்ந்தனர். (க)

# வசைபாடுவதில் வல்லவர்கள் நாங்களா? அவர்களா?

## ஸ்மித் கேள்வி



அவுஸ்திரேலிய வீரர்கள் குறித்து இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் ஆண்டர்சன் கூறிய கருத்துக்கு பதிலடி கொடுத்துள்ளார் அவுஸ்திரேலியா அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித்.

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் கடந்த சில தினங்களுக்கு முன் பத்திரிகை ஒன்றில் அவுஸ்திரேலிய அணி வீரர்கள் எதிரணி வீரர்களை கிண்டலடித்து வம்புக்கு இழுத்து வசைபாடு வதில் வல்லவர்கள் என பேசியிருந்தார்.

அடிலெய்டில் ஆஷஸ் கோப்பையின் இரண்டாவது டெஸ்ட் போட்டி தொடங்கவுள்ள நிலையில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித் செய்தியாளர்களை சந்தித்து பேசிய போது,

'பிரிஸ்பேனில் நடந்த முதலாவது டெஸ்டில் நாங்கள் சரியான உத்வேகத்துடன் விளையாடினோம், அதே போன்று தொடர் முழுவதும் செயற்படுவோம்.

களத்தில் நாங்கள் வரம்பு மீறி நடப்பதில்லை. ஆண்டர்சன் எங்களை இப்படி சொல்வது மிக வேடிக்கையாக உள்ளது.

உண்மையாக சொல்ல வேண்டுமென்றால் வம்பிழுத்து கிண்டலடிப்பதில் அவர் தான் மிகவும் மோசமானவர்.

2010-ஆம் ஆண்டில் ஒரு போட்டியின் போது என்னிடமே கோபமூட்டும் வகையில் நடந்து கொண்டார் என தெரிவித்துள்ளார். (க)

## யாழில் போலி விமா...

டுள்ளது.

இந்தியாவிற்கு செல்வதற்கான 3 விமான பற்றுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாண கோவில் வீதியில் இயங்கி வந்த முகவரகம் ஒன்றின் உதவியினை நாடியுள்ளார்.

விமான பற்றுச்சீட்டினை வழங்குவதற்காக குறித்த முகவரகத்தினால் முற்பணமாக 45 ஆயிரம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

இதன்படி, அவர் 45 ஆயிரம் ரூபாயுக்காக வங்கி காசோலை ஒன்றினை வழங்கியுள்ளார்.

கடந்த மாதம் குறித்த காசோலையூடாக அந்த முகவர் நிறுவனத்தின் உரிமையாளர் பணத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இதன் பின்னர் மீண்டும் முகவர் நிறுவனம் ஊடாக பணம் கோரப்பட்ட நிலையில், 82 ஆயிரம் ரூபாயுக்காக காசோலை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த காசோலையினை வங்கி ஊடாக பணத்தினைப் பெற்றுக் கொள்ளாமல் வேறு ஒருவரிடம் கொடுத்து, குறித்த முகவர் நிறுவன உரிமையாளரின் பணத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

பணத்தினைப் பெற்றுக் கொண்ட பின்னர் இந்தியாவிற்கான விமான பயணத்திற்கான 3 போலி பற்றுச்சீட்டினை வழங்கியுள்ளார்.

குறித்த போலி பற்றுச் சீட்டினை கொண்டு சென்று இந்திய தூதரக அதிகாரிகளிடம் சென்ற போது அது போலி பற்றுச்சீட்டு என்பது தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குறித்த முகவர் நிறுவன உரிமையாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது, அது போலி விமான சீட்டு என்று தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பணத்தினை மீள கையளிக்க மாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார். இதனால் பாதிக்கப்பட்டவர் நேற்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் சென்று குறித்த முகவர் நிறுவன நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த முகவர் நிறுவன உரிமையாளரை கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (மு-1)

## தமிழ்த் தேசிய மக்கள்...

கையுடைய ஆதரவுடன் இணைந்து செயற்பட போவதாக அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது இப் பொது எதிரணியின் சின்னமாக தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னம் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில் அச் சின்னத்தில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இது விடயம் தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி மணிவண்ணனை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது,

இவ் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சின்னமான சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிடவுள்ளது. இதில் வடக்கு கிழக்கை சேர்ந்த பொது அமைப்புக்களுடன் இணைந்தே போட்டியிடவுள்ளோம். எமது கொள்கையில் இருந்து நாம் விடுபட போவதில்லை. எனவே தான் சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிடப்போகின்றோம்.

மேலும் எமது கொள்கையை ஏற்று எமது கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதற்கு எவர் தயாராக இருந்தாலும் அவர்களையும் இணைத்துக்கொண்டு நாம் செயற்பட தயாராகவுள்ளோம் என தெரிவித்துள்ளார். (மு-4)

## கொக்குவில் எரிபொருள்...

னெடுக்கும் வரை இந்த எரிபொருள் நிலையத்தின் குறித்த பகுதி எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில், எரிபொருள் நிரப்பிக் கொண்டு சென்ற கார் ஒன்று பழுதடைந்தமையையடுத்தே, குறித்த எரிபொருள் நிலையம் தொடர்பில் மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் முகாமையாளர் மற்றும் பணியாளர்களுடன் பிரதேச மக்கள் வாக்குவாதத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் கடந்த சில நாட்களாக வடக்கில் பெய்துவரும் மழையினால், நிலக்கீழ் எரிபொருள் தாங்கியில் நீர் கலந்திருக்கலாம் என முகாமையாளர் தெரிவித்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (மு-1)

## பொலிஸாருக்கு...

எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் பொலிஸாருக்கு எதிராக பொலிஸ் சேவை ஆணைக்குழுவில் 26 முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டு அதில் 20 முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. மிகுதி 6 முறைப்பாடுகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த வருடம் நடப்பாண்டில் பொலிஸாருக்கு எதிராக 48 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு அதில் 39 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. ஏனையவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால் பொதுமக்களுக்கு பொலிஸாரால் ஏதாவது அநீதிகள் இழைக்கப்பட்டால் அது தொடர்பாக முறையிட்டு அவற்றுக்கு நியாயம் தேடும் அளவு வடக்கு மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு காணப்படவில்லை.

அதற்காக தற்போது பிரதேச செயலகங்கள் தோறும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருகிறது.

பொலிஸாரால் பொதுமக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் பொதுமக்கள் அது தொடர்பாக முறைப்பாடுகளை பதிவு செய்து தமக்கான நீதியான தீர்வை பெற்றுக்கொள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழு உதவி செய்து வருகிறது.

அந்த வகையில், பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் மீது பொலிஸார் செயற்படாமை, பொலிஸார் பொதுமக்களை தாக்குதல் மற்றும் அடித்தல், பொலிஸார் பொதுமக்களை துன்புறுத்தல், அதிகாரத்தினை முறைகேடாக பயன்படுத்துதல் அல்லது துஷ்பிரயோகம் செய்தல், பக்கச்சார்பாக நடந்து கொள்ளுதல் அல்லது பாரபட்சம் காட்டுதல், சட்டவிரோதமாக கைது செய்தல் அல்லது தடுத்து வைத்தல், பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி காவலில் வைத்தல், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தல், காவலில் இருக்கும் போது துன்புறுத்தல் அதனால் ஏற்படும் இழப்புக்கள், பொலிஸ் அலுவலர் அல்லது பொலிஸ் வாகனம் தொடர்புபட்ட விபத்துக்கள் அல்லது மரணம், பொலிஸ் நடவடிக்கையின் போதான துப்பாக்கிப் பிரயோகம், சட்டத்தை மீறும் பொலிஸாரின் செயற்பாடுகள், விசாரணைக்கு தேவையான ஆவணங்கள், பதிவேடுகளை தேவையான போது பார்வையிடவும், பொலிஸ் காவலில் இருக்கும் ஆட்களை சோதனை செய்வதற்கும் அவர்களை விசாரணை செய்வதற்கும் பொலிஸ் அதிகாரிகளை சந்திப்பதற்கும் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்காமல் இருத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறையிடலாம்.

முறைப்பாடு பதிவு செய்யப்படும் பட்சத்தில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை யாழ்.மாவட்ட செயலகத்தில் அறை இல. 55க்கு நேரடியாக சென்று தமது முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்ள முடியும், அல்லது 0215107722 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற முடியும் எனமேலும் தெரிவித்தார். (மு-9)

## பெப்ரவரி 10ம் திகதி...

சனிக்கிழமை அதாவது பெப்ரவரி 10இல் இடம்பெறவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் வைத்து இவ்வாறு தெரிவித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (மு-1)

## ஐ.நாவின் மூவரணி...

இலங்கைக்கு இன்று வரவுள்ள ஐ.நாவின் மூவரடங்கிய குழு, சிறைச்சாலைகள், பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட தடுப்பு நிலையங்களுக்குச் சென்று தகவல்களைத் திரட்டவுள்ளது.

ஐ.நாவின் விசேட நிபுணர் பப்லோ டி கிறீவ அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது, சுயாதீனத் தன்மை, வெளிப்படைத் தன்மையுடன் காணாமற்போனோர் அலுவலகத்திற்கு ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். இந்த நிலையிலேயே மூவரடங்கிய குழு, இலங்கைக்கு வருகைதரவுள்ளது.

அத்துடன், உளவியல் குறைபாடுள்ளவர்கள் மற்றும் இடம்பெயர்ந்துள்ளவர்களை சந்திக்கவுள்ள இந்தக் குழு, நேரடித் தகவல்களை திரட்டவுள்ளது.

இன்று நாட்டை வந்தடையவுள்ள இந்தக் குழுவினர் எதிர்வரும் 15ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருக்கவுள்ளதாக ஐ.நாவின் உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, மேல், வடமத்திய, தென் மற்றும் மத்திய மாகாணங்களுக்கும் விஜயம் செய்யவுள்ள இந்தக் குழுவினர், அரச அதிகாரிகள், சிவில் அமைப்புக்களையும் சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளனர்.

விஜயத்தின்போதான பூர்வாங்க கண்காணிப்புத் தொடர்பில், எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள ஊடக சந்திப்பில் தெளிவுபடுத்தப்படவுள்ளது.

இந்த விஜயத்தின்போது திரட்டப்பட்ட தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையை அடுத்த வருடம் செப்டம்பர் மாதம் இந்தக் குழு, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளது. (மு-1)

## உதய சூரியன்...

களமிறங்கும்.

எதிர்வரும் 18ஆம் திகதி பொது கூட்டமைப்பின் வேட்புமனுத்தாக்கல் நடைபெறும் என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் நேற்று நண்பகல் அவருடைய வீட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆனாலும் கூட இத் தேர்தல் வடக்கு கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரையில் தமிழரசு கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. இவ்வாறு தமிழரசு கட்சி போட்டியிட்டு வெல்லுகின்ற பட்சத்தில், அரசியல் சாசனம் தொடர்பான கொண்டுவரப்பட்ட இடைக்கால அறிக்கையையும், மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்ற பிரசாரத்தை செய்வதற்கு அவர்கள் இத் தேர்தலை பயன்படுத்தக் கூடும்.

அந்த வகையில் இவ்வாறான பிரசாரத்தை தடுப்பதற்கும், இடைக்கால அறிக்கையினை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை காண்பிப்பதற்கும், வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளை திறம்பட நடத்துவதற்காகவும் தமிழரசு கட்சிகளுக்கு எதிரான அணி ஒன்று உருவாவது அவசியமாகும்.

தமிழரசு கட்சியை தோற்கடிப்பதன் ஊடாக, தமிழ் தேசியம் என்பது பாதுகாக்கப்படுமாக இருந்தால் அதற்கான பலமான கூட்டணி உருவாக வேண்டும். அதற்கான வியூகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

சமூகத்தில் உள்ள பல அமைப்புக்களிடம் வெவ்வேறு கருத்துக்கள் உள்ளன. எல்லோரையும் அணிதிரட்ட வேண்டும். கொள்கையின்படி அணிதிரட்டும் போது, அது மக்கள் மத்தியில் பிரபல்யமான தந்தை செல்வாவால் முன்வைக்கப்பட்ட, எல்லோராலும் ஒரு காலகட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, உதய சூரியன் சின்னம் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இருந்த போதும் கொள்கை ரீதியில் நாங்கள் இன்னும் ஒன்றுபட்டுத்தான் இருக்கின்றோம். அந்த கொள்கைகளில் எந்தவிதமான வித்தியாசங்களும், மாறுபாடுகளும் எங்களுக்குள் கிடையாது.

நாங்கள் முன்வைத்த கொள்கைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியும் ஏற்றுக் கொண்டுள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் உருவாக்குவதையும், உயர்மட்ட அரசியல் குழு ஒன்றினை நிறுவுவதையும், அக் குழுதான் முடிவுகளை எடுக்கும் என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அந்த வகையில் பரந்துபட்டவர்களை ஓரணியில் திரட்டுவதற்கு இதுவே உகந்த நடவடிக்கையாக இருக்கும் என்பது எங்களுடைய கருத்தாக இருக்கின்றது. இதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக் கொண்டால் நாங்கள் முன்னேற முடியும்.

இதுதவிர எமக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையில் கொள்கை தொடர்பான கருத்து பேதங்கள் எதுவும் இல்லை. எதிர்வரும் 18ஆம் திகதிதான் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளது. அதுவரைக்கும் எமக்கு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு போதுமான காலம் உள்ளது என்றார். (மு-4)

## புதையல் தோண்...

சுற்றிவளைப்பு மேற்கொண்ட பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது அவர்கள் பயன்படுத்திய உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (மு-1)

## இ.போ.ச பேருந்து...

பேருந்து நடத்துநரும், சாரதியும் கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு சந்தேகத்தில் 5 பேரைக் கைது செய்துள்ளோம். அவர்கள் 25 வயதுக்கு உட்பட்டவர்கள்.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் குற்றத்துடன் தொடர்புடையவர்கள் என்பது தெரியவரின் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெளி மாவட்டங்களுக்கு இடையில் பணியில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் சில மாதங்களாகத்தொடர்ந்து கொண்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (மு-1)

## ஊடகவியலாளர்...

கொண்டிருந்த போது அவரது வாகனத்தை மறித்த இனந்தெரியாத நபர்கள் இருவர் அவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் முச்சக்கர வண்டியில் வந்து தாக்குதல் மேற்கொண்டதாகவும் இதனைத் தடுக்க முற்பட்டவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (மு-78)

## தமிழ் தேசிய கூட்ட...

கட்சிகளில் ஒன்றான இலங்கை தமிழரசுகட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவது மற்றும் ஆசனம் பங்கீடுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை தமிழரசுகட்சியின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்றது.

சுமார் 5 மணித்தியாலங்கள் வரையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பின் 3 பங்காளி கட்சிகளுடனான இச் சந்திப்பில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது எவ்வாறான வேட்பாளர்களை களமிறக்குவது என்பன போன்ற விடயங்கள் பேசப்பட்டிருந்தன.

இவற்றில் 80 வீதமான விடயங்கள் பேசி முடிவு எட்டப்பட்டுள்ளன. ஏனைய 20 வீதமான விடயங்கள் தொடர்பாக நாளை மீண்டும் இடம்பெறவுள்ள சந்திப்பில் பேசி முடிவு எட்டப்படும். அதன் பின்னர் மக்களுக்கு பகிரங்கமாக எமது நிலைப்பாடு அறிவிக்கப்படும்.

மேலும் எம்முடன் இணைந்து இத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னாள் போராளிகள் உட்பட சில இயக்கங்களும் கட்சிகளும் எம்முடன் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவு ஒன்று விரைவில் எடுக்கப்பட்டு மக்களுக்கு அறிவிக்கவுள்ளோம்.

மிக முக்கியமாக பெண்களின் பிரதிநிதித்துவம் பூரணப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் இளைஞர்களில் வினைத்திறன் மிக்க வேட்பாளர்களை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

அந்த வகையில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது பலமான ஓர் அணியாக போட்டியிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)

## யமஹா வழங்கும்...

## மாபெரும் வாகன சந்தை - 2017

பழையதை கொடுத்து புதியதை எடுத்துச் செல்லுங்கள் உங்களிடம் உள்ள அனைத்துவிதமான (Yamaha, Honda,Hero, TVS, Bajaj) பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய "யமஹா" மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு உரிமையாளராகுங்கள்.

YAMAHA RAY-ZR



இடம் – நல்லூர் பின் வீதி
(றியோ ஐஸ்கிறீம் அருகில்)

**டிசெம்பர் 08ஆம், 09ஆம் திகதிகளில்**

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

மாபெரும் விலைக்கழிவு ரூபா 5000/- முதல் 50000/- வரை



தொடர்புகட்கு :-
0776623824 / 021 222 4040
டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-568)



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-560)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



## சீரடி பாபா யாத்திரை

நாட்கள் 5, ஆரம்பம் - 24.12.2017
சீரடி - 2 நாள், சனி சிங்கநாப்பூர், சென்னையில் ஒருநாள் சொப்பிங், உணவு, போக்குவரத்து மற்றும் அனைத்துச் செலவுகளும் உட்பட... விபரம் கேட்டறிக!

**தொடர்புகளுக்கு : கலாநிதி ஸ்ரீறெங்கநாதன்**
**0777 680 102**

(C-567)



ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

## IELTS

IELTS Life skills UK

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

ஆலோசனைகளுக்கு 777173517 யாழ்ப்பாணம் 0212224403

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

நெல்லியடி 021226 2470 | சாவகச்சேரி 021227 0775 | சுன்னாகம் 021224 1970 | கிளிநொச்சி 021228 5655

www.itdmi.com/english

(C-585)



## உதவியாளர் தேவை

சமையல் தவிர்ந்த ஏனைய வீட்டு வேலைகள் செய்வதற்கு தங்கி இருந்து பெண் உதவியாளர் தேவை.
35 - 55 வயதிற்குட்பட்டவர்கள்.

**தொடர்பு : 077 872 5251**

(1561)



## எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

(1394)

**எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
என்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி என்: 0776389356, 0777153571


### யாழைச்...

கைது செய்யப்பட்டார்.

அவர் குற்றத்தை ஏற்றுக் கொண்ட தன் அடிப்படையில் 10 ஆயிரம் ரூபாய் தண டம் விதித்து நீர் கொழும்பு நீதிவான் உத்தரவிட்டார். அவ ரால் எடுத்துவரப் பட்ட 19 இலட்சத்து 56 ஆயிரத்து 560 ரூபாய் பெறுமதி யான 355 கிராம் எடையுடைய தங்கத்தை அரசுடமையாக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார் என சுங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரி வித்தார். (மு-1)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

# அமரர் தைலான் காமராஜ்

(ஐங்கையன் சுவையூற்று உரிமையாளர்
முறிகண்டீஸ்வரர் ஆலய ஸ்தாபகரும் தலைவரும் தர்மகர்த்தாவும்)



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 15 | 06 |
| 12 | 09 |
| 1966 | 2017 |

அருளுருவாய் பதுளைப்பதி தன்னில் அவதரித்த அருட்கவியே!
கனகாம்பிகைக் குள மண்ணின் மைந்தனே
இரக்கத்தின் இருப்பிடமாய் இருந்தீரே
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீரே
பண்புள்ளோரை பல காலம் வாழ விடமாட்டான் இறைவன்
என் பதை உங்களது மறைவு உறுதி செய்ததுவோ
செய்த பணிகள் காணும் என சென்றுவிட்டீரோ
முருகண்டி ஈஸ்வரனிடம்
தாங்க முடியவில்லை எம்மால் உங்களது இழப்பை
பாரினிலே எப்போது வந்துதிப்பீர் திரும்ப

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 04.12.2017 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலும் அன்னாரின் இறந்த செய்தி கேட்டு உடனே ஓடி வந்து எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோர், உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு மூலம் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 26, கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

T.P:077 056 9794 - குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.